
கோகுலம்

GOKULAM

மார்ச் 85 ரூ.2





பாரதப் பிரதமர்



கோகுலம்

மலர்—3 இதழ்—2 1985 மார்ச் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-


அருமைச் சிறுவர் சிறுமியரே,

பல லட்சக்கணக்கான மக்களின் பிரார்த்தனை பலித்து விட்டது! நம் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் வியத்தகு முறையில் குணமடைந்து திரும்பியிருக்கிறார். மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிறார். நாட்டுக்கும், மொழிக்கும், கலைக்கும் அவர் தொடர்ந்து தொண்டாற்ற அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் அருளும்படி இறைவனை வேண்டுவோம்.

சட்டமன்ற மேலவைத் தலைவராக இருக்கும் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது குழந்தைப் பருவத்தைப் பற்றி இந்த இதழில் எழுதியிருக்கிறார். ஆரம்பப் பள்ளியில் கூட அதிக நாள் படிக்காத அவர், ஏராளமான சிறந்த புத்தகங்களை எழுதியிருக்கிறார். சாகித்ய அகாதமியின் பரிசையும் பெற்றிருக்கிறார். பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டத்தையும் பெற்றிருக்கிறார். தேச விடுதலைக்காக அடிபட்டும் உதைபட்டும் சிறையிலே இருந்தும் பல வகையிலே தியாகங்கள் செய்திருக்கிறார். அவரது தேசப்பற்றும் விடா முயற்சியுமே இன்று தமிழகத் தலைவர்களில் ஒருவராக அவரை நாம் மதிக்கும்படி செய்திருக்கின்றன.

திருக்குறள் புதிர் சென்ற இதழுடன் நிறைவடைகிறது. கூடுமானவரை படங்கள் போட முடிந்த குறள்களுக்கெல்லாம் படங்கள் போட்டுவிட்டோம். இந்த இதழிலிருந்து சித்திரப் புதிர் தொடங்குகிறது.

—அழ. வள்ளியப்பா



இந்த இதழ் எழுத்தாளர்கள்



மலர்வண்ணன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



சி. கே. [illegible]



எம். [illegible]

பிருந்தாவனக் கவிஞர்கள்



அ. கலைச்செல்வன்



அருண் உடையார்




டி. பாஸ்கர்



ஆர். உஷா



ஜெ. ரங்கநாதன்



செ. செந்தில் வேல்

இளம் இரசிகன் - அட்டையில்

படத்தில் இருக்கும் பிரஷாந்த் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் ரசிகர்களிலேயே மிகவும் இளையவன் என்று கூறலாம்.

இரண்டே வயதான பிரஷாந்த் பாலமுரளியின் குரலை எங்கு கேட்டாலும் உடனே அடையாளம் கண்டுகொண்டு 'பாலமுரளி! பாலமுரளி!' என்று குதிக்கிறான்.

அவன் அழுதாலோ, அடம் பிடித்தாலோ பாலமுரளிகிருஷ்ணாவின் பாடல்களை வைத்தால் போதும், உடனே சமாதானம் ஆகிவிடுவான். இரவு உறங்குவதற்குப் படுக்கையும், தலையணையும் இருக்கிறதோ, இல்லையோ பாலமுரளி கிருஷ்ணாவின் பாடல்கள் கண்டிப்பாக இருக்க வேண்டுமாம் பிரஷாந்திற்கு.

— ஏ. எஸ். திவாகர்

வண்ணப்படம்: ஏ. வி. பாஸ்கர்



என்ன என்ன பொருள்கள்?

இந்தப் படத்தில் மொத்தம் 42 பொருள்கள் உள்ளன. கண்டுபிடித்து ஒரு தாளில் எழுதிக் கொள்ளுங்கள். 15 நிமிடங்கள்தான்!

எழுதியவற்றை 18ஆம் பக்கத்தைப் புரட்டிச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

—தோ.



அரச தண்டனை



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

முன் காலத்தில் மகத நாட்டை காரிபுத்திரன் என்பவன் ஆட்சி செய்தான். அவனுக்கு விபவன் என்றும் விபாண்டன் என்றும் இரண்டு மந்திரிகள் இருந்தார்கள்.

விபவன் தர்மவழிப்படி நடப்பான். அரசன் கொடுக்கும் ஊதியத்தில் தான தர்மங்கள் செய்வான். மிச்சத்தை வீட்டின் செலவு போக அழகான பெட்டியில் சேமித்து வந்தான்.

விபாண்டன் அதிகச் செலவு செய்யப் பழகிக் கொண்டான். வருமானம் போதாமல் தனக்கு உட்பட்ட பகுதியில் அதிக வரி விதித்தான். வரியைக் கட்டாமல் தயங்கினால் மக்களுக்கு அதிக அளவில் தண்டனை கொடுப்பான். தனக்கு எதிராக யாரும் அரசனிடம் செல்லமுடியாமல் தடுப்பான்.

விபவன் வீட்டில் வரவரச் செல்வம் வளர்ந்து கொண்டே சென்றது. விபாண்டனுக்குச் செலவுக்குப் போதாமல் திண்டாடினான். விபவன் மீது அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. விபவன் செய்யும் தானங்களையும், தன்னுடைய ஆட்களை விட்டு வாங்கச் செய்து அதையும் செலவு செய்தான்.

விபவன் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானான். பிழைக்க மாட்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட விபாண்டன் ஓடோடி வந்தான். விபவனுக்கு உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. விபவன் விபாண்டனை நோக்கி, ''சகோதரனே, நான் சிறிது நேரத்தில் மாண்டுவிடுவேன். என்னுடைய பிள்ளைகள் விவரம் அறியாதவர்கள். அவர்களை வளர்த்து அவர்கள் ஆளானவுடன் இந்த மூன்று பெட்டிகளில் உள்ள பொருள்களை அவர்களிடம் ஒப்படைத்துவிடு. நாலாவது பெட்டியில் உள்ள பொருளை அவர்களை வளர்ப்பதற்காக நீ எடுத்துக் கொள். இந்த நான்கு பெட்டிகளின் சாவிகளும் ஸ்வாமி பீடத்தில் இருக்கின்றன'' என்று கூறினான். சிறிது நேரத்தில் விபவன் இறந்து விட்டான்.

நான்கு பெட்டிகளையும் சாவிகளையும் ஒருவருக்கும் தெரியாமல் விபாண்டன் தன் வீட்டிற்குக் கொண்டு சென்றான். சில நாட்களில் விபவனுடைய பிள்ளைகளை வீட்டைவிட்டுத் துரத்தி விட்டான்.

தெருவில் அலைந்த பிள்ளைகளுக்குச் சில பெரியோர்கள் துணையானார்கள். எல்லோரும் அரசனிடம் சென்று முறையிட்டார்கள். அரசன் விபாண்டனை அழைத்து விசாரித்தான். விபாண்டன் அவர்கள் கூறுவது பொய் என்று மறுத்தான். சிறிது நேரம் சிந்தித்த அரசன் வழக்கைத் தள்ளிவிட்டான். வந்தவர்கள் தங்களுடைய விதியை நொந்து கொண்டார்கள். விபவனுடைய பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினார்கள்.

நான்கு நாட்கள் சென்றன. அரசன் விபாண்டனுடைய வீட்டைச் சோதனை செய்தான். அவன் விபவனுக்குப் பரிசாகக் கொடுத்த பொருள்கள் அந்த வீட்டில் சிக்கின. அரசன் விபாண்டனை விளக்கம் கேட்டான். அவன்



பாட்டு வாத்தியாருக்குப் பரிசு!

தலைப்பைப் பார்த்ததுமே, யாரோ ஒரு பாட்டு வாத்தியாருக்குப் பரிசு கிடைத்திருப்பதாக நினைத்து விடாதீர்! 'பாட்டு வாத்தியார்' என்ற சிறுவர் கதைப் புத்தகத்திற்குத்தான் தமிழக அரசின் பரிசு திருவள்ளுவர் தினத்திலே கிடைத்திருக்கிறது!


இந்த நூலை எழுதியவர், உங்களுக்காக நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், பல நாவல்களையும் எழுதியவர்: ஏற்கெனவே பல அரிய பரிசுகளைப் பெற்றவர். சென்ற ஆண்டில் கூட இவர் உங்களுக்காக எழுதிய 'சிறை மீட்ட செல்வன்' என்ற புத்தகத்திற்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது. புத்தகங்களின் பெயர்களைக் கேட்டதும், 'அடடே, 'ரேவதி' என்ற பெயரில் எழுதுகிறாரே, அவருக்குத்தான் இப் பரிசு கிடைத்திருக்கிறது!' என்று நீங்களே கூறிவிடுவீர்கள். ஆம், 'ரேவதி' என்ற புனைபெயரிலே எழுதிவரும் திரு. ஈ. எஸ். ஹரிஹரன்தான். தமிழ்நாடு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் பரிசு பெறுகிறார்.

சோவியத் நாட்டில் குழந்தைப் புத்தகங்கள்

குழந்தை நூல்கள் ஓராயிரம் பிரதிகள் அச்சிட்டாலே விற்பனையாகுமா என இங்குள்ள பதிப்பகத்தார் அஞ்சுகின்றனர். அந்த அளவுக்கு நாம் ஆர்வம் காட்டுகிறோம். இந்த நிலை நீடித்தால், இந்த நாடு அறிவுத் துறையில் எப்போது முன்னேறுவது? நாட்டு நலத்திலே அக்கறையுள்ள ஒவ்வொரு இந்தியனும், இதயத்தில் எண்ணி வெட்கப்பட வேண்டும்; வேதனைப்பட வேண்டும். இந்நிலையை மாற்றிட முன்வர வேண்டும்.

சோவியத் நாட்டில் குழந்தைகளுக்காக எத்தனை மொழிகளில் நூல்கள் வெளியிடுகிறார்கள் என்பதை அறிந்தால் வியப்பு மிகும். மொத்தம் 89 மொழிகளில் குழந்தைகளுக்காக அந்நாட்டில் நூல்கள் வெளியிடுகிறார்களாம்! வெளியிட்டு விட்டால் போதுமா? விற்பனை ஆக வேண்டாவா? அதுவும் ஆகிறது. ஒவ்வொரு மொழியிலும் பல இலட்சம் பிரதிகள் விற்பனை ஆவதாகக் கூறினார்கள்.

—சு. ந. சொக்கலிங்கம் எழுதிய 'சோவியத்து நாட்டில் குழந்தைகள்' என்ற நூலிலிருந்து.







அச்சத்தினால் உளறினான். உடனே அரசன், அவன் பகுதியில் உள்ள மக்களை விசாரித்தான். அவர்கள் விபாண்டன் விதிக்கும் அதிகப்படியான வரிகளைப் பற்றிக் கூறினார்கள். வேறுவழியில்லாமல் விபாண்டன் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டான்.

அரசன் அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்தான். மேலும் விபவனுடைய சொத்துக்களை மீட்டான். தகுந்த பெரியோர்களிடம் விபவனுடைய பிள்ளைகளையும் சொத்துக்களையும் ஒப்படைத்து வளர்க்க உத்தரவிட்டான்.

பொறுப்பேற்றுக் கொண்ட பெரியோர்களில் ஒருவர் அப்பிள்ளைகளைப் பார்த்து, ''ஒவ்வொருவருக்கும் தகுந்த வாழ்க்கை இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. தர்ம வழியில் மேன்மை அடைய இறைவனை நம்பி முயற்சி செய்யலாம். அதை விட்டுப் பிறரைப் பார்த்துப் பொறாமைப்படக் கூடாது. பொறாமை உடையவனும் அழிவான். அவனைச் சேர்ந்தவர்களும் கெடுவார்கள். பிறருடைய உயர்வைக் கண்டு பொறாமைப்படுபவர்கள் யானையினுடைய உணவைக் கண்டு யானைப் பாகன் பொறாமை பட்டதை ஒத்தது.''

விபவனுடைய பிள்ளைகள் தர்மவழியில் நடந்து உயர்ந்தார்கள்.

திருக்குறள்:

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்
சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.



மின்மினிக் கதைகள்

இளைஞன் வைத்த பங்கு

குடும்பத் தலைவர், அவருடைய மனைவி, இரு மகன்கள், இரு மகள்கள் ஆக ஆறுபேரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்போது, கடற்படையில் வேலை பார்க்கும் ஓர் இளைஞன் வந்தான்.

உடனே, குடும்பத் தலைவர், அவனையும் தங்களுடன் உணவு அருந்தும்படி கேட்டுக்கொண்டார். ஐந்து புறாக்களையும், ஒரு கோழியையும் அவித்து அப்படியே முழுசாக மேஜைமேல் வைத்திருந்தார்கள். விருந்தாளியான இளைஞனை அவற்றைப் பங்கு வைக்கும்படி குடும்பத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

அவன் ஒரு புறாவை இரண்டு துண்டுகளாக வெட்டி இரு மகன்களுக்குக் கொடுத்தான். மற்றொரு புறாவை இரண்டு துண்டுகளாக வெட்டி இருமகள்களுக்கும் கொடுத்தான். பிறகு ஒரு புறாவை இரு துண்டுகளாக வெட்டி, ஒன்றைக் குடும்பத் தலைவருக்கும் மற்றொன்றை அவர் மனைவிக்கும் கொடுத்தான். மீதமிருந்த இரு புறாக்களையும் அவன் வைத்துக்கொண்டான்.

குடும்பத் தலைவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. விருந்தாளி மனம் கோணக் கூடாது என்று நினைத்தார்.

புறாக்களை எல்லோரும் தின்று முடித்த பிறகு, அவனையே கோழியையும் பங்கு வைக்கும்படி சொன்னார் குடும்பத்தலைவர்.

அவன் குடும்பத் தலைவருக்கும், அவருடைய மனைவிக்கும் சேர்த்துக் கோழியின் தலையை வெட்டி வைத்தான். இரு கால்களை இரு மகன்களுக்கும், இரு இறக்கைகளை இரு மகள்களுக்கும் கொடுத்துவிட்டு, உடலைத் தனக்கு வைத்துக் கொண்டான்.

'ஏன் இப்படிச் செய்கிறான்?' என்று குடும்பத் தலைவர் நினைக்கும்போது அவன் சொன்னான்:

''பங்கு சரியாக வைக்கவில்லை என்றுதானே நினைக்கிறீர்கள்? நீங்கள் நினைப்பது தவறு. நீங்கள்,

உங்கள் மனைவி, ஒரு புறா — ஆக உருப்படி மூன்று; உங்களின் இரு மகன்களையும் ஒரு புறாவையும் சேர்த்தால் மொத்தம் மூன்று; அதே போல உங்கள் புதல்விகள் இருவரும் ஒரு புறாவும் சேர்ந்தால் மூன்று. நானும் இரண்டு புறாக்களும் சேர்ந்தால் மொத்தம் எவ்வளவு? அதே மூன்றுதானே! அதனால் தான் புறாக்களை அப்படிப் பங்கு வைத்தேன்.''

''அதுசரி, கோழியைப் பங்கு வைத்தாயே, அது எப்படி?'' என்று கேட்டார் குடும்பத் தலைவர்.

''நீங்களும் உங்கள் மனைவியும் குடும்பத் தலைவர்களல்லவா? அதனால்தான் கோழியின் தலையை உங்கள் இருவருக்கும் தந்தேன். இரு கால்களை இரு மகன்களுக்கும் கொடுத்தேன். அவர்கள்தானே கால் போலக் குடும்பத்தைத் தாங்கப் போகிறவர்கள்! திருமணமானவுடன் பறந்து போகிறவர்கள் உங்கள் பெண்கள். ஆகையால், அவர்களுக்கு இறக்கைகளைக் கொடுத்தேன். கோழியின் உடம்பு கப்பலைப் போல் வளைந்திருக்கிறதல்லவா! அதனால்தான் நான் அதை வைத்துக் கொண்டேன். கப்பலில் வந்த நான் கப்பலிலே திரும்பப் போகிறேன்'' என்று சாமர்த்தியமாகப் பதிலளித்தான் அந்த இளைஞன்.

உணவைவிட அவன் பேச்சு அவர்களுக்குச் சுவையாக இருந்தது.

ஓநாயின் அப்பா



இறந்துபோன தன் அப்பாவைப் பற்றி நரியிடம் ஓநாய் சொல்லிக் கொண்டிருந்தது.

''என் அப்பா மிகுந்த பலசாலி. அவர் தம் வாழ்நாளில் எத்தனை எதிரிகளைக் கொன்றிருக்கிறார், தெரியுமா? அவரால் கொல்லப்பட்டவர் தொகை ஆயிரத்துக்கு மேல் இருக்கும். இவ்வளவு வீர தீரமாக விளங்கிய அவரை நேற்று ஓர் எதிரி கொன்றுவிட்டானே! இப்படி நடக்குமென்று யாராவது எதிர் பார்த்திருப்பார்களா?'' என்று புலம்பியது.

''ஓநாய் நண்பனே, உன் அப்பாவைப் பற்றி என்னிடமே சொல்கிறாயே, அவரை எனக்குத் தெரியாதா?'' என்று கேட்டது நரி.

''ஆமாம். அவரைத்தான் உனக்கு நன்றாகத் தெரியுமே! அவர் எத்தகைய வீரர்!'' என்றது ஓநாய்.

''பெரிய வீரர்தான். அவர், தன் வாழ்நாளில் கொன்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட எதிரிகளை மட்டுமல்ல; கடைசியாக அவரைக் கொன்ற எதிரியையும் எனக்குத் தெரியும். அவர் அடித்துக் கொன்ற எல்லாமே சாதுவான ஆடுகளும், கழுதைகளும்தான். கடைசியாக அவர் கைவரிசையைக் காட்டியது ஒரு காளையிடம். அதைக் கொன்று தின்ன ஆசைபட்டார். வேகமாக அதன் மீது பாய்ந்தார். அந்த முரட்டுக் காளை சும்மா இருக்குமா? தன் கூர்மையான கொம்புகளால், அவரைக் குத்திக் கீழே தள்ளிப் புரட்டிப் புரட்டி எடுத்தது. கடைசியில், பாவம், உன் அப்பா உயிரை விட நேர்ந்தது. மெலியாரைத் தாக்குவது எளிது; வலியாரிடம் வம்புக்குப் போகலாமா?''

நரியின் பேச்சைக் கேட்டதும், ஓநாய்க்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மெல்ல நழுவிவிட்டது!



அம்மாவின் புதையல்!

அந்தப் பையனுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டுமே இருந்தாள். அம்மாவும், மகனும் ஒரு பெரிய காட்டுக்குப் பக்கத்தில் இருந்த குடிசையில் வசித்து வந்தார்கள்.

தினமும் அம்மா காலையில் புறப்பட்டுக் காட்டுக்குள் செல்வாள். காய் கனிகளையும், கிழங்குகளையும் கொண்டு வருவாள். மகன் காட்டில் கிடக்கும் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு வருவான். நெருப்பை மூட்டி அதில் கிழங்குகளைச் சுட்டு இருவரும் சாப்பிடுவார்கள்.

தினமும் அம்மா காட்டுக்குச் சென்று கல்லிலும் முள்ளிலும் அலைந்து காய்கனிகளையும் கிழங்குகளையும் சேகரித்துக் கொண்டு களைப்போடு வருவதைக் கண்டு மகன் துடிதுடிப்பான். வயது ஆக ஆக அம்மா மிகவும் இளைத்துப் போனாள். அதிகமாக அலையவும் அவளால் முடியவில்லை. இதைக் கண்ட சிறுவன் மிகவும் வருந்தினான்.

சின்ன வயதில், அம்மா புதையலைப் பற்றிச் சொன்ன கதைகளெல்லாம் நினைவுக்கு வந்தன. 'எனக்கும் ஒரு புதையல் கிடைத்தால் உடனே அம்மாவிடம் கொண்டுபோய்க் கொடுத்து அவள் துன்பத்தையெல்லாம் தீர்க்கலாமே!' என்று அடிக்கடி நினைப்பான்.

ஒருநாள் காட்டுக்குச் சுள்ளி பொறுக்கச் சென்ற அவன், சுள்ளி எதையும் பொறுக்கவில்லை. காட்டுக்குள் வெகுதூரம் நடந்து சென்றான்.

காட்டின் மத்தியிலே சிங்கம், புலி, கரடி போன்ற மிருகங்களெல்லாம் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும், அஞ்சாமல் நடந்து போய்க் கொண்டேயிருந்தான். அங்கிருந்த பெரிய மரங்கள் ஒவ்வொன்றையும் பார்த்து, "ஏ மரமே, நீ நெடுநாட்களாக இங்கு இருக்கிறாயே, இங்கு புதையல் இருக்குமா? எங்கே இருக்கிறதென்று சொல்லுவாயா?" என்று கேட்டுக் கொண்டே சென்றான்.

அப்போது, குள்ளமான ஒரு மனிதர் வழியிலே நின்று கொண்டிருந்தார். அவரிடமும் அவன் சென்று, "ஐயா, என் அம்மாவின் துயரத்தைத் தீர்க்க ஒரு புதையல் கிடைத்தால் எவ்வளவு உதவியாக இருக்கும்? எங்கே புதையல் இருக்கிறது? தயவுசெய்து சொல்லுங்கள், ஐயா!" என்று கேட்டான்.

அந்த மனிதர் 'ஹா ஹா ஹா...'என்று வாய் விட்டுச் சிரித்தார். பிறகு, "என்ன தம்பி, புதையலா? அதைத்தான் உன் அம்மா ஏற்கெனவே வைத்திருக்கிறார்களே!" என்றார்.

"உண்மையாகவா?" என்று சிறுவன் கேட்டான். பதில் சொல்வதற்கு அந்த மனிதர் அங்கே இல்லை; மறைந்து விட்டார்.

"என் அம்மா ஏற்கெனவே புதையல் வைத்திருக்கிறாளா? எனக்குத் தெரியாமலா?' என்று யோசித்தான். பிறகு, வீடு திரும்பினான்.

வெகு நேரமாக மகனை எதிர்பார்த்திருந்த அம்மா அவனை ஆவலோடு வரவேற்றாள்.

சிறுவன் காட்டில் நடந்ததைக் கூறி, "ஏனம்மா அந்த மனிதர் சொன்னது உண்மையா? எங்கே

அம்மா புதையலை வைத்திருக்கிறாய்?'' என்று ஆவலாகக் கேட்டான்.

''அவர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. என்னிடம் இவ்வளவு பாசமும், பற்றும் வைத்துள்ள நீதானப்பா என்னுடைய புதையல்! உன்னால் என் கவலையெல்லாம் விரைவிலே நீங்கத்தான் போகிறது. நான் மகிழ்ச்சியாக வாழத்தான் போகிறேன்'' என்று கூறி அவனை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டாள்!

பொன்னாசை

ஒரு பாங்கிலே குப்பை கூட்டுவது, தண்ணீர் எடுத்து வைப்பது போன்ற வேலைகளைச் செய்து வந்தான் வேலுசாமி. அவன் கூட்டிப் பெருக்கும்போது சில சமயம் சில்லறைக் காசுகள் கிடக்கும். அவற்றை யாருக்கும் தெரியாமல் மெதுவாக எடுத்துப் பைக்குள்ளே போட்டுக் கொள்வான்.

அவன் ஒருநாள் காலையில் இரண்டு மூன்று கட்டிடங்களுக்கு அப்பால் இருந்த வட்டிக் கடைக்காரரிடம் சென்றான்.

''ஐயா, ஒரு பவுன் இப்போ என்ன விலை இருக்கும்?'' என்று கேட்டான்.

''உனக்கு எதுக்குடா இந்த விவரமெல்லாம்? தங்கம் வாங்கப் போகிறாயா?''

''இல்லேங்க. விற்கிறதுக்குத்தான் கேட்டேன்.''

''ஒரு பவுன் ஆயிரம் ரூபாய்.''

'மார்க்கெட் விலை ரூ. 1600. அது எங்கே இவனுக்குத் தெரியப் போகிறது!' என்று அவர் நினைத்தார்.

''ஆயிரம் ரூபாயா! அடேயப்பா! நல்ல விலைதான். அப்படியானால், ஒரு எலுமிச்சம்பழ உருண்டை தங்கம் என்ன விலை இருக்கும்?' என்று கேட்டான் வேலுச்சாமி.

''அதுவா! ஐயாயிரம் ரூபாயிருக்கும்'' என்று கூறியவர், 'இவன் தங்கம் வைத்திருப்பான் போலிருக்கிறது. அதுதான் இப்படி விசாரிக்கிறான்?' என்று நினைத்தார். உடனே அவனை அழைத்துக்கொண்டு, அருகிலிருந்த ஒரு பெரிய ஓட்டலுக்குள் நுழைந்தார்.

''வேலுசாமி, நீ வேணுங்கிறதைச் சாப்பிடு. எல்லாம் என் செலவு'' என்றார் வட்டிக்கடைக்காரர். வேலுசாமி ஆசைப்பட்டதையெல்லாம் வரவழைத்துச் சாப்பிட்டான். வயிறு முட்டச் சாப்பிட்டு 'ஆவ்' என்று ஏப்பம் விட்டான்.

பில்லுக்குப் பணம் செலுத்திய பிறகு, ''வேலுசாமி, எலுமிச்சம்பழ அளவு தங்கம்னு சொன்னியே, அதை எடு, பார்க்கலாம்'' என்றார் மிக இரகசியமாக.

''தங்கமா! அது இப்போ என்னிடத்திலே இல்லையே! பாங்கிலே பெருக்குகிற போது, ஒரு எலுமிச்சம்பழ அளவு தங்கமாவது கிடைக்கணும்னு நான் எல்லாச் சாமிகளையும் வேண்டிக்கிட்டிருக்கேன். கிடைச்சா, உடனே உங்ககிட்டே கொண்டுவந்து தந்துடுவேன். வேறு யாருகிட்டே நான் கொடுப்பேன்'' என்று கூறி மீண்டும் ஒருமுறை ஏப்பம் விட்டான் வேலுசாமி.

அப்போது வட்டிக்கடைக்காரர் முகத்தைப் பார்க்க வேண்டுமே!





என் குழந்தைப் பருவம்

— சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம்

நான் பிறந்த நாள் தொடங்கி — 15 வயது முடியும் வரையுள்ள ''பிஞ்சுப் பருவ'' வாழ்க்கையிலே நான் பெருமிதத்தோடு குறிப்பிடத் தக்க அம்சம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆயினும், அந்தக் கால கட்டத்திலே நான் வாழ்ந்திருக்கிறேனாதலால், அதைக் குழந்தை உலகத்திற்குப் படம் பிடித்துக் காட்ட விரும்புகிறேன்; படிக்கும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியளிக்குமோ, என்னவோ!

குழந்தைப்பருவத்திலே என் அன்னையார் என்னை அழகிய தொட்டிலில் இட்டுத் தாலாட்டி வளர்க்கவில்லை. தனக்கிருந்த ஒரே மாற்றுப் புடவையைக் கொண்டு ஏணை கட்டி, அதிலே என்னைக் கிடத்தித் தாலாட்டி வளர்த்தார். ஏணையில் இருப்பது என்பது தாயின் கருவறையில் இருப்பதுபோலத்தான்; ஆனால், சில நாட்கள் பழகி விட்டால், அதிலும் இன்பமிருக்கலாம் போலும்!

என் தாய் எனது வாய்வழியே பாலூட்டிப் புற உடலை வளர்த்தது போல, செவி வழியே பாட்டூட்டி என் உள்ளத்தையும் வளர்த்தார். உடலையும் உள்ளத்தையும் ஒரு சேர வளர்ப்பதுதானே பிள்ளை வளர்ப்பு முறை.

இந்தத் தலைமுறையிலே பிறந்து, தொட்டிலிலே தவழ்ந்து வளரும் குழந்தைகளுக்குத் தாய்மார்கள் தாலாட்டுப் பாடுவதில்லை. படித்துப் பட்டம் பெற்ற தாய்மார்களுக்கு அது வெறுத்து ஒதுக்கத் தக்க ஒரு பழக்கமாகப் படுகிறது போலும்!

என் அன்னையார், ''ஏன் பிறந்தாய் மகனே?'' என்று வினாவெழுப்பி எனக்குத் தாலாட்டுப் பாடியிருக்க மாட்டார். என்னதான் வறுமை இருப்பினும், ஒரு தாய் தனக்கு மகன் பிறந்ததற்கு வருந்திப் பாடும் வழக்கமில்லை. ஆனால், நான் பிறந்து வளர்ந்த காலத்திலே திரு. அழ. வள்ளியப்பா போன்ற குழந்தைக் கவிஞர்கள் இல்லையாதலால், பாடி வளர்ப்பதற்கு என் தாய்க்குப் பாட்டுப் பஞ்சம் இருந்திருக்க வேண்டும். நான் பிறந்த ஆண்டிலே, எட்டயபுரம் பாரதியார் கவிதை எழுதத் தொடங்கி விட்டார் என்றாலும், அவர் தாலாட்டுப் பாடல் எழுதவில்லையே! உறங்கிக் கிடந்த பாரதத்திற்கு விழிப்பூட்ட வந்தவராதலால் பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி பாடினார். ஆயினும், என் குழவிப் பருவத்திலே ஏட்டில் எழுதாத எண்ணற்ற தாலாட்டுப் பாடல்கள் தாய்க்குலத்தாரின் நினைவிலிருந்தன. அந்தப் பாடல்களைப் பாடித்தான் அன்னையார் என்னை வளர்த்திருக்க வேண்டும் என்பதை எனக்குப் பின்னே ஏழு பிள்ளைகளை அவர் வளர்த்ததைக் கண்டு

தெரிந்து கொண்டேன். என் தாய்க்கு நான் மூன்றாவது பிள்ளை.

நான் தளர்நடை போட்ட காலத்திலே, என் அன்னையாரும், அவரைப் பெற்றெடுத்த அன்னையாரான என் பாட்டியாரும் இரவு நேரங்களில் எனக்குக் கதை சொல்வது உண்டு. சில கதைகள் பல நாட்களுக்குச் சொல்லக் கூடியதான தொடர்கதைகளாகவும் இருந்திருக்கின்றன. அந்தக் கதைகள் எல்லாம் பிள்ளைப் பருவத்தில் கேட்டவையாதலால், இந்தக் கிழப் பருவத்தில் நினைவில் இல்லை.

நான் பள்ளியில் கல்வி பயின்றது இரண்டாண்டுகள் வரைதான். மூன்றாம் வகுப்பில் நுழைந்து மூன்று நாள் முடியுமுன்னர் என் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்து விட்டது. அந்தக் காலத்திலும் மூன்றாம் வகுப்பில்தான் ஆங்கில மொழிப்பாடம் ஆரம்பமானது. இயற்கையே என்னை ஆங்கிலத்திடமிருந்து பிரித்து விட்டது எனலாம்.

நான் படித்த முதல் இரண்டு வகுப்புக்களிலும் முதல் 'மாணவனாகத் தேறியது நன்றாக நினைவு இருக்கிறது. அதற்கான பரிசாக மிட்டாய்ப் பொட்டலங்களைப் பெற்று வந்தேன். நான் படித்தது சென்னை மாநகராட்சிப் பள்ளியிலே! நான் மிட்டாய்ப் பொட்டலம் வாங்கி வந்ததை என் அன்னையார் அடிக்கடி சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வார்.

பத்துப் பதினைந்து வயதான பின்னரும் நான் மிகுந்த பயங்கொள்ளியாகவே இருந்தது எனக்கு நினைவிருக்கிறது. இருட்டைக் கண்டாலே அச்சம்! அந்த இடத்தில்தான் பேய் இருக்கும் என்று பெரியவர்கள் சொல்லிக் கேட்டதுதான் அச்சத்திற்குக் காரணம். ''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பது பழமொழி அல்லவா?

பிள்ளைப் பருவத்திலே மற்றச் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடும் பழக்கம் எனக்கு இருக்கவில்லை. அவர்களிடமிருந்து ஒதுங்கியே வாழ்வேன். பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர்கள் அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருப்பதிலே ஆர்வம் இருந்தது.

கொஞ்சம் புத்தி தெரிந்த பின் பஜனைக் கூடங்களுக்குச் சென்று பாடல்களைக் கேட்பதிலும், பாடுவதிலும் எனக்கு விருப்பமிருந்தது.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களிலே அங்கு நிகழ்த்தப் பெறும் புராணச் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் ஆர்வம் இருந்தது.

வறுமை காரணமாக வயிற்றுப் பசி இருந்த காலத்திலேயே இறைவன் எனக்கு அறிவுப் பசியையும் தந்திருந்தான். அதனால், கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே இந்த சிவஞானத்திற்கு ஆர்வம் இருந்தது. புறங்கையால் மூக்கைத் துடைக்கும் பருவத்திலேயே புராணச் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ விருப்பம் வருவது எல்லோருக்கும் ஏற்படுவது அல்ல. அதற்கு இறைவன் அருள் வேண்டும். எனக்கு அவன் அருள் இருந்தது.

என்னுடைய தந்தையின் குடும்பம் ஆரம்பக் கல்விக்கு நெடுந்தொலைவில் இருந்தது. ஆனால் என் தாயாரின் குடும்பமானது என் சமூகத்திலேயே தலைசிறந்து விளங்கியது. நானறிந்து என் தாயுடன் பிறந்த மூத்த தமையன்மார் மூவர் இருந்தனர். அவர்களில் மூத்தவர் 'எப். ஏ.' பட்டதாரி. அது அந்நாளில் பல்கலைக்கழகங்களால் தரப்படும் பட்டமாக இருந்தது. என்னுடைய இரண்டாவது மாமன் பி. ஏ. பட்டதாரி. இவர்தான் என் சமூகத்தில் முதல் பட்டதாரி. மூன்றாவது மாமன் இண்டர்மீடியட் படித்துத் தேறியவர். என் அம்மையாருக்கும்









தமிழிலே போதிய இலக்கியப் பயிற்சி உண்டு. நான் அனேகமாக என் அன்னையார் குடும்பத்தைச் சேர்ந்து தான் வளர்ந்தேன்; வாழ்ந்தேன். அதனால் பொது அறிவை வளர்த்துக் கொள்ள எனக்கு வாய்ப்பிருந்தது.

பிள்ளைப் பருவத்திலேயே குடிசைப் பிரதேசத்தில் வாழும் பிள்ளைகளுக்குரிய கோலி விளையாடுதல், காற்றாடி விடுதல், பம்பரம் விளையாடுதல், சடுகுடு போன்ற விளையாட்டுக்களில் ஏனோ எனக்குத் திறமை ஏற்படவில்லை. அந்த விளையாட்டுக்களில் அரிதாகச் சில சமயங்களில் ஈடுபட்டதுண்டு. ஆனால் கொஞ்சங்கூட திறமை ஏற்படவில்லை, என் திறமையின்மை கண்டு மற்றப் பையன்கள் என்னைக் கேலி செய்வார்கள்.

35 வயதுக்குப் பின் சிலம்பு (சிலப்பதிகாரம்) பயின்று, ''சிலம்புச் செல்வர்'' என்னும் பட்டமும் பெறும் பேற்றினைப் பெற்ற யான், சுமார் 12-வது வயதில் சிலம்பம் பயின்றேன். குத்துச் சண்டை, குஸ்தி, குச்சி விளையாட்டு ஆகியவை அந்நாளில் ''சிலம்பம்'' என்று பொதுப் பெயர் பெற்றிருந்தன. அவற்றைப் பயில எனக்கு விருப்பம் இருந்தது. காரணம், என் தந்தையார் சிலம்பப் பயிற்சியில் சிறந்தவராக விளங்கியதுதான். ஆனால், என்னைப் பொறுத்தவரையிலும் அவற்றிலும் திறமை பெற என்னால் முடியவில்லை. பிள்ளை விளையாட்டுக்கள் எல்லாவற்றிலும் நுனிப்புல் மேய்ந்த கதைதான்.

இன்றைய குழந்தை உலகுக்கு என் பிள்ளைப் பருவ அனுபவம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல ஒன்று இருக்குமானால், அது ''நான் பெற்றோருக்கு அடங்கிய பிள்ளை'' என்பதுதான். என் தாயானாலும் சரி, தந்தையானாலும் சரி, அவர்கள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டேன். பயத்தால் அல்ல; பண்பாட்டால்! இந்தப் பண்பாடுதான் இன்று நான் அடைந்திருக்கும் வளர்ச்சிக்குக் காரணம் என்று சொல்வேன். ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'' என்னும் பழமொழியைக் குழந்தைகள் கேட்டிருக்கலாந்தானே! எனக்கு 55 வயதாகும் வரை என் பெற்றோர் வாழ்ந்து வந்தனர். அந்த வயதில் எத்தனையோ சிறப்புக்களை யான் பெற்றிருந்தேன் என்றாலும், அப்போதும் நான் பெற்றோருக்கு அடங்கிய பிள்ளைதான்.

குழந்தை உலகம் இந்தப் பண்பாட்டைப் பெற்றுவிடுமானால், அதன் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. இது, குழந்தைகளுக்கு நான் தரும் நற்செய்தியாகும்.

அடுத்த இதழில்-

என் குழந்தைப் பருவம்

- முத்தமிழ்க்காவலர்

கி.ஆ.பெ.விசுவநாதம்



பிருந்தாவனக் கவியரங்கம்



தம்பி, தம்பி

உறுதியுடன் நீ உழைத்திடு, தம்பி.
உழைப்பால் உயர்ந்து சிறந்திடு, தம்பி.
உத்தம னாக இருந்திடு, தம்பி.
உள்ளத்தில் நல்லதை நினைத்திடு, தம்பி.
உண்மையை நீ என்றும் பேசிடு, தம்பி.
உயர்ந்த ஒழுக்கத்தைப்பெற்றிடு, தம்பி.
உயிர்போல மானத்தைக் காத்திடு,
தம்பி.
உயிர்களிடம் அன்பு கொண்டிடு தம்பி.

—டி. பாஸ்கர் (5617), சென்னை—28.



என் விருப்பம்

பள்ளி செல்லும் சிறுவன்நான்.
படிக்கச் செல்லும் சிறுவன்நான்.
மெள்ளத் தெளிவாய்க் கற்றிடுவேன்.
சிறப்பாய்ப் பட்டம் பெற்றிடுவேன்.

பட்டம் பெற்ற பின்னர்நான்
பட்டா ளத்தில் சேர்ந்திடுவேன்.
பகைவர் வந்தால் அவர்களை நான்
பாடாய்ப் படுத்தி விரட்டிடுவேன்.

பாரத அன்னை யின் புதல்வன்நான்.
பாரில் உள்ளோர் நம்மிடத்தில்
பாடம் படிக்க வேண்டுமம்மா.
பாரதம் புகழ்பெற வேண்டுமம்மா.

—அருண் உடையார் (3597), பூனா.

ஆச்சு, ஆச்சு!

டிங்டிங் பெல்லும் அடிச்சாச்சு —எங்கள்
பள்ளிக் கூடமும் விட்டாச்சு.
பள்ளி பஸ்ஸும் வந்தாச்சு — நாங்கள்
பாய்ந்தே இடமும் பிடிச்சாச்சு.
எங்கள் ஸ்டாப்பும் வந்தாச்சு —நாங்கள்
இறங்கி வீடும் வந்தாச்சு.
அன்னை முகமும் கண்டாச்சு — அவள்
அன்புக் கரங்களில் புகுந்தாச்சு
பள்ளிச் சீருடை களைந்தாச்சு — நாங்கள்
பாலும் குடித்து முடிச்சாச்சு.
மாலை நேரமும் வந்தாச்சு — நாங்கள்
மகிழ்ந்தே ஆடிட வந்தாச்சு.

—ஆர். உஷா (2238), புதுடில்லி.



புத்தகம் என் நண்பன்

நல்லதொரு புத்தகமே நலமானநண்பன்
நற்பண்பும் நல்வாழ்வும் நல்கும்நூர்
அன்பன்
சல்லடையால் தியவற்றைச் சலித்து
விட்டு நல்ல
சரக்குள்ள புத்தகங்கள் எடுத்துவந்து
படிப்பீர்!

அசையாத குறிக்கோளை அகத்தினிலே
கொண்டு
அனுதினமும் படித்தாலே முன்னேற்றம்
காண்பீர்.
அலைமீது எழுகின்ற சித்திரங்கள்
எல்லாம்
அரைநொடியில் கண்முன்னே மறைந்து
விடும் அன்றோ?

ஆனாலோ இளமையிலே நாம்கற்ற கல்வி
அழியாது என்றென்றும் துணையாக
நிற்கும்.

சிந்தித்துச் செயல்புரிய சிந்தனையை
வளர்க்க.
சீரான கல்வியைப்போல் வேறு துணை
உண்டோ?



படிப்புவர வில்லையென்று விதிமீது
பழியைப்
பக்குவமாய்ப் போடாதீர்; பலமுறையும்
படிப்பீர்.
துடிப்புள்ள இளமையிலே சோம்பேறி
யானால்
தொல்லைபல தொடரும்அதற்கு எல்லை
யுமே இல்லை!

—அ. கலைச்செல்வன் (2462), திண்டுக்கல்



பறவைகளே

சிட்டுக்குருவியே! — உன்
சிங்கார அலகினிலே
சின்னஞ் சிறிய நெல்லைச்
சீராகக் கொறிக்கின்றாய்!

அண்டங் காக்கையே! — உன்
அகன்ற வாயினிலே
அன்ன உருண்டைகளை
அழகாகக் கௌவுகின்றாய்!

கொக்கரக்கோ கோழியே! ' உன்
கூரான அலகாலே
கொட்டிக் கிடக்கின்ற
குப்பையைக் கிளறுகின்றாய்!

—ஜெ. ரெங்கநாதன் (1796), திருக்
- கோவிலூர்.

சிறுவர் உலகம்

சிறுவர் உலகம் ஓர்உலகம்
சிரிப்பும் களிப்பும் மிகுஉலகம்
சோம்பல் அற்ற உலகம்இதே!
சுறுசுறுப் பான உலகம்இதே!

கள்ளம் கபடம் இல்லைஇங்கே.
கவலை சிறிதும் இல்லை இங்கே.
உள்ளம் நிறைந்த அன்புஉண்டு.
உதவிகள் செய்யும் மனம்உண்டு.

அந்த நிமிடம் சண்டையிட்டு
அடுத்த நிமிடம் கைகோத்துச்
சிந்தை மகிழும் இதுதானே,
சிறுவர் உலக விந்தையென்பேன்!

—செ. செந்தில்வேல் (978), திருவாரூர்.



குடியரசு தினமும் குழந்தைகள் குதூகலமும்

கடந்த ஜனவரி 24—ஆம் நாள்...

பொன்மாலைப் பொழுது... கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் காரைக்குடித் திருநகரம் அன்று...

ஒரு புதிய பொலிவோடும், பூரிப்போடும் திருவிழாக் கோலத்தில் திளைத்திருந்தது.

மலரும் உள்ளங்கள் தங்களின் மாதா, பிதாக்களோடு காரைக்குடி மத்திய, மின்சார இரசாயன ஆய்வுக் கூடக் கலையரங்கை நோக்கி அணி வகுப்பு நடத்தினார்கள்.

எதற்காக இந்த அணிவகுப்பு?

நமது பாரத நாட்டின் 36—வது குடியரசு தினவிழாவை முன்னிட்டு, திருச்சி வானொலி நிலையம் ஏற்பாடு செய்திருந்த குழந்தைகள் கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கவே!

திருச்சி வானொலி சிறார்களை வானொலி நிலையத்திற்கு வரவழைத்து அங்கு நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்ததற்கு மாறாக, குழந்தைகளை நாடி வந்து, பொது மக்கள் மத்தியில் நிகழ்ச்சிகளை நடத்தித் தனக்குப் புதுப் பெருமை சேர்த்து வருகிறது.

இந்தப் பெருமைகளுக்கெல்லாம், பெரிதும் காரணமாயிருப்பவர் 'வானொலி அண்ணா' திரு. இளசை எஸ். சுந்தரம் அவர்கள் என்றால் அது மிகையல்ல.

கலைநிகழ்ச்சிகளைக் காண அரங்கம் நிரம்பிய போதும், அமைதி நிலவியதால், நிகழ்ச்சிகள் நேர்த்தியாக நடைபெற்றன.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையிலும்,

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் முன்னிலையிலும்,

கனியினும் இனிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தவத்திரு அடிகளார் அவர்கள் தமது தலைமை உரையில், குழந்தைச் செல்வங்களைப் பற்றிக் கூறியவை நமது இதயப் பேழையில் எந்நாளும் வைத்துக் காக்க வேண்டிய வைர வரிகள்:

''இன்றைய குழந்தைகளே, நாளைய தலைவர்கள்; நாட்டின் வரலாற்றை வடித்தெடுக்கும் சிற்பிகள். நாடு எதிர் காலத்தில் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுபவர்கள் இன்றைய பள்ளிகளைச் சுற்றி நடமாடுங்கள். குழந்தைகளின் மன நிலையை ஊன்றிக் கவனியுங்கள். வருங்கால தேசத்தின் வளம் பற்றிக் கணித்து விடலாம்.'' என்றார் தவத்திரு அடிகளார் அவர்கள்.

நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த குழந்தைக் கவிஞர் அவர்கள் தமது சிறப்புரையில்,

''ஒருசமயம் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் மக்களைப் பார்த்து, நீங்கள் எல்லோரும் 'பாரத மாதாவுக்கு — ஜே! — என்று சொல்லுகிறீர்களே, அதன் பொருள் என்ன? பாரத மாதா என்றால் என்ன? நீங்கள், நான், நம்மைப் போன்ற





○ திருச்சி வானொலி நிலைய இயக்குநர் எஸ். வேணுகோபால் ரெட்டி பேசுகிறார். அருகில் குன்றக்குடி அடிகளார், வானொலி அண்ணா, இளசை எஸ். சுந்தரம்.

கோடிக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்ததுதான் பாரத மாதா. நாம் ஒவ்வொருவரும் இந்தப் பாரத மாதாவின் ஓர் உறுப்பு. எல்லா உறுப்புக்களும் நன்றாக இருந்தால்தானே பாரத மாதா சுகமாக வாழ முடியும்? ஏதேனும் ஓர் உறுப்புக்குத் துன்பம் என்றாலும், பாரத மாதா நிம்மதியாக இருக்க முடியுமா? நினைத்துப் பாருங்கள்' எனக் கேட்டார். இந்த நேரத்தில் இதை நாம் மனத்தில் கொண்டு ஒருவருக்கொருவர் உதவி செய்து, ஒன்றுபட்டு வாழ்வோம்!'' என்றார்.

கலைநிகழ்ச்சிகளில் காரைக்குடிப் பகுதியில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளர்களாக வந்து தங்கள் இனிய குரல் களால் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எடுப்பாக அறிவித்து நிகழ்ச்சிக்கு மெருகூட்டிய காரைக்குடி முத்தூரணி நகராட்சிப் பள்ளி மாணவன் ஜெ. ஜான் கென்னடியும், மாணவி ஜெ. ஞானசௌந்தரியும் அனைவரின் பாராட்டையும் பெற்றார்கள்.

காரைக்குடி கேந்திரிய வித்தியாலயா மாணவ மாணவியரின் தேசபக்தர்கள், ஒற்றுமைப் புகைவண்டி ஆகிய இருநிகழ்ச்சிகளும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வைத் தூண்டும் விதத்தில் அமைந்த மிக அற்புதமான நிகழ்ச்சிகள்.

காரைக்குடி வள்ளல் அழகப்பர் மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவி எம். சுபாஷினியின் பரதநாட்டியம் மிகச் சிறப்பாக அமைந்தது.

'நெஞ்சில் நிறைந்த நேரு' - என்னும் தலைப்பில் அப்பள்ளி மாணவர்கள் கவியரங்கம் நடத்தினர்.

கோட்டையூர் முத்தையா அழகப்பா மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர் சுமார் ஐம்பது பேர் குழுவாகச் சேர்ந்து, கவிமணியின் 'வெண்ணிலாவே!' என்னும் பாடலைப் பாடிய போது அரங்கமே மெய்சிலிர்த்தது. அப்பள்ளி மாணவர்கள் பங்கேற்று நடித்த 'யார் மனிதன்?' என்னும் நாடகம் எல்லோருடைய பாராட்டையும் பெற்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியரின் 'வித்தைக்காரன்' சிந்தனைக்கு விருந்தாக இருந்தது. கரக ஆட்டம் அற்புதம்!

காரைக்குடி வீணை சகோதரர்கள் நினைவு இசைப்பள்ளி மாணவ, மாணவியரின் தாள வாத்தியக் கச்சேரி அனைவரையும் தாளம் போடத் தூண்டியது.

முத்தூரணி நகராட்சிப் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற 'பாரத மாதாவுக்கு ஜே!' பாரத நாட்டின் பெருமைகளைப் படம் பிடித்துக் காட்டியது.

குடியரசு தின விழாவை முன்னிட்டு குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்த —இந்த இனிய கலைநிகழ்ச்சிகளுக்குக் காரணமாயிருந்த திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு. எஸ். வேணுகோபால் ரெட்டி அவர்களையும், வானொலி அண்ணா திரு. இளசை எஸ். சுந்தரம் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

—ஆ. ஜோசப் ஸ்டாலின்

ஒரு பூனை புலியாகிறது

டாக்டர் பூவண்ணன்

4. நண்பனின் தவறு

சேரனின் வேண்டுகோளை ஏற்று, காரைக் கிளப்பிய டிரைவர் பின்னே வரும் அம்பாசிடருக்குப் போக்குக் காட்டி ஏமாற்ற நினைத்துக் காரைச் செலுத்தினான். அம்பாசிடர் தன்னைப் பின்தொடர்வதை அறிந்ததும், உற்சாகத்தோடு, உதகை மார்க்கெட்டைச் சுற்றிக் கொண்டு, வந்த வழியே திரும்பினான். அம்பாசிடரும் அதைத் தொடர்ந்தது. கார், சூப்பர் மார்க்கெட்டை நெருங்கிய போது, அம்பாசிடரை ஓட்டிக் கொண்டிருந்த குறுந்தாடிக்காரன் — அவன்தான் பாபு, கொஞ்சம் மிரண்டவனாய், ''ஜாக்கி! இதென்ன, பியட் கார் வந்த வழியிலேயே திரும்பிப் போகுதே!'' என்று வியப்பை வெளிப்படுத்தினான்.

டிரைவரின் அருகே உட்கார்ந்திருந்த சுருள் முடிக்காரனான ஜாக்கி, ''இதை மட்டுந்தான் கவனிச்சியா? காரின் பின் சீட்டில் உட்கார்ந்திருந்த பையனையும் காணோம். அதைக் கவனிக்கலையா?'' என்று கேட்டான்.

அதற்குள் பியட் கார் சேரிங் கிராஸை அடைந்து திரும்பிக் கொண்டிருந்தது. அதனால் அதன் வேகம் குறைந்திருந்தது. எனவே பாபு அந்தக் காரை நன்றாகப் பார்க்க முடிந்தது. பின் சீட்டில் யாரும் இல்லை. காரில் டிரைவரைத் தவிர யாரும் இல்லை.

''ஆமாம். பொடியனைக் காணோம். அவன் எங்கே போனான்?''

''லாரி நம்மை வழிமறிச்சுதே! அப்போ, காரிலிருந்து இறங்கிப் போயிருப்பான். பையன் இல்லேங்கிறதை நானும் கொஞ்ச நேரம் பொறுத்துத்தான் கவனிச்சேன். அதுக்கப்புறம் பிடிக்க முடியும்னு தோணலை. அதான் சும்மா இருந்துட்டேன்.''

''இப்போ வீணா எதுக்கு இந்தக் காரைப் பின் தொடரணும்?''

''நாம நேத்து பையன் மறைஞ்ச ரோடிலே காத்திருந்து இந்தக் காரையும், காரிலிருந்த பையனையும் பிடிச்சோம்.''

''ஆமாம். பையன் அவன்தான்னு நீ சொன்னே. அதே நீலநிற ஸ்வெட்டர் போட்டிருக்கான்னு காட்டினே.''

''இப்போ அவனைத்தான் நேத்து நாம விரட்டினோங்கறது உறுதியாயிடுச்சு. அதனாலேதான் நம்மைப் பார்த்ததும் பயந்து வழியிலே இறங்கிட்டான். நாம காத்திருந்த ரோடிலே இடைருன்னு காரைப் பார்த்தோம். அது எந்த வீட்டிலிருந்து வந்ததுன்னு நமக்குத் தெரியாது. பியட் பின்னாடியே போய், அந்த வீட்டைக் கண்டு பிடிப்போம். அதுக்கப்புறம் பையனைப் பிடிச்சுடுவோம்.''

ஜாக்கியின் யோசனையின்படி அம்பாசிடர், பியட்டைப் பின்தொடர்ந்து, விஜய் பங்களாவுக்குள் அது நுழைந்ததைப் பார்த்துவிட்டுப் பிறகு திரும்பியது.

அம்பாசிடரை வேறொரு குறுக்குத் தெருவில் நிறுத்திவிட்டு, இருவரும் விஜய் பங்களாவை நோக்கி வந்தனர். அந்தப் பங்களாவுக்குள் நுழையவில்லை. அதற்கு முன்னே இருந்த பங்களாவை நோட்டம் விட்டார்கள்.

அந்தப் பங்களாவின் முன்புறம் செடிகளுக்குப் பூவாளியால் ஒரு கிழவன் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான்.

ஜாக்கி, ''தாத்தா'' என்று சொந்தப் பேரனைப் போலத் தேனொழுக அழைத்தான்.

கிழவன் தன் வேலையை நிறுத்திவிட்டு, குரல் வந்த திசையில் பார்த்தான். அதற்குள் ஜாக்கியும், பாபுவும் உரிமையோடு பங்களாவுக்குள் நுழைந்து, கிழவன் அருகே வந்தனர்.

பங்களாவின் தோட்டம் பிரமாதம் என்றும், கிழவனின் தோட்டக்கலை

என்ன என்ன பொருள்கள் — விடை:

1. மெழுகுவர்த்தி, 2. ஷூ, 3. குழாய், 4. டென்னிஸ்பாட், 5. கவர், 6. ஊக்கு, 7. வாளி, 8. கொக்கி, 9. அம்பு, 10. கோடரி, 11. பந்து, 12. சாவி, 13. இஸ்திரிப்பெட்டி, 14. மணி, 15. ஆணி, 16. கோப்பை, 17. நூல் கண்டு, 18. முக்காலி, 19. தொப்பி, 20. புத்தகம், 21. ஏரோப்ளேன், 22. துப்பாக்கி, 23. பென்சில், 24. கிரிக்கெட் பாட், 25. பிரஷ், 26. பிடியுள்ள பாத்திரம், 27. ஏணி, 28. சுருட்டுக் குழாய், 29. குடை, 30. பூட்டு, 31. பெல்ட், 32. முட்டை, 33. பம்பரம், 34. நங்கூரம், 35. ரம்பம், 36. சீப்பு, 37. கட்டைப் பேனா, 38. அப்பளக் குழவி, 39. ஐஸ்கிரீம், 40. ஸ்பானர், 41. டெலிபோன், 42. வில்.

அறிவும், கடுமையான உழைப்பும் செடிகளைப் பார்த்தாலே தெரிகின்றன என்றும் கொஞ்சநேரம் புகழ்ந்தார்கள். பிறகு மெதுவாக அந்த வீட்டைப் பற்றி விசாரித்தான் ஜாக்கி. விஜய் பற்றியும் அவன் தந்தை பற்றியும், கிழவன் சொன்னான். அந்த வீட்டில் விஜயின் விருந்தாளியாக ஒரு பையன் வந்திருக்கிறான் என்றும் அவனைப் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினான்.

ஜாக்கி ஒரு பத்து ரூபாயைக் கிழவனின் கையில் திணித்து, பக்கத்துப் பங்களாவில் ரெண்டு பையன்களும் அப்போது இருக்கிறார்களா? — இருவருடைய கோயமுத்தூர் முகவரிகள் என்ன — என்னும் விவரத்தைப் பெற்றுத் தருமாறு வேண்டினான்.

கிழவன் அடுத்த பங்களாவுக்குள் நுழைந்தான். சமையற்காரனிடம் பேசினான். பத்து நிமிஷத்தில் திரும்பி வந்தான்.

வீட்டில் விஜய் மட்டும் இருக்கிறான். இன்னொரு பையன் சேரன், அவசரமாகக் கோயமுத்தூருக்குப் போய் விட்டான் — என்ற தகவலைக் கொடுத்து, விஜயின் கோவை முகவரியையும் கொடுத்தான் தோட்டக்காரன். சேரனின் முகவரி சமையற்காரனுக்குத் தெரியாதாம் .

பாபுவும் ஜாக்கியும் கிழவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் புறப்பட்டனர். அந்தப் பங்களாவை விட்டுப் புறப்பட்டார்களே தவிர, அந்தச் சாலையை விட்டுப் புறப்படவில்லை. வீட்டில் இருக்கும் பையனைப் பார்த்து, அவன் தாங்கள் தேடுகிற பையன் தானா என்று அறிய விரும்பினார்கள். சுமார் அரை மணி நேரம் அந்தப் பங்களாவுக்கு அருகிலேயே நின்ற போது, ஒரு முறை விஜய் வெளியே வந்ததைப் பார்த்தான், ஜாக்கி. உடனே தான் தேடுகிறவன் அவன் அல்ல — கோவைக்குப் போய் விட்டதாகக் கூறிய சேரனே தங்களுக்குத் தேவையானவன் என்பதை உணர்ந்து கொண்டான். அதன் பின்பு அவர்கள் இருவரும் அங்கே தாமதிக்கவில்லை. காரிலேயே புறப்பட்டுக் கோவை நகரை அடைந்தார்கள்.

விஜயின் முகவரியைக் கண்டு பிடிப்பதில், சிரமம் இருக்கவில்லை. விஜயின் வீட்டுக்குப் போனார்கள். பங்களாவுக்குள்ளே ஒரு வாட்ச்மேன் இருந்தான். அவனிடம் பேச்சுக் கொடுத்து ஊட்டியில் சேரனைப் பார்த்ததாகக் கூறினார்கள்.

''நான் போட் கிளப்பில் வேலை செய்கிறவன். சேரனுக்குத் தூரத்து உறவு. அவனுக்கு நான் ஊட்டியிலே இருக்கிறது தெரியாது. என்னைத் திடீர்னு பார்த்து சந்தோஷப்பட்டான். கோவைக்கு வந்தா வீட்டுக்கு வரச் சொல்லி இந்த அட்ரஸ் கொடுத்தான். இன்னிக்கே கோவை வரவேண்டிய வேலை இருந்தது. வந்துட்டேன். சேரனும் இன்னிக்கே திரும்பி வர்றதா சொன்னான். சேரன், பின்னாடி அவுட் அவுஸ்லே இருக்கானா?'' — ஜாக்கி கேட்டான்.

''சேரன் வீடு இதில்லே! நெசவாளர் காலனியிலே இருக்கு. அவன் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி இங்கே வந்துட்டுப் போனான். என்னமோ ஒரு மாதிரியா இருந்தான். இங்கிருந்து டாலரையும்எடுத்துக்கிட்டுப்போனான்''

வாட்ச்மேன் சொன்னதும், ''டாலரையா!'' என்று வியப்போடு கேட்டான், ஜாக்கி.

''டாலர்னு ஒரு நாயுங்க.''

ஜாக்கி அந்த வாட்ச்மேனிடம் சேரன் வீடு எங்கே இருக்கிறது என்று விசாரித்துக்கொண்டு, தேடிக் கண்டு பிடித்துக் கதவைத் தட்டிய போது மணி பிற்பகல் இரண்டு.

கதவு தட்டியதும் உடனே திறக்கப் படவில்லை. மீண்டும் கதவைத் தட்டினார்கள். உள்ளே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த சேரனின் தாய் எரிச்

சலோடு எழுந்து வெளியே வந்தாள். தாழை நீக்கி, கதவைக் கொஞ்சமாய்த் திறந்து வெளியே பார்த்தாள்.

ஜாக்கியும் பாபுவும் நின்றிருந்தார்கள்.

''யாரு நீங்க?'' என்று கேட்டாள்.

இப்போதும் ஜாக்கியே பேசினான்.

''சேரன் இல்லைங்களா?''

''இல்லை, ஊட்டிக்குப் போயிருக்கான். ஆமாம் நீங்க யாரு?''

''ஊட்டியிலிருந்து திரும்பிக் கோயமுத்தூர் வந்துட்டானுங்களே!''

''வந்தான். விஜயோடு வந்தானாம். திரும்பவும் ஊட்டிக்குப் போறேன்னு போயிட்டான். ஆமாம் நீங்க யாரு?''

ஜாக்கியும் பாபுவும் திகைத்தார்கள்.

''திரும்ப, ஊட்டிக்கேவா போயிட்டான்? எதுக்கு மறுபடியும் ஊட்டிக்குப் போனான்? எப்போ திரும்பி வர்றதா சொல்லிட்டுப் போனான்?'' ஏமாற்றத்தோடு கேட்டான், ஜாக்கி.

''ஏன் போனான் — எப்போ வருவான்னு தெரியாது. ஆமாம், என்னை இத்தனை கேள்வி கேக்கறீங்களே. நீங்க யாருன்னு ஒரு கேள்வி கேட்டேன். அதுக்குப் பதில் சொல்லலையே!''

ஜாக்கியும் பாபுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நான் ஊட்டியிலே இருக்கிறவன். நேத்து அங்கே அவனைப் பார்த்தேன் கோயமுத்தூருக்கு வந்தா, என்னைப் பாரு. விஜய் வீட்டிலே வேலை வாங்கித் தரேன்னான். அதான் வந்தேன்.''

''அப்படின்னா ஊட்டிக்கே போய் அவனைப் பாருங்க.''

பதில் சொல்லி விட்டு, பட்டென்று கதவை மூடித் தாழிட்டு விட்டு, விட்ட தூக்கத்தைத் தொடரச் சென்றாள், சேரனின் தாய்.

சேரன் வீட்டின் மூடிய கதவுக்கு முன்னே ஜாக்கியும் பாபுவும் ஒன்றும் புரியாமல் குழப்பத்தோடு நின்றார்கள்.

''அவசரமாகக் கோவைக்கு வந்த சேரன், திரும்பவும் ஏன் ஊட்டிக்குப் போனான்? விஜயுடன் வந்தான் என்பது பொய். அதைப் போலவே ஊட்டிக்குத் திரும்பவும் போனான் என்பதும் பொய்யா? ஒரு வேளை... அதை ஊட்டியிலே வைத்துவிட்டு வந்துட்டானோ?''

ஜாக்கி பல வகையாகச் சிந்தித்து மேலும் குழப்பமடைந்தான்.

அவனுக்கு அதிர்ஷ்டம் இருக்கும் போலும்!



அந்தத் தெரு வழியே சென்று கொண்டிருந்த, மயில் சாமி சேரனின் வீட்டுக்கு முன்னே நின்றிருந்த இருவரைப் பார்த்ததும், அருகே வந்தான்.

''சேரன் வீட்டுக்கு முன்னே நிக்கிறீங்களே, உள்ளே யாரையாச்சும் பார்க்கணுங்களா? கதவைத் தட்டித் திறக்கச் சொல்லட்டுங்களா? எனக்குச் சேரனின் அம்மாவைத் தெரியும். சேரன் என் நண்பன்'' என்று கேட்டான், மயில்சாமி.

''வேண்டாம் தம்பி. நாங்களே, கொஞ்சம் முன்னாடி அம்மாவோடே பேசினோம்'' என்று கூறிய ஜாக்கி, தொடர்ந்து, ''சேரனை உடனே பார்க்கணும்னு வந்தோம். நாங்க வர்றதுக்குள்ளே அவன் போயிட்டான். அவனைப் பார்க்க முடியலையேன்னு வருத்தத்தோட நிற்கிறோம்'' என்றான்.

''இப்போ நீங்க சேரனைப் பார்க்கணுங்களா?''

மயில்சாமி கேட்டதும், கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததைப் போல மகிழ்ந்து, ''ஆமாம்'' என்று ஜாக்கியும் பாபுவும் ஒரே குரலில் கூறினர்.



உண்மையில் சேரன் அப்போது எங்கே இருக்கிறான் என்பது மயில் சாமிக்குத் தெரியும்.

சேரன் பதினொரு மணியளவில் கோயமுத்தூர் வந்துவிட்டான். நேரே வீட்டுக்குப் போனான். 'இப்போது சென்னைக்குப் போக வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?' என்று யோசித்தான். சென்னைக்கு ரயிலில் போகச் சுமார் நாற்பது ரூபாய் வேண்டும் என்று யாரோ எப்போதோ சொன்னது நினைவுக்கு வந்தது. அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது? ஊட்டியிலேயே விஜயிடம் கேட்டிருக்கலாம்? நாற்பது ரூபாய் யாரிடம் கேட்டுப் பெறுவது?


இந்தச் சிந்தனையிலிருந்த போது தான், தெருவையே அதிரச் செய்யும் பெரும் சப்தத்தோடு ஒரு லாரி சென்றதை, வீட்டுச் சன்னல் வழியே பார்த்தான், சேரன். லாரியின் டிரைவரையும் பார்த்தான். அப்போது தான் மின்னல் போல ஒரு யோசனை உதித்தது!

லாரி டிரைவர், அவனுடைய வகுப்பு நண்பன் மயில்சாமியின் தந்தை கந்தப்பன். தன் தந்தை சென்னைக்கும், கோவைக்கும் இடையே செல்லும் லாரி ஓட்டுகிறவர் என்று மயில்சாமி கூறியது நினைவுக்கு வந்தது. அடுத்த தெருவில் இருக்கும் மயில்சாமியின் வீட்டுக்குக் கந்தப்பன் லாரியுடன் அடிக்கடி செல்வதையும் பார்த்திருந்தான். 'மயில்சாமியின் தந்தையோடு லாரியில் சென்னைக்குச் சென்றுவிடலாம்' என்று முடிவு செய்தான்.

உடனே மயில்சாமி வீட்டுக்குப் போன சேரன், அவனிடம் விஷயத்தைச் சொன்னான், மயில்சாமி தந்தையிடம், சிபாரிசு செய்ய, அவர் ஒப்புக் கொண்டார். ''இரண்டு மணிக்குள்ளே செட்டி வீதியில் இருக்கிற எங்க சம்பத் டிரான்ஸ்போர்ட் கம்பெனிக்கு வந்துடு. உன்னை மெட்ராசுக்கு அனுப்பிச்சுட்டுப் போறேன்'' என்று சொல்லி விட்டார்.

சேரன் மிகுந்த சந்தோஷத்தோடு புறப்பட்டான்.

தான் சேரனுக்குச் செய்த இந்த உதவியை யாரிடமாவது சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த மயில் சாமி, ஜாக்கியும், பாபுவும் ''ஆமாம்'' என்று சொல்லிவிட்டு அவனை வெகு ஆர்வத்தோடு பார்த்ததும் பூரித்துப் போனான். அதனால் 'நாம் ஒரு தவறு



செய்கிறோம்' என்பதை உணராமல், தான் சேரன் சென்னைக்குச் செல்ல உதவியதை விளக்கி, முடிவில் ''செட்டி வீதியில், சம்பத் டிரான்ஸ்போர்ட் கம்பெனின்னு ஒண்ணு இருக்கு. அங்கே எங்கப்பா கந்தப்பன் ஓட்டுற லாரி இருக்கும். அதிலே சேரன் இருப்பான். சீக்கிரமாப் போனால் பார்க்கலாம். இல்லே, சேரன் லாரியிலே சென்னைக்குப் போயிடுவான்'' என்று சொன்னான்.

மயில்சாமி சொல்லி முடித்ததும் இருவரும் அவனுக்கு நன்றி சொல்லி விட்டு, கொஞ்ச தூரத்தில் நிறுத்தியிருந்த தமது அம்பாசிடரை நோக்கி ஓடினார்கள். இருவரும் லாரிக் கம்பெனியைத் தேடிக் கண்டுபிடித்தபோது, ''கந்தப்பன் லாரி புறப்பட்டு ஒரு மணி நேரத்துக்கு மேலாயிடுச்சு'' என்ற செய்தி கிடைத்தது.

மீண்டும் ஏமாற்றம்!

என்றாலும், செய்தியைக் கூறிய பாரம் தூக்கும் தொழிலாளியிடம் ஐந்து ரூபாயை நீட்டி, அந்த லாரியில் ஒரு பையனும், ஒரு அழகான நாயும் சென்றதையும், லாரி மேட்டூரில் கொஞ்சம் சாமானை இறக்கி விட்டுச் சென்னை செல்லும் என்பதையும் தெரிந்து கொண்டனர்.

அதன்பின், அம்பாசிடர் கார், ரேஸில் கலந்து கொண்ட வண்டியாகப் பறந்தது.

✲ ✲ ✲

கந்தப்பனின் லாரி, பவானியைக் கடந்து வெகு சீரான வேகத்தோடு சென்று கொண்டிருந்தது. கந்தப்பனுக்குப் பக்கத்தில் கிளீனர் உட்கார்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில், சேரன் உட்கார்ந்திருந்தான். அவன் மடியில் டாலர் உட்கார்ந்திருந்தது.

லாரியில் அவனை அழைத்துச்செல்ல, கந்தப்பன் ஒப்புக் கொண்டதும், அம்மாவிடம் ஊட்டிக்கே திரும்பவும் போவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அப்போதுதான், டாலரையும் உடன் அழைத்துக் கொண்டு போகும் எண்ணம் ஏற்பட்டது. அதனால் விஜய் வீட்டுக்குப் போனான். டாலரைத் தான் அழைத்துச் செல்வதாக விஜய்க்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டான். ஆனால் வாட்ச்மேனிடம் மாலையில் டாலரைத் திரும்பவும் அழைத்து வருவதாகக் கூறிவிட்டு, டாலருடன் லாரிக் கம்பெனிக்கு வந்துவிட்டான். சரியாக இரண்டு மணிக்கே லாரி புறப்பட்டு விட்டது.

வழியில் வெயில் உறைக்கத்தான் செய்தது. பவானியைக் கடக்கும் போது வெம்மை குறைந்தது; ஓரளவு இதமான காற்று வீசிக் கொண்டிருந்தது.

ஒரு காசு செலவில்லாமல் சென்னைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததை நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தான், சேரன்.

லாரி, காவேரி மின் நகரைக் கடந்தபோது, சேரன் இடப்புறத்தில் பார்த்துக் கொண்டே வந்தான். சாலையின் இருபுறமும் கரும்பு செழித்து வளர்ந்து, கண்ணுக்கு அழகாகக் காட்சியளித்தது. ஒருமுறை அந்தக் காட்சியோடே பார்வையைச் செலுத்தி

கழுத்தைத் திருப்பிப் பின்னே பார்த்தான்.

அது சாலை வளைந்து செல்லும் இடம். அதனால் லாரிக்குச் சிறிது தூரத்தில் ஒரு வெள்ளை அம்பாஸிடர் வருவதும் அவன் பார்வையில் பட்டது.

காவேரி மின் நகரின் மின்சாரம் முழுவதும் அவன் உடம்பில் பாய்ந்தது போன்ற அதிர்ச்சி அடைந்தான், சேரன். 'ஊட்டியில் விரட்டியவர்கள் வருகிறார்களா? சே... சே... அவர்களாக இருக்க முடியாது? அவர்களுக்கு நான் கோவை வந்ததோ, கோவையிலிருந்து லாரியில் புறப்பட்டதோ தெரியாதே!' என்று நினைத்து, கழுத்தை வெளியே நீட்டி நன்றாகப் பார்த்தான்.

அதே கார்! அதே குறுந்தாடி டிரைவர்! பக்கத்தில்...

அவன் பார்ப்பதற்கு முன் கார் லாரியை நெருங்கி, அதை ஓவர் டேக் செய்து கடக்கத் தொடங்கி விட்டது. சேரன் பார்வையை வலப்பக்கம் திருப்புவதற்குள் கார், லாரியைக் கடந்து வேகமாகச் சென்றது. கொஞ்ச தூரம் சென்றதும் நடுச் சாலையில் கார் திரும்பிட்டு நிற்க, அதிலிருந்து ஜாக்கியும், பாபுவும் இறங்கி முன்னே வந்து சாலையின் குறுக்கே நின்றனர்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத கந்தப்பன் பிரேக்கை அழுத்தினான்.

லாரி, தார் படிந்த சாலையை உழுது சென்று சட்டென்று நின்றது!

சேரனின் இதயமும் சட்டென்று ஒருவிநாடி நின்றுவிட்டது!

(தொடரும்)

கோகுலம் சிறுவர் சங்கம்

இச்சங்கத்தில் இது வரை 9000-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் பலர் சேர வேண்டுமென்ற ஆசையைத் தெரிவித்து, "திரும்பவும் உறுப்பினர் மனுவை வெளியிடுங்கள்" என்று தொடர்ந்து கேட்டு வருகிறார்கள். சிலர், அஞ்சல் அட்டையிலே தங்கள் பெயர், பிறந்த நாள், முகவரி முதலிய விவரங்களை எழுதி அனுப்பி, உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்கிறார்கள். இது சரியான முறையன்று.

இந்த இதழிலே உறுப்பினர் மனு வெளியாகியிருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கையெழுத்திட்டு அனுப்புங்கள். அனுப்பும்போது, முழுப் பக்கத்தையும் அனுப்பவேண்டும். உங்களைப் பற்றிய விவரங்கள் உள்ள பகுதியை மட்டும் தனியாக வெட்டி எடுத்து அனுப்பினால், அதைப் பாதுகாத்து வைப்பது சிரமமாயுள்ளது. தொலைந்து போகவும் வாய்ப்புண்டு.

உறுப்பினர்கள் எதை எழுதி அனுப்பினாலும், பெயர்களுக்குப் பக்கத்திலே உறுப்பினர் எண்களையும் குறிப்பிட வேண்டும். சில உறுப்பினர் எண்களைக் குறிப்பிடுகிறார்கள்; ஆனால், முகவரியை எழுதுவதில்லை. இதனால், உறுப்பினர் மனுவை எடுத்துப் பார்த்து, முகவரியைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

'பிருந்தாவனம்' பகுதிக்கு எழுதுகிறவர்கள் அஞ்சல் அட்டையில் எழுதினாலே போதும். கவியரங்கம் பகுதிக்கு எழுதும்போதும், கவிதை சிறியதாக இருந்தால், அஞ்சல் அட்டையிலே அனுப்பலாம். சற்று நீளமான கவிதை அல்லது கதை, கட்டுரைகளை அனுப்புவோர் வெள்ளைத்தாளில் இரு பக்கங்களிலும் எழுதாமல் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி, கடிதம் எதையும் அதனுடன் வைக்காமல் புத்தக அஞ்சலிலே அனுப்பலாம். தபால் செலவு குறையும். கதை, கவிதைகளைத் தேர்ந்தெடுத்த பிறகு, நாங்கள் புகைப்படம் கேட்டு எழுதுவோம். அப்போது அனுப்பினால் போதும். முன்னதாக அனுப்ப வேண்டாம்.

—ஆசிரியர்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

● 'கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர்ப் புகையைப் போலீசார் உபயோகித்தார்கள் என்று அடிக்கடி பத்திரிகையில் வருகிறதே. கண்ணீர்ப் புகை என்ன செய்யும்?

—ஆர். கிரிபிரசாத், அருப்புக்கோட்டை.

கண், மூக்கு, தொண்டை ஆகியவற்றுக்குள் புகுந்து இருமச் செய்வதோடு கண்ணீரையும் வரவழைத்து விடும் இந்தக் கண்ணீர்ப்புகை. போலீசார் சிறிய எறிகுண்டுகளை வீசுவார்கள். அவற்றிலிருந்து புகை வெளிவரும். துப்பாக்கிகளில் வைத்தும் இந்தக் குண்டுகளைச் சுடுகிறார்கள்.

● நோபல் பரிசு முதல் முதலாக யாருக்கு வழங்கப்பட்டது?


—எஸ். ராம்குமார், ஸ்ரீரங்கம்.

முதல் முதலாக 1901—ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஒருவருக்கல்ல; ஐவருக்கு! பௌதிகம், ரசாயனம், மருத்துவமும் உடலியலும், இலக்கியம், உலக சமாதானம் — இப்படி ஐந்து துறைகளில் சிறந்த ஐவருக்கு வழங்கப்பட்டது.

● நேரு மாமா அலகாபாத்திலிருந்த 'ஆனந்த பவனம்' என்ற பெரிய மாளிகையைத் தேசத்துக்காகக் கொடுத்துவிட்டார் என்று வானொலி மூலம் தெரிந்து கொண்டேன். அது நம் தேசம் சுதந்திரம் பெற்ற பிறகா? அல்லது அதற்கு முன்பா?

—பி. புருஷோத்தமன், கானப்பூர்.

'ஆனந்த பவன'த்திற்கு 'சுயராஜ்ய பவனம்' என்ற பெயர் வைத்து, அதைத் தேசத்திற்காகக் கொடுத்தவர் நேரு மாமா அல்ல; அவருடைய தந்தை மோதிலால் நேருதான். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே, அதாவது 1930—ல் கொடுத்தார்.



● ஜனவரி கோகுலத்தில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைப் பற்றிப் படித்தேன். அதன் முகவரி என்ன?

—எஸ். ஹரிப்ரியா, சென்னை—4.

ஏ. எல். 183, அண்ணா நகர், சென்னை—40.

● சீக்கியர்கள் இந்துக்களைப் போல விக்கிரகங்களை வைத்துக் கும்பிடுவார்களா?

—வி. குருசாமி, மேலூர்.

விக்கிரகமா! மூச்... விக்கிரகத்திற்குப் பதிலாக ஆதிகிரந்தம் என்ற நூலைத்தான் தங்கள் கோயில்களில் வைத்து வணங்குகிறார்கள். அந்த ஆதிகிரந்தத்தில் சீக்கிய மதத்தை நிறுவியவரான குருநானக்கின் கீதங்களையும் அவருக்குப் பிறகு வந்த குருமார்களின் போதனைகளையும் சேர்த்துத் தொகுத்து வைத்திருக்கிறார்கள்.

● சென்னை எழும்பூரிலுள்ள, நூல் நிலையத்திற்கு 'கன்னிமாரா நூலகம்' என்று எப்படிப் பெயர் வந்தது?

—எஸ். கோமளம், சென்னை—19.

சென்னை மாநிலத்தில் கவர்னராக இருந்தவர் கன்னிமாரா பிரபு. அவருடைய முயற்சியால் இந்த நூலகம் 1896—ல் தொடங்கப் பெற்றதால் அவரது பெயரையே வைத்துவிட்டார்கள்.

● ரொட்டி தயாரிக்கக் கோதுமை மாவை உபயோகிக்கிறோம். வேறு எந்த மாவிலாவது தயாரிக்க முடியுமா?

—ரா. கோவிந்தன், மண்டபம்.

ஏன் முடியாது! பார்லி, பட்டாணி, மொச்சை, சோளம், உருளைக்கிழங்கு முதலியவற்றின் மாவிலும் கூட ரொட்டி தயாரிக்கிறார்கள். ஆனாலும், கோதுமை ரொட்டிதான் சுவையாகவும், உடலுக்கு ஏற்றதாகவும் இருக்கிறது.

● சர்க்கஸில் வித்தை காட்டும் யானைகளில் அதிகமாகப் பெண் யானைகள்தான் இருக்குமாமே? நிஜமாகவா?

—பி. வேதாசலம், திருத்தணி.

நிஜம்தான். காரணம் என்ன தெரியுமா? பெரும்பாலும் ஆண் யானைகளுக்குத்தான் மதம் பிடிக்கும். பெண் யானைகளுக்கு மதம்பிடிப்பது அபூர்வம்.

● நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உயிருடன் இருப்பதாக என் நண்பன் சொல்கிறான். இது உண்மையா?

—எம். மருதவாணன், மதுரை—3.



நேதாஜி இறந்தது உண்மையா என்று பார்த்துவர, ஜப்பானுக்கு நம் இந்திய அரசாங்கம் ஒரு குழுவை அனுப்பியது. அக் குழு அங்கே சென்று நன்றாக விசாரித்து, அவர் இறந்தது உண்மையே என்று உறுதிப்படுத்தியது. ஆயினும் அவர் இறக்கவில்லை; இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று ஒரு சிலர் கூறி வருகிறார்கள்.

● கடல் மட்டத்துக்கு மேல் அதிக உயரமுள்ள இடம் சிம்லாவா? ஊட்டியா?

—வி. கிருஷ்ணவேணி, கோவை—12.

சிம்லா 7235 அடி. ஊட்டி 7500 அடி. எது அதிக உயரம் என்பதை நீயே தெரிந்து கொள்.

● நான் பத்திரிகைக்கு ஒரு கதை எழுதப் போகிறேன். அதற்கு என்ன என்ன செய்ய வேண்டும்?

—சி. திருப்பதி, கறம்பக்குடி.

நீ பார்த்த அல்லது கேள்விப்பட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து எழுதலாம். அல்லது, நன்றாக யோசித்து உன் கற்பனையில் ஒரு கதையை உருவாக்கலாம். கதையை எழுதி முடித்ததும் உன் நண்பர்களிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொல்லலாம்; பெரியவர்களிடம் காட்டலாம். நல்ல கதை என்று அவர்கள் சொன்னால், உடனே வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் அழகாக எழுதி, உன் பெயர், முகவரியுடன் எந்தப் பத்திரிகைக்கு அனுப்ப வேண்டுமென நினைக்கிறாயோ, அதற்குப் புத்தக அஞ்சலில் போதிய தபால் தலை ஒட்டி அனுப்பலாம். கூடவே கடிதத்தையும் அனுப்ப விரும்பினால், புத்தக அஞ்சலில் அனுப்பக் கூடாது.

● கடவுளுக்கு அடுத்தபடியாக நாம் யாரை வணங்கலாம்?

—பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்

மாதா, பிதா, குரு தெய்வம்.

● U.S.S.R. என்ற நாட்டின் முழு ஆங்கிலப் பெயர் என்ன?

—கி. தனசேகரன், தோப்புத்துறை.

Union of Soviet Socialist Republics.

● குங்குமத்தில் என்னென்ன சேர்க்கிறார்கள்?

—ப. லதாதேவி, பரமக்குடி.

குங்குமப் பூ, பச்சைக் கர்ப்பூரம் முதலியவற்றைச் சேர்த்துப் பனிநீரில் இழைப்பதுதான் உண்மையான குங்குமம். ஆனால், இப்போது மஞ்சள் பொடியுடன் படிக்காரம், எலுமிச்சம் பழச்சாறு முதலியவற்றைச் சேர்த்துத் தயாரிக்கிறார்கள். சிலர் எதை எதையோ கலந்து விற்று, நெற்றியைக் கெடுத்து விடுகிறார்கள்!


● 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற நூலை எழுதிய கிருஷ்ண பிள்ளை அவர்களின் முழுப் பெயர் என்ன? அவருக்கு வேறு பெயர் இருந்தால் கூறுங்கள்?

—வி. குமரன், வேலூர்.

அவரது முழுப் பெயர் கிருஷ்ண பிள்ளை; மறு பெயர் ஹென்றி ஆல்பிரட்.

● காகத்திற்கு ஒரு கண் மட்டும்தான் தெரியும் என்கிறார்களே, உண்மையா?

—இரா. சுவாமிநாதன், சீர்காழி.



ஒரு காகத்தின் முன்னால் தின்பண்டத்தைப் போட்டு விட்டு, இந்தப் பக்கம் ஒருவரும் அந்தப் பக்கம் ஒருவரும் நின்று பார்த்தால் இரண்டு கண்களிலும் ஒளியைக் காணலாம். காகம் தலையைச் சாய்த்து வைத்துக்கொண்டு பார்ப்பதால், ஒரு கண்தான் இருக்கிறதென்று பலர் நினைக்கிறார்கள்.

● பள்ளிப் பாடங்களைக் கூடப் புறக்கணித்துவிட்டுப் பிள்ளைகள் 'கோகுலம்' படிப்பது சரியா?

—அ. அன்பழகன், அந்தணப்பேட்டை.

அது சரியில்லை. பள்ளிப் பாடங்களை ஒழுங்காகப் படித்துவிட்டு, ஓய்வுநேரத்தில் 'கோகுலம்' படிப்பதே சரி.

● தாங்கள் மறைந்த அன்னை இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசியது உண்டா?

—எஸ். ஜெயஸ்ரீ, ஈரோடு.



பல முறை நேரில் பார்த்ததுண்டு; சந்தித்ததில்லை. சந்திக்காததால் பேசவும் இல்லை.

● கைநிறைய லஞ்சம் வாங்கும் பெரும் அதிகாரிகளின் பிள்ளைகள் ஆடம்பரமாக உடையுடுத்தி, கையிலே கடிகாரம், விரல்களில் மோதிரம், கழுத்திலே காமிரா, பையிலே பாக்கெட் டிரான்ஸிஸ்டர் இவைகளுடன் வருவதோடு, தினம் ஓட்டலுக்கு நண்பர்களை அழைத்துச் சென்று குஷியாகச் சாப்பிடுகிறார்கள். யோக்கியமாகச் சம்பாதிப்பவர்களின் பிள்ளைகளால் அப்படி அனுபவிக்க முடியவில்லையே!

—பி. சூரி, திருச்சி–14.

லஞ்சம் வாங்கும் ஒருவரின் பிள்ளைகள் குஷியாகத்தான் இருப்பார்கள், தங்கள் அப்பா அகப்பட்டுக் கொள்ளும்வரை! அகப்பட்டுக் கொண்டால், அவருக்கு வேலை போகலாம்; சிறைத் தண்டனையும் கிடைக்கலாம். அப்போது, நாமே அப்பிள்ளைகளைப் பார்த்து அனுதாபப்படுவோம். நேர்மையானவர்களின் பிள்ளைகளுக்கு என்றைக்குமே கவலை இல்லை. 'நேர்மையானவரின் பிள்ளைகள் நாங்கள்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறும் அளவுக்குப் பெருமையும் கிடைக்கிறதே! இவற்றிற்கு மேல் என்ன வேண்டும்?




● சிலர் சாப்பிடும்போது இலையைச் சுற்றித் தண்ணீர் தெளிக்கிறார்கள். கேட்டால், 'சாத்திரம்', என்கிறார்கள். அப்படியென்றால்...?

—சி. குருசாமி, கோவில்பட்டி.

"ஜீவாதாரமாகிய உணவே, உன்னை பரமாத்மாவின் கிருபையெனும் நீரால் சுற்றிலும் ஈரமாக்குகிறேன்" என்று ஆண்டவனை நினைத்துத் தண்ணீர் தெளிக்கிறார்கள். இது வேதகால முதலாக அனுசரிக்கப்பட்டு வரும் வழக்கம். விஞ்ஞான முறையில் பார்த்தாலும், எறும்பு முதலிய உயிர்கள் இலையில் வந்து விடாமல் இருக்க இது உதவியாக இருக்கும்.

அடுத்த இதழில்—
ஆகாய விமானத்தில் அப்பாவுடன் போனேன்
—செல்வி ஷரீன்





தவறும் தண்டனையும்

சங்கராந்திப் டண்டிகை நாளில் பிறந்தவர் ஸ்வாமி விவேகானந்தர். அவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் நரேந்திரன்.

நரேந்திரன் பள்ளியில் படிக்கும் போது, ஒருநாள் அவனும் மற்ற மாணவர்களும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் நடத்திய பாடத்தைக் கவனிக்கவில்லை. ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது.

''வகுப்பிலே பாடம் நடத்தும் போது என்ன அரட்டை?'' என்று கோபங்கொண்ட ஆசிரியர், அவர் நடத்திய பாடத்திலே சில கேள்விகளைக் கேட்டார்.

எல்லோரும் விழித்தார்கள். ஆனால், நரேந்திரன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்களைச் சொன்னான்.

ஆசிரியர் நரேந்திரனைத் தவிர, மற்ற மாணவர்களைப் பெஞ்சு மேல் நிற்கும்படி சொன்னார். அவர்கள் பெஞ்சுமேல் ஏறி நின்றார்கள். நரேந்திரனும் அவர்களுடன் ஏறி நின்றான்.

''நரேந்திரா, நீதான் சரியாக விடை அளித்தாயே! நீயும் ஏன் ஏறி நிற்கிறாய்?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''நானும்தானே அவர்களோடு சேர்ந்து அரட்டை அடித்தேன்? தவறு செய்தேன். அதற்குத் தண்டனையாக நிற்கிறேன்'' என்று பதிலளித்தான்.

ஆல்பாட் ஐன்ஸ்டைன்

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாகிய இவரே அணு யுகத்திற்கு வழிவகுத்தவர். ஜெர்மனியில் உள்ள உல்ம் என்ற நகரில் பிறந்த இவர், சிறுவயதில், ''அல்ஜீப்ரா என்றால் என்ன?'' என்று தம் சிற்றப்பாவிடம் கேட்டார்.

அவர், ''அல்ஜீப்ராவா! உனக்கு ஏதாவது ஒன்று தெரியாதுபோனால், அதற்கு என்று பெயர் கொடுத்து விடு. பிறகு, அதைத் தேடிக் கண்டு பிடி'' என்றார்.

சிற்றப்பா வேடிக்கையாகத்தான் இதைச் சொன்னார். ஆனால், ஐன்ஸ்டைனுக்கு அதிலிருந்து அல்ஜீப்ராவில் அளவில்லாத ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. அல்ஜீப்ரா புத்தகங்களை வாங்கி வந்து அவற்றில் உள்ள கணக்குகளையெல்லாம் அவரே போட்டுப் பார்க்க ஆரம்பித்து விட்டார்!

கணக்கிலே தம் ஆசிரியர்களைவிடக் கெட்டிக்காரராயிருந்த இவர், நாளடைவில் பல விஞ்ஞானக் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார். பத்திரிகைகளில் வெளியிட்டார். அக்கட்டுரைகள் உலக விஞ்ஞானிகள் பலருடைய கவனத்தைக் கவர்ந்தன. சுவிட்சர்லாந்த் பல்கலைக்கழகத்திலும், பெர்லின் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர், ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்ததும் ஜெர்மனியை விட்டு அமெரிக்கா சென்று அங்கு பல ஆராய்ச்சிகளைச் செய்தார்.

அவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தது அவருடைய 'சார்புக் கொள்கை' தான்.

'சார்புக் கொள்கை' என்றால்...?

பொருளின் எடை, ஈர்ப்பு விசை, வானவெளி (அல்லது தூரம்), காலம் ஆகிய நான்கைப் பற்றியதே சார்புக் கொள்கை.

பௌதிகத்திற்கான நோபல் பரிசு இவருக்கு 1921-ல் கிடைத்தது.

பிருந்தாவனக் கதையரங்கம்



அழுக்கு என்பது சட்டையில் இல்லை!

ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து சென்னை செல்லும் ரயில்வண்டி தண்டவாளத்தைத் தழுவிக் கொண்டு நகர்ந்தது. கணேஷின் அப்பா அருணாசலம் மீண்டும் தன் மகனிடம் ''டேய் கணேஷ், நடுவில் எங்கேயும் இறங்கிடாதே! அப்புறம் மறக்காமல் ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் மாமாகிட்ட சொல்லித் தந்தி கொடுக்கச் சொல்லுடா'' என்று உரக்கக் கூறினார். கணேஷ், ''சரி அப்பா'' என்று டாடா காண்பித்தான். ரயில் வேகம் பிடித்தது.

கணேஷ் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான். முழு வருடப் பரீட்சை விடுமுறைக்குச் சென்னையில் உள்ள மாமா வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கிறான். முதல் முறையாகத் தனியாகப் பயணம் செய்வதால் கணேஷுக்குச் சிறிது அச்சமாக இருந்தது. ரயில் சேலத்தில் நின்றதும் கணேஷ் இருந்த பெட்டியில் ஒரு பையன் ஏறினான். அவன் பிச்சைக்காரனைப் போல் சட்டை அணிந்திருந்தான். அவனைப் பார்ப்பதற்கே அருவருப்பாய் இருந்தது. அவனைக் கண்டதும் முகம் சுளித்தான்.

''ச்சே, கொஞ்சங்கூடச் சுத்தமே இல்லாமப் பிச்சைக்காரப் பயலாட்டம் பார்க்கவே சகிக்கல்லே! இவனெல்லாம் எங்கே டிக்கெட் எடுத்திருக்கப் போறான். எல்லாம் திருட்டுத் தனமாய் வருவான்'' என்று கணேஷ் மனத்திற்குள் எண்ணிக் கொண்டான்.

அப்போது அந்தப் பையன், ''அண்ணா, மணி எத்தனைங்க?'' என்றான். கணேஷ் அதற்குப் பதில் கூறாமல் வேண்டுமென்றே வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். ரயில் ஜோலார்ப்பேட்டையை அடைந்ததும் டிப்டாப்பான ஆசாமி ஒருவன் அந்தப் பெட்டிக்குள் ஏறினான்.

அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே கணேஷுக்குப் பிடித்துவிட்டது. அவர் தன் அருகில் அமர வேண்டுமென்று அவன் விரும்பினான். அவருக்கு இடம் கொடுத்து நகர்ந்து உட்கார்ந்தான். அவரும் அவனருகிலேயே உட்கார்ந்தார். சற்று நேரம் கழித்து,

''தம்பி உன் பேரென்னப்பா?'' என்று கேட்டார்.

''கணேஷ்.''

இப்படியே சிறிதுநேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

கணேஷ் எப்போது தூங்கினான் என்று அவனுக்கே தெரியாது. கண் விழித்தபோது வண்டி காட்பாடியில் நின்று கொண்டிருந்தது. எதிரேயிருந்த அந்தப் பையனைக் காணவில்லை. அதைக் கண்டவுடன், அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. 'சனியன் ஒழிஞ்சது' என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டான். பிறகு தன் பக்கம் திரும்பிய போது அந்த டிப்டாப் ஆசாமியையும் காணவில்லை!

''அவர் மெட்ராஸ்லதானே இறங்கிறதாச் சொன்னாரு?'' என்று எண்ணியவாறு தன் சூட்கேஸ் இருந்த பக்கம் நோக்கினான். அது அங்கு இல்லை. கணேஷ் திடுக்கிட்டவாறே அங்கும் இங்கும் தேடினான். அது கிடைக்காததால் பெட்டியைவிட்டு இறங்கினான். அங்கு அவன் கண்ட காட்சி அவனை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்த அழுக்குச் சட்டைப் பையனுடன் போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவர் கையில் கணேஷின் சூட்கேஸ்!

அதைக் கண்ட கணேஷ் மனத்திற்குள் ''அட என் சூட்கேஸைத் திருடிட்டியா!'' என்று வாயெடுத்தான். அதற்குள் அந்தக் கான்ஸ்டபிள் அவன் அருகில் வந்து விட்டார். அந்த அழுக்குப் பிடித்த பையன் ''இந்த அண்ணாவுடையதுதான்!'' என்றான், கான்ஸ்டபிளைப் பார்த்து.

''தம்பி, ஒரு ஆசாமி இந்தப் பெட்டியோட ஓடுவதைப் பார்த்து இந்தத் தம்பிதான் எங்கிட்ட சொன்னான். நான் அவனைப் பிடித்து விசாரித்த பொழுது அவன் திருடினதை ஒத்துக்கிட்டான். இந்தாப்பா உன் சூட்கேஸ்!'' என்றார் கான்ஸ்டபிள்.

''தாங்க்ஸ் சார்'' என்றான் கணேஷ். கான்ஸ்டபிள் போனபின், ''அண்ணா, உங்க பெட்டியை அந்த ஆளு தூக்கிட்டுப் போறதைப் பார்த்தவுடனே உங்களை எழுப்ப நினைச்சேன். அதுக்குள்ள அந்த ஆளு வெளியே ஓடிட்டான். பின்பு நானே அவனைத் துரத்திக்கிட்டுப் போனேன். அப்புறம் நடந்ததைத்தான் அந்த அய்யாவே சொல்லிட்டாங்களே'' என்றான் ஒரே மூச்சில்.

கணேஷின் மனம் சங்கடப்பட்டது. 'இவ்வளவு நல்ல பையனைப் போய்த் தப்பா எண்ணிட்டேனே! இவன் உருவம் ஒருமாதிரியாக இருந்தாலும் உள்ளம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறது!' என்று கணேஷ் அவனை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டான்!

—எம்.ஸ்டாலின் (6710)

ஆரோக்கிய நகரம்

''இந்த நகருக்குக் குடிவரலாம் என்றிருக்கிறேன். இது ஆரோக்கியமான நகரம்தானா?''

''சந்தேகமென்ன? நான் இந்த நகருக்கு வந்த போது எனக்குப் பேச்சு சரியாக வரவில்லை; நடக்கவும் சக்தி இல்லை; உட்காரக்கூட முடியாது.''

''அவ்வளவு ஆரோக்கியமான நகரமா? ஆமாம், நீங்கள் இந்த நகருக்கு எப்போது வந்தீர்கள்?''

''மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோது.''

—வாணு.



ஒரு நாயின் கல்லறை

அதோ பீட்டர் சிலுவைக் குறி பதிக்கப்பட்ட கல்லறையின் கீழ் அமர்ந்து அழுது கொண்டிருக்கிறான். கல்லறையின் மீது இறந்தவர் பெயர், தோற்றம் எதுவும் குறிக்கப்படவில்லை. மறைவு மட்டும் எழுதப்பட்டிருந்தது. போன வருடம் இதே நாளில்தான் அது இறந்திருந்தது. எது என்று புரியவில்லையா? ஒரு நாயின் கல்லறைதான் அது! இவனது குறும்புத்தனமான வாழ்வில் நல்ல திருப்பம் ஏற்படுத்தியதே அந்த நாய்தான். அந்த நாயின் கல்லறை மீது அமர்ந்துதான் இப்பொழுது அழுது கொண்டிருக்கிறான். அந்தக் கதை என்னவென்று தான் பார்ப்போம்.

பீட்டரின் குறும்புத்தனங்களில் சில, நாயைக் கண்டால் கல்லை எடுத்து

அடிப்பான்; தும்பியை நூலில் கட்டிப் பறக்க விடுவான்; கம்பை எடுத்து ஓணானை அடிப்பான். பீட்டரது தாய் மேரி எவ்வளவு சொல்லியும் அவன் திருந்துவதாய் இல்லை.

பீட்டரின் தாய், தான் உண்ட பின்பு மீதமுள்ள உணவை வீட்டின் வெளியே கல்லின் மீது கொட்டு வாள். சாம்பல் நிறம் கொண்ட ஒரு நாய் அதற்கென்றே காத்திருப்பது போல் ஓடிவந்து உணவை உண்ணும். அப்பொழுது மட்டும் பீட்டர் தன் வாலைச் சுருட்டிக் கொண்டிருப்பான். ஏனெனில், அருகில் அவனுடைய தாய் இருக்கிறாளே! தாய் உள்ளே போனது தான் தாமதம், தன் காலாலே அதை எட்டி உதைப்பான். என்னதான் அவன் அதனைத் துன்புறுத்தினாலும் அது அவனை இரக்கத்தோடு பார்க் கும்.

பீட்டர் அந்த வருடம் ஆறும் வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்றிருந் தான். அதற்குப் பரிசாக அவன் தந்தை தாமஸ் அவனுக்குத் தங்கச் சங்கிலியைப் பரிசாக அளித்தார். அதை அவன் தன் நண்பர்களுக்குக் காண்பிக்க வேண்டும் எனச் சொல்லிக் கொண்டு புறப்பட்டான். இரவு ஏழு மணிக்குள் திரும்பி வந்து விடுமாறு அவன் தந்தை கூறினார். ஏனெனில் அந்தச் சிறிய ஊர் இரவு எட்டுக்கே அமைதியாகி விடும்.

பீட்டர் தன் நண்பர்களிடத்தில் எல்லாம், தான் போட்டிருந்த தங்கச் சங்கிலியைக் காண்பித்தான். இன்னும் ஜானிக்கு மட்டுந்தான் காண்பிக்க வேண்டும். அவன் வீட்டிற்குச் சென்று அவனை அழைத்தான். ஜானி அவனை வீட்டிற்குள் அழைத்துச் சென்று டி. வி. பார்க்க உட்கார வைத்தான். பீட்டருக்குப் பிடித்த நடிகர் டி. வி. யில் பாடிக் கொண்டிருந்தார். அங்கே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந் தான். ஒளியும் ஒலியும் மணி எட்டே காலுக்கு முடிந்ததும், பீட்டர் ஜானி யிடம் சொல்லிக் கொண்டு வேகமாக நடந்தான்.

வழி எங்கும் இருள் சூழ்ந்திருந் தது. பூச்சிகளின் சத்தம் வேறு அவனை மேலும் அச்சுறுத்தியது. அவனுக்குப் பின்னால் அவனுக்குத் தெரியாமல் அந்தச் சாம்பல் நிற நாய் வந்து கொண்டிருந்தது.

'இன்னும் இரண்டு தெரு நடந் தால் நம் வீடு வந்துவிடும்' என்று மனத்துக்குள் எண்ணியவாறு நடந்து



விருது பெற்ற வீரச் சிறுவர்கள்



இந்த ஆண்டு குடியரசு தினத்தில் வீரச் செயல் புரிந்ததற்காக விருது பெற்ற 15 சிறுவர், சிறுமியருடன் குடியரசுத் தலைவர் ஜைல் சிங் அவர்கள்.

கொண்டிருக்கும்பொழுது. ஒரு முரட்டுக் கை அவன் தோளைப் பற்றியது. பின்னால் திரும்பிப் பார்த்தான். அந்த உருவம் அவன் வாயைப் பொத்தியபடி தங்கச் சங்கிலியைக் கழற்றித் தருமாறு கேட்டது. பீட்டருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அப்பொழுதுதான் அந்தச் சாம்பல் நிற நாய் அந்தத் திருடனின் மேல் பாய்ந்தது. அந்த முரட்டு உருவம் அவன் வாயிலிருந்த பிடியைத் தளர்த்தியதும் பீட்டர், ''திருடன்! திருடன்!'' எனக் கூச்சலிட்டான்.

அருகிலிருந்த வீட்டுக்காரர்கள்எல்லோரும் சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தனர். அந்த நாய் திருடனின் காலைக் கவ்வியிருந்தது. மக்கள் ஓடி வருவதைப் பார்த்த திருடன், தான் தப்பிக்கும் பொருட்டுத் தன் கையிலிருந்த கத்தியை நாயின் வயிற்றிலே பாய்ச்சினான். அந்த நாய் மரண ஓலமிட்டவாறு தரையில் விழுந்தது. அதற்குள் மக்கள் ஓடிச் சென்று திருடனைப் பிடித்தனர்.

பீட்டரின் இரும்பு இதயம் அந்த நாயின் நன்றிக் கடமையால் இளகியது. தான் செய்த தவறுகளை நினைத்து மனம் வருந்திக் கண்ணீர் விட்டான். நேரமாகியும் வீடு திரும்பாத மகனைத் தேடி அவன் தந்தை தாமஸ் அவன் நண்பர்களின் வீடுகளுக்கெல்லாம் சென்று விசாரித்துவிட்டு வரும்பொழுது, அங்கே கூடியிருந்த கும்பலைக் கண்டதும் ஓடிவந்தார். பீட்டர் தன் தந்தையைக் கண்டதும் ஓடிச் சென்று அவரைக் கட்டிப்பிடித்து நடந்தவற்றையெல்லாம் சொன்னான். மகன் திருந்தியதற்காக அவர் மகிழ்ந்தாலும், அந்த நன்றியுள்ள நாயின் இறப்புக் குறித்து வருந்தினார். மறுநாள் அந்நாயை பீட்டர் குடும்பத்தினர் இடுகாட்டில் புதைத்து அதன் ஆத்மா சாந்தி அடைய வேண்டினர்.

– சி.கே. இரவிராஜ் (3958)


உலக ரிகார்டுகளைத் தரும் புத்தகம் கின்னஸ்! உலகிலுள்ள அத்தனை சாதனைகளையும் திரட்டித் தருகிறது கின்னஸ். விளையாட்டுத் துறையில் நீச்சல் வீரர் மிகிர் சென் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் இந்தியக் குழு காப்டனான சுனில் கவாஸ்கர் பிராட்மனின் உலக ரிகார்டை முறியடித்த போது கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் புகழப்பட்டார். இந்த வருஷம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றவர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி. அவர் நூறு 'கிளாஸிக்' குதிரைப் பந்தயங்களில் வெற்றி பெற்றதற்காக அந்தப் பெருமையை அடைந்திருக்கிறார்.

குதிரைப் பந்தயம் சூதாட்டம் என்று சொன்னாலும், அதுவும் விளையாட்டுத் துறையில் ஓர் அங்கம் வகிக்கிறது!

கிண்டி குதிரைப் பந்தயம் 1777–ம் ஆண்டிலேயே நடைபெற்றதாக ரிகார்டு சொல்கிறது. குதிரைப் பந்தய மைதானத்துக்காக அடையாறு, வெங்கடாபுரம் ஜமீன் பூமியில் 1777–ம் ஆண்டில் 81 காணி நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலக் கம்பெனி சென்னையில் அடியெடுத்து வைத்த காலத்தில் தொடங்கப் பட்டது கிண்டி குதிரைப் பந்தயம். காஸ்லெட், ஹைரட் என்ற ஆங்கிலேயர்கள் அந்தக் காலத்தில் குதிரைப் பந்தயத்தில் அக்கறை செலுத்தியிருக்கிறார்கள். 1837–ஆம் ஆண்டில்தான் குதிரைப் பந்தய கிளப் தோன்றியிருக்கிறது. 1895–ஆம் ஆண்டில் குதிரைப் பந்தய கிளப்பில் ஐம்பது அங்கத்தினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 1896–ஆம் ஆண்டில்தான் தொடர்ந்து குதிரைப் பந்தயங்கள் நடக்கத் தொடங்கின. 1906–ஆம் ஆண்டில் ஓர் அதிசயம்! வெள்ளைக்காரர் நடத்திய அர்பத்நாட் வங்கி முறிந்து விடவே, குதிரைப் பந்தய நிதியெல்லாம் அந்த வங்கியில் மூழ்கி விட்டது. அதனால் குதிரைப் பந்தயம் நிறுத்தி வைக்கப்பட்டது! 1914–லிருந்து 1919–ம் ஆண்டுகளில் உலக யுத்தத்தினாலும்

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும் தமிழர்!

—குண்டுமணி—





குதிரைப் பந்தயம் நடைபெறுமலிருந் திருக்கிறது! குதிரைப்பந்தய மைதானக் கட்டிடங்கள் எழுப்புவதற்கு வெங்கடகிரி மகாராஜாவும் பொப்பிலி மகாராஜாவும் நிதி வழங்கி உதவியிருக்கிறார்கள்! 1951–52–ம் ஆண்டில் தான் குதிரைப் பந்தயத்தை நுணுக்கமாகக் கணிக்க ''Photo Finish Camera' நிறுவப்பட்டது! 1970–71–ஆம் ஆண்டில் 9 லட்சம் ரூபாய் செலவில் ரேஸ் குதிரைகளைப் பேணுவதற்காக 'Equine Hospital', ஆய்வுக்கூடம் தொடங்கப்பட்டது.

ஹாக்கியில் உலகக் கோப்பை இந்தியா பெறுவதற்குப் பெரிதும் பாடுபட்டவர் எம். ஏ. எம். ராமசாமி. கோலாலம்பூரில் உலகக் கோப்பையைக் ஹாக்கி வீரர்கள் பெறுவதற்கு அவர்களை ஊக்குவித்தவர் அவரே! சென்னையில் டென்னிஸ் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தை நடத்திப் புகழ் தேடித் தந்தவர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி.

சிதம்பரம் அருகில் அண்ணாமலை நகரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தவர் இவரது தாத்தா ராஜா சர் அண்ணாமலை செட்டியார். இன்று டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகத் திகழ்கிறார்.

கிண்டி குதிரைப் பந்தயம் இருநூறு ஆண்டு பூர்த்தியை 1978–ஆம் ஆண்டில் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறது. டாக்டர் எம். ஏ. எம். ராமசாமிக்கு மைசூரில் நூறாவது கிளாஸிக் பந்தய வெற்றி தேடித் தந்த குதிரையின் பெயர் ''குயின் ஆஃப் தி ஹில்ஸ்.'' கின்னஸ் ரிகார்டிலும் இந்தக் குதிரையின் பெயர் இடம் பெற்றிருக்கிறது. நூறு 'கிளாசிகல்' வெற்றிக்கு அவருக்கு உதவியாயிருந்தவர்கள் டேவிட்டும், ஜகதீஷும் ஆவார்கள்.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publicaton: Madras
2. Periodicity of Publication: Monthly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600040.
4. Name of Publisher: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040.
5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address 1, Purushothama Mudaliar Rd.,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali,
Publisher.

1.3.1985.


வட நாட்டில் முகலாயர்களின் கை ஓங்கியிருந்த காலம். தென்னாடு பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது.
அந்நியர்களின் ஆட்சியில் அடிமைப் பட்டிருந்த இந்துக்களிடம் ஒற்றுமை உணர்வை ஊட்டி சுதந்திர தாகத்தை உண்டாக்க ஒரு குழந்தை பிறந்தது. 1627 இல் பிறந்த அக்குழந்தையே மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்த சத்ரபதி சிவாஜி.
ஆர்.ஸி. மஜும்தாரின் சரித்திரப் புத்தகத்தைத் தழுவி எழுதப்பட்டது.
சத்ரபதி சிவாஜி
கதை: ஆனந்தி
படம்: விநு
அன்னை ஜீஜாபாயின் சங்கல்பம்.
கண்ணே! சிவா! அன்னை பவானியின் அருளால் பிறந்த செல்வனே! உன்னை மகா வீரனாகச் செய்வேன்.
சிறுவன் சிவாவுக்கு மாவீரர்களின் கதைகளைச் சொல்வாள் அன்னை.


சிவா லட்சிய நோக்குடன் வளர்ந்தான்.
சுதந்திரத்துக்காகத் தர்ம யுத்தம் செய்வேன். முகலாயர்களைத் துரத்தி விடுவேன்.
ஆசிரியர் தாதாஜிக்கு சிவாவிடம் மிகுந்த அன்பு.
சிவா! படித்தது போதும். களைத்திருக்கிறாய். பகலெல்லாம் மலைப் பிரதேசத்தில் சுற்றுகிறாய். உன் தாயாரும் தடுப்பதில்லை.
சுவாமி! என் நண்பர்களோடு விளையாடுவதில் என்ன தவறு?
விளையாட்டா? நீயும் தானாஜியும் சேர்ந்து போர்ப் பயிற்சியில் அல்லவா ஈடுபட்டிருக்கிறீர்கள்! எனக்குத் தெரியும்!
நான் மகா வீரனாக வேண்டும் என்பது அம்மாவின் ஆசை.
வீரனாக இருப்பதில் என்ன தடை? உன் தந்தையைப் போல் பீஜப்பூர் சுல்தானிடம் வீரனாகப் பணியாற்று. முகலாயர்களை எதிர்க்கலாம் என்று எண்ணாதே.



குரு சொன்னதை சிவா ஏற்க வில்லை.
சுவாமி! தோர்ன கோட்டையைப் பிடித்து விட்டால் பிறகு ஒவ்வொரு கோட்டையாகக் கைப்பற்றி விடலாம்!
அப்போது அன்னை ஜீஜாபாய் வந்து...
என் மகன் அடிமையாக இருந்து சுக போகங்களுடன் வாழ்வதை விட சுதந்திரமாகக் கஷ்டப் படுவதையே விரும்புகிறேன்.
நாளடைவில் சிவாஜியின் ஆசை நிறைவேறியது. தோர்ன கோட்டையைக் கைப் பற்றினர். புதிய கோட்டை ஒன்று கட்டினர்.
இந்தப் புதிய கோட்டையை ராஜ்கர் என்று அழைப்போம்.
பீஜபூர் சென்று வந்த தூதன் கவலை தரும் செய்தி சொன்னான்.
உங்கள் மேல் கோபம் கொண்டு உங்கள் தந்தையைச் சிறையில் அடைத்திருக்கிறார் சுல்தான். உயிரோடு சமாதியில் வைக்கப் போகிறார்களாம். அவ்வப்போது ஒவ்வொரு கல்லாக எழுப்பி வருகிறார்கள்.
சிவாஜி அந்தப்புரம் சென்று தாயையும் இரு மனைவியரையும் சந்தித்து....
அம்மா! நான் பீஜபூர் சென்று தந்தையை விடுதலை செய்து வருகிறேன்.
இரண்டு பேரையும் கொன்று விடுவான் சுல்தான்.


சிவாஜியின் இளம் மனைவி சாயிபாய் பேசினாள்.
சுவாமி! நீங்களே ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் வேறு வழி யோசிக்கக் கூடாதா? நீங்கள் தந்திரசாலி ஆயிற்றே!
ம்...ம்... சரி. சக்கரவர்த்தி ஷாஜஹானுக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன்.
என் தந்தை ஷாஜியை வைத்து பீஜப்பூர் சுல்தான் உயிரோடு சமாதி கட்டி வருகிறார். நான் தங்களிடம் விசுவாசம் கொண்டிருப்பதால் பொறாமைப் பட்டு இவ்வாறு கொடுமைப் படுத்துகிறார். தாங்கள் தலையிட்டு நீதி வழங்கும் படி கோருகிறேன்.
— சிவாஜி
விடுதலை பெற்று மகனைக் காண ராஜ்கர் கோட்டைக்கு வந்தார் ஷாஜி.
அப்பா! வாருங்கள்.
உன் சாதுரியத்தினால் தான் விடுதலை கிடைத்தது. ஷாஜஹானின் கண்டனக் கடிதம் கண்டதும் சுல்தான் ஓடி வந்து விடுதலை செய்து பல பட்டங்களையும் அளித்தார்!
நண்பன் தானாஜியின் உதவியோடும் மராட்டிய வீரர்களின் ஒத்துழைப்போடும் சிவாஜி ஒன்றன் பின் ஒன்றாகப் பல பிரதேசங்களையும் கோட்டைகளையும் ஜெயித்து ஒரு ராஜ்யமாக இணைக்கத் தொடங்கினார்.



பிஜபூர் அரண்மனையில் சுல்தான் மனம் நொந்தார். தளபதி அப்ஸல்கானை அழைத்தார்.
அப்ஸல்கான்! மலை எலி மலையைத் துளைத்து விட்டதே!
எலியைப் பிடிக்கப் பூனையை அனுப்ப வேண்டும். சிவாஜியைத் தொலைத்து விட்டு வருகிறேன்!
டெல்லி அரசர் ஔரங்கசீபும் சிவாஜியை வெறுக்கிறார். அதனால் உன்னை நான் தடுக்கப் போவதில்லை. பெரிய படையுடன் கிளம்பு.
சிவாஜியை உயிருடன் பிடித்து வருவேன், அல்லது உடலையாவது கொண்டு வருவேன்.
அப்ஸல்கான் ஸதாராவின் அருகிலிருந்த பிரதாப்கட் கோட்டையைப் பிடிக்க முயன்றான். முடியவில்லை.
தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினான் அப்ஸல்கான்.
மலை எலி என்ற பெயர் பொருத்தமாகத் தான் இருக்கிறது. வளையிலிருந்து வெளியே கிளப்ப முடியவில்லையே!


ஒரு தந்திரம் செய்வோம். கிருஷ்ணஜி பாஸ்கர் ராவ் என்ற பிராமண ரைத் தூது அனுப்பி சிவாஜியை இங்கு வரவழைப்போம்!
கிருஷ்ணஜி பாஸ்கர்ராவை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றுப் பணிந்தார் சிவாஜி.
அப்ஸல்கான் சமாதானம் விரும்புகிறார். நிராயுதபாணியாகத் தங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்.
சுவாமி! நமது புராதன ஹிந்து மதத்தை இந்த நாட்டில் மீண்டும் உயிர்ப்பித்து ஒரு புதிய மஹாராஷ்டிர தேசத்தை உருவாக்க வேண்டுமென்று கனவு கண்டு வருகிறேன்.
முகலாயர்கள் எதிர்ப்பார்களே!
ஆம்! எதிர்ப்பார்கள். ராஜபுதன வீரர்களும் மராட்டிய சிங்கங்களும் கர்நாடக தேசத்து சூரர்களும் கல்வியில் சிறந்த பண்டிதர்களும் பணத்தாசை பிடித்து முகலாயர்களுக்கு அடிமை வேலை செய்வதால் அவர்கள் வெற்றியும் பெறுவார்கள்.
சிவாஜி! நீ மாவீரன் மட்டுமல்ல. மகா புருஷன். என் கண்கள் திறந்து கொண்டன.
அப்ஸல் கானின் அந்தரங்கம் எனக்குத் தெரியாது. ஆனாலும் உன்னைக் கொல்லத் தயங்க மாட்டான்.
எச்சரிக்கைக்கு நன்றி. நாளை மாலை அப்ஸல் கானைச் சந்திக்க நிராயுதபாணியாக வருகிறேன்.

அப்ஸல் கானின் பாசறை நோக்கி சிவாஜி செல்ல அவன் படைகள் தானாஜி தலைமையில் சற்றுத் தொலைவில் இருளில் பதுங்கின.



அப்ஸல்கான் பாசறையில்:










சிவாஜியின் தோளில் கை
வைப்பதுபோல் வந்து
கழுத்தை இறுக வளைத்துக்
கொண்டு கூரிய கத்தியை
சிவாஜியின் இடுப்பில் குத்த
முயன்றான் அப்ஸல்கான்.
சிவாஜி அணிந்திருந்த கவசம்
கத்தியைத் தடுத்தது. அடுத்த
கணத்தில் தாம் அணிந்திருந்த
புலிநகத்தால் அப்ஸல்கானின்
கழுத்தைக் கிழித்து விட்டார்
சிவாஜி.
ஒன்றுமே நடவாதது போல வெளியேறினார்.
இரவோடிரவாக உடன் வந்திருந்த
வீரர்களுடன் பாசறையில்
உல்லாசமாகப் பொழுது போக்கிக்
கொண்டிருந்த வீரர்களைத் தாக்கினர்.
தலைவன் இல்லாத படை
சின்னா பின்னமாயிற்று.


சிவாஜி பல வெற்றிகளையும் சில தோல்விகளையும் சந்தித்தார். முகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப் தக்ஷிண பாரதத்துக்கு ஷைஸ்டகான் என்ற தளபதியை கவர்னராக அனுப்பி வைத்தார். சிவாஜியை அடக்க வேண்டும் என்பதற்காகவே அனுப்பப் பட்ட ஷைஷ்டகான் பூனாவையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் வென்று மராட்டியர்களைத் துரத்தி விட்டான். இரண்டு ஆண்டுகள் மராட்டிய வீரர்கள் அலைந்து திரிந்தனர்.
ஸமர்த்த ராமதாஸ் என்ற மகானிடம் சிவாஜி அடிக்கடி சென்று அருள் ஆசிகளைப் பெறுவது வழக்கம்.
சுவாமி! எத்தனை நாட்கள் இப்படி அலைவேன். என்னைத் தங்கள் சீடனாக அங்கீகரித்துக் கொள்ளக் கூடாதா?
நீ முடி சூடி நாடாளப் பிறந்தவன். அன்னை பவானியின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறாய். சந்நியாசியாகும் எண்ணத்தை விட்டு விடு.
சிவாஜியின் உள்ளத்தில் உறுதி பிறந்தது. அந்நியர்களின் ஆட்சியை எதிர்த்து சுதந்திர ராஜ்யம் நிறுவுவதிலும் வீர சாகஸங்கள் புரிவதிலும் மீண்டும் ஊக்கம் பிறந்தது.
பூனாவில் ஷைஸ்டகான் மாளிகை. அவனைச் சுற்றி எப்போதும் பலத்த காவல்.


மகனுடன் பேசியபடி நடந்தான் தளபதி.
அப்பா! நீஎப்போது சிவாஜியைப் பிடிக்கப் போகிறாய்?
நீயே! கேட்டு விட்டாயா? சீக்கிரத்தில் பிடித்து விடுவேன்.
சிவாஜியைப் பார்க்கணும் போலெ ஆசையா இருக்கு.
எனக்குக் கூட அந்த மலை எலியைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப ஆசை.
ஷைஷ்டகானுடைய அறைக்கு அருகே மாறுவேடத்தில் சிவாஜியுடன் பல மராட்டிய வீரர்.
உங்கள் ஆசை உடனே நிறைவேறுகிறது.
ஷைஷ்டகான் கத்தி வீச்சு மேலே விழாமல் தடுக்க அவன் கட்டை விரல் துண்டித்துப் போயிற்று. ஓட்டமெடுத்தான் தளபதி. காவல் வீரர்களை எதிர்த்துப் பலரை வீழ்த்தி விட்டுத் தப்பி விட்டனர் மராத்திய வீரர்.
சிங்ககர் கோட்டையில் சிவாஜியை மனைவியர் வரவேற்றனர்.
இப்படி ஆபத்தைத் தேடி அலையலாமா?
ஷைஷ்டகானின் தாடியைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினேன். ஓடிவிட்டான். ஆபத்தே இல்லை.


சூரத் நகரம் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கியது. ஆங்கிலேயரும், டச்சுக்காரர்களும் கப்பல்களில் வந்து வாணிபம் செய்து வந்தார்கள்.








சூரத் நகரில் கைப்பற்றிய செல்வங்களுடன் திரும்பினார்கள். தானாஜிக்கு மகிழ்ச்சி.



சிவாஜியின் கொட்டத்தை அடக்க ஔரங்கசீப் ஜெய்சிங் தலைமையில் திலிர்கானையும் வேறு பல வீரர்களையும் அனுப்பினார்.




ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! தேஷ் பாண்டேயும் அவருடைய வீரர்கள் முந்நூறு பேரும் வீரசுவர்க்கம் அடைந்தார்கள். துயரில் ஆழ்ந்தார் சிவாஜி.
அடங்கிப் போகும் நேரம் வந்திருப்பதை உணர்ந்து ஜெய்சிங்கைச் சந்தித்தார் சிவாஜி.
மாவீரரே! வருக!
நல்லது, நீ கைப்பற்றியுள்ள 23 கோட்டைகளை, முகலாய சக்கரவர்த்திக்கு அளித்து விட வேண்டும். தெற்கே படை வீரர்கள் தேவைப்படுகிறார்கள். 5000 வீரர்களை அளிக்க வேண்டும். இதற்கு ஈடு செய்ய பிஜபூரில் நீ வரி வசூல் செய்து கொள்ளலாம்.
விரக்தியுடன் சிவாஜி.
இன்னும் ஏதாவது உண்டா?
நீ ஒரு முறை டெல்லிக்கு வந்து பாதுஷாவைப் பார்க்க வேண்டும்.



நிபந்தனைப்படி சிவாஜி தம் மகனுடன் ஔரங்கசீப்பைக் காணவர...
ஆஹா! மலை எலி வந்திருக்கிறது!
சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு...
இவர்களுடைய சௌகரியத்துக்குக் குறை வேண்டாம். முகலாய சக்கரவர்த்தியின் விருந்தோம்பலைப் புரிந்து கொள்ளட்டும்.
சிவாஜி, சாம்பாஜி, தானஜி மூவரையும் ஒரு மாளிகையில் தங்கச் செய்து ராஜோபசாரம் செய்த போதிலும் தப்பியோட முடியாதபடி காவலில் வைத்தார் சக்கரவர்த்தி.
உணவருந்தாமலிருந்து உடம்பு சரியில்லாதது போல் சிவாஜி நடிக்க...
இந்தக் கூடைகள் எங்கே போகின்றன?
சிவாஜிக்கு உடம்பு சுகமில்லை. இந்தப் பழக் கூடைகளைப் பிராமணர்களுக்குக் காணிக்கையாக அனுப்புகிறார்.
வீரன் தன் வாளால் பழக் கூடையைக் குத்திப் பார்த்தான். செல்ல அனுமதித்தான்.

இவ்வாறு பலநாட்கள் பழக்கூடைகளும், பக்ஷணக் கூடைகளும் வீட்டிலிருந்து போய்க் கொண்டே இருந்தன.





ஐயா! இதென்ன அனுமதி கேட்டு வருமுன் உள்ளே வந்து விட்டீரோ!
பரவாயில்லை துறவியை பின் கட்டுக்கு அழைத்துப் போய் உணவு அளித்து அனுப்பு.
அம்மா! எனக்கு சாப்பாடு மட்டும்தான் கிடைக்குமா? உன் அன்பு?
வந்திருப்பது சிவாஜி என உணர்ந்ததும் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்.
துரும்பாக இளைத்து விட்டாயே. இத்தனை காலம் எங்கே இருந்தாய்?
துறவறம் எப்படி இருக்கிறது என்று பார்த்தேன். பரம சுகம்! கடமை அழைக்கவே திரும்பி விட்டேன்.
1674 ஆம் ஆண்டில் சிவாஜி மகாராஷ்டிர தேசத்தின் அரசராக முடி சூடிக் கொண்டார்.
சத்ர பதி சிவாஜிக்கு ஜே!
பவானி மாதாவுக்கு ஜே!

சித்திரப் புதிர்!


ஆழி

1 ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு மாதிரியான ஓவிய முறை உண்டு. இது எந்த தேசத்து ஓவியம்?






2 நடுவில் உள்ள வைரக் கல்லை அடைய எந்த வழியாகச் செல்லலாம்?



3 இங்கே நிழலுருவில் இருப்பவர் யார் என்று தெரிகிறதா?

4 இதை நான்கு சம வடிவங்களாக வெட்ட வேண்டும். எப்படி?





5 திருமாலின் 10 அவதாரங்களில் இதுவும் ஒன்று. இது என்ன அவதாரம் என்று உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா?

விடைகள் வேறு பக்கம்

பனிமனிதனுடன் பத்து நொடிகள்



எம். சோலையன்

"ஹலோ! நான்தான், பஞ்சம்பட்டி பஞ்சு கத்துகிறேன்... நான் கத்துவது யார் காதிலாவது விழுகிறதா? யாராவது வாங்களேன்!"

இப்படிக் கத்திக் கத்தி என் தொண்டையும் வறண்டு போய்விட்டது. சும்மாவா பின்னே? இரண்டு மணி நேரமாக அல்லவா கத்திக் கொண்டிருக்கிறேன்! என் தங்கை மஞ்சு மயங்கிப் போய் உணர்வற்றுப் படுத்துக் கிடப்பதைப் பார்க்கிறபோது என் நெஞ்சம் வேறு பதைபதைக்கிறது! என்ன செய்வேன் நான்? எப்படி அவளைக் காப்பாற்றுவேன்?

எங்கள் அம்மா சொல்லைத் தட்டி வந்தது தப்பாகப் போயிற்று! "அடே பஞ்சு! மலை ஏறணும்னு ஆசைப்பட்டா நம்ம பஞ்சம்பட்டி மலையிலே பத்துத் தடவை ஏறி இறங்கிப் பார்! இமயமலைக்கு எல்லாம் போகாதேடா கண்ணு! ஆபத்து அதிகம்!" என்று தடுத்துப் பார்த்தாள்.

ஹூம்... கேட்டேனா நான்?

"அட, போம்மா! ஆக்ஸிஜன் சிலிண்டர் கூட இல்லாமப் பூ டோர்ஜிங்கிறவர் எவரெஸ்ட்டின் உச்சிக்கே போய் வந்திட்டார்! நான் ஏறப் போறது கஞ்சன்ஜங்கா சிகரம் தானே! பயமில்லை!" என்று எதிர்த்து வாதாடினேன்.

"கஞ்சன் ஜங்காவோ, கருமிஜங்காவோ? என் வயிற்றில் புளியைக் கரைக்கிறாய்!" என்று பதறினாள் அம்மா.

அப்போது.. "அண்ணா! நானும் உன் கூட வருகிறேன்!" என்று குரல் கொடுத்தாள் தங்கை மஞ்சு.


"நீயா?" என்று நான் மலைத்தேன்.

"என்ன அண்ணா, நம்ம இந்தியப் பெண் பச்சேந்திரி பால் எவரெஸ்ட்டின் உச்சிக்கே போய் வரலில்லையா?" என்று அவள் ஒரு போடு போட்டாள்.

அப்புறம் நான் மறுத்துப் பேசவில்லை. அவளும் என்னைப் போல் என்.சி.சி. குழுவில் சேர்ந்து மலை ஏறக் கற்றுக் கொண்டவள் ஆயிற்றே!

இதற்கெல்லாம் காரணம் குர்ணம் சிங் என்னும் முன்னாள் இராணுவ வீரர் ஆவார். ஆம்! அவர்தாம் பள்ளிச் சிறுவர் சிறுமியர் சிலரைக் கஞ்சன் ஜங்கா சிகரத்திற்கு அழைத்துப் போவதாக விளம்பரம் செய்திருந்தார்.

எங்கள் அதிர்ஷ்டமா அல்லது துரதிர்ஷ்டமா என்று இப்போது எனக்குச் சொல்லத் தெரியவில்லை!



விட்டன! அச்சிகரங்கள் எப்படிக் காட்சி அளித்தன?

''வானம் என்கிற வீரன் உயர்த்திப் பிடித்திருக்கும் வெள்ளிக் கேட யங்கள் அவை!'' என்ருள் மஞ்சு.

''இயற்கையே ஆண்டவனுக்குக் கட்டியிருக்கும் வெண்பனிக் கோபு ரங்கள்!'' என்றேன் நான்.

அப்போது—

'வீல்!' என்று மஞ்சு அலறினுள்.

'பனிக்கரடியோ?' என நான் சுற்று முற்றும் நோட்டம் விட்டேன்!

கஞ்சன் ஜங்கா செல்லும் பத்து சிறுவர் அடங்கிய குழுவில் எனக்கும் மஞ்சுவிற்கும் இடம் கிடைத்து விட்டது.

இடம் கிடைத்ததில் தப்பில்லை. தலைவர் குர்னும்சிங்கிற்குத் தெரியாமல் காலை வேளையில் கூடாரத்தை விட்டு வெளியே வேடிக்கை பார்க்க வந்ததுதான் ஆபத்திற்குக் காரணமாகிவிட்டது!

காலை நேரத்தில் பொழிகின்ற பனி மழையில் நனைந்தபடி நானும் மஞ்சுவும் நடந்து கொண்டிருந்தோம். தூரத்தில் தெரியும் வெண்பனிச் சிகரங்கள் எங்களுக்கு என்னென்ன கற்பனைகளையோ தூண்டி

ஆனால் நடந்தது வேறு.

பெரும் பள்ளம் ஒன்றில் மஞ்சு விழுந்து கிடந்தாள். தூரத்துச் சிகரங்களையே பார்த்து நடந்தவள் அருகில் இருந்த பள்ளத்தைக் கவனிக்கத் தவறி விட்டாள்!

நல்லவேளையாக என் கையில் நீண்ட கயிறு இருந்தது. அதன் ஒரு முனையைப் பள்ளத்தில் போட்டேன்.

''மஞ்சு! பயப்படாமல் அதைப் பிடித்து ஏறு!'' என்று ஆறுதல் குரல் கொடுத்தேன்.

மஞ்சுவும் அதைப் பற்றிக்கொண்டு ஏற ஆரம்பித்தாள். ஆனல் அவள்

பாதி தூரம் ஏறுவதற்குள் என்னால் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு சமாளித்து நிற்க முடியவில்லை.

எதிர்பாராத ஒரு கணத்தில் என்னையும் உள்ளே இழுத்துக் கொண்டு பள்ளத்தில் மீண்டும் விழுந்தாள் மஞ்சு!

ஆக இருவரும் பள்ளத்தில் மாட்டிக் கொண்டோம். என் தவறு இப்போதுதான் புரிந்தது. கூடாரத்திலிருந்து தலைவர் குர்னாம்சிங்கை அழைத்துவந்து தங்கையை விடுவித்திருக்கலாமே! நானாக முயன்றது ஆபத்தில் அல்லவா முடிந்துவிட்டது!

இந்த முறை பள்ளத்தில் விழுந்த மஞ்சு மயங்கிப் போய்விட்டாள்! அதனால்தான் இப்படிக் கத்திக் கொண்டிருக்கிறேன்!

"ஹலோ! நான்தான் பஞ்சம்பட்டி பஞ்சு கத்துகிறேன்! மஞ்சுவும் நானும் இங்கே பள்ளத்தில் விழுந்துகிடக்கிறோம்! யாராவது காப்பாற்றுங்களேன்!"

* * * *

கத்திக் கத்தித் தொண்டை கட்டிக் கொண்டு விட்டது. இனி கத்தவும் முடியாத நிலை! மணி என்ன இருக்கும்? கடிகாரத்தை உற்றுப் பார்க்கும்போது ஒரே இருட்டாகத் தெரிகிறது! பசி! பயம் வேறு!

மஞ்சுவின் தலையை என் மடியில் கிடத்திய வண்ணம் கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறேன்.

அப்போது யாரோ என் தோள் மீது கைவைக்கிறார்கள்!

"பஞ்சு! பயப்படாதே! நான் வந்து விட்டேன்!"

ஆ! தலைவர் குர்னாம்சிங்கின் குரல் அல்லவா இது!

திரும்பிப் பார்க்கிறேன். களைப்பும் பயமும் போன இடம் தெரியவில்லை. குர்னாம்சிங் என் கண்களுக்கு எவரெஸ்ட் சிகரமாக உயர்ந்து நிற்கிறார்.

"கமான்! மை டியர் பாய்! லெட் அஸ் கிளைம்ப்!" என்கிறார் குர்னாம்சிங். மஞ்சு அவர் தோளில் கிடக்கிறாள். பள்ளத்தில் கயிற்றேணியில் என் காலை வைத்து மேலே பார்க்கிறேன். எங்கள் குழுவைச் சேர்ந்த மற்ற சிறுவர்களின் தலைகள் மேலே தெரிகின்றன!

கூடாரத்திற்குத் திரும்பி வந்ததும் மஞ்சுவிற்கும் மயக்கம் தெளிந்து விடுகிறது. சூடான தேநீரை அருந்தி முடித்ததும் தலைவர் எங்கள் இருவரையும் கண்டிக்கிறார்.

"இனி இப்படித் தனியே வெளியே போவதில்லை!" என்று நாங்கள் உறுதிமொழி கொடுக்கிறோம்.

* * * *

மறுநாள் விடிகாலை நேரம். முதல் நாள் கொடுத்த உறுதிமொழியைக் காற்றில் பறக்கவிடுகிறேன் நான். எல்லோரும் தூங்குகிற நேரத்தில் எழுந்து வெளியே நடக்கிறேன். நடந்து நடந்து வெகுதூரம் வந்துவிடுகிறேன்.

முதல்நாள் இரவில் ஷெர்பாக்கள் (சுமை தூக்கும் ஆட்கள்) பனிமனிதனைப் பற்றிப் பேசிய பேச்சு நினைவுக்கு வருகிறது.

பனிமனிதனின் கைகள் முழங்காலைத் தொடும் அளவு நீளமாக

இது ஒரு பாட்டு!

மேலே செல்ல ராக்கெட்டு.
பஸ்ஸில் போக டிக்கெட்டு.
காய்கறி வாங்க மார்க்கெட்டு.
கவாஸ்கர் ஆடுவது கிரிக்கெட்டு.
மார்ச்சில் வருவது பட்ஜெட்டு.
மாடியில் ஏறப் படிக்கட்டு.
இரும்பை இழுப்பது மாக்னெட்டு.
எனக்குப் பிடித்தது பிஸ்கட்டு.

—இரா. ஜெயதேவ் (3496),
திண்டுக்கல்—1.



இருக்குமாம்!

பனி மனிதனை யாரும் பிடிக்க முடியாதாம்! ஓட்டத்தில் அவன் மானையும் தோற்கடித்துவிடுவானாம்! ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொண்டால் அவனுக்குத்தான் பரிசு கிடைக்குமாம்!

பனிமனிதனைப் பார்க்க முடியுமா?

ஒருகணம் என் கால்கள் அசைவற்று நிற்கின்றன. ஆ, இதென்ன! பெரும் பனிப்பாறை அசைந்து முன்னேக்கி வருகிறதே! பனிப்பாறைச் சரிவு (avalanche) என்பது இதுதானு? என் கால்கள் நகர மறுக்கின்றனவே! எப்படி நான் தப்புவேன்?

நழுவி விழும் பாறை மிக நெருங்கி வருகிறது!

அதோ—

மிக நெடிய உருவம் ஒன்று ஓடி வருகிறதே! பார்ப்பதற்கு மனிதக் குரங்கைப்போல் தோற்றம் அளிக்கிறதே! பனிமனிதனே?

''ஹோ!'' என்ற குரலுடன் அவ்வுருவம் என்னைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு ஓடுகிறது. ஒரு கணம் என் மூச்சு நின்றுவிட்டது போன்ற பிரமை!

சில்லிட்டுப் போயிருந்த உடல் இப்போது கதகதப்பை உணர்கிறது.

மானின் வேகமா அது? இல்லவே இல்லை! ஜெட் விமானத்தின் வேகமாக இருக்குமா? இல்லவே இல்லை! ராக்கெட்டின் வேகமாக இருக்கலாமோ? அப்படித்தான் இருக்க வேண்டும்!

பனிமனிதன் எதையும் தின்பவனுயிற்றே! என்னையும் விழுங்கிவிடுவானே?

ஆனல் இதென்ன! எங்கள் கூடாரத்தின் முகப்பில் என்னை இறக்கி விடுகிருனே! நான் திரும்பிப் பார்ப்பதற்குள் காற்றைப் போல் கடுகி மறைந்து விடுகிருன் பனிமனிதன்!

பத்து நொடிக்குள் பெரும் தூரத்தைக் கடந்து வந்து விட்டானே! எங்கிருந்தாலும் அவன் வாழ்க!

கூடாரத்திலிருந்து தலைவர் எட்டிப் பார்க்கிருர். ''எங்கே போய் விட்டு இப்படி மூச்சிரைக்க ஓடி வருகிருய்?'' என்று கேட்கிருர்.

''ஓடி வருகிறேனு? ஓடி வந்தது பனிமனிதன் அல்லவா! பனிமனிதன்! பனிமனிதன்!'' என்கிறேன் நான்.

''பனிமனிதனு?'' என்று நகைக்கிருர் தலைவர்.

நான் சொல்லும் கதையை யாரும் நம்பத் தயாராக இல்லை.

பனிப்பாறை பெயர்ந்து வந்தது உண்மையாக இருக்கலாமாம். ஆனல் பனிமனிதன் என்னைச் சுமந்து வந்து காப்பாற்றி இருக்க முடியாதாம்! நான்தான் விரைந்து ஓடி வந்து உயிர் தப்பினேனும்! பனிமனிதன் என்பது என் மனப்பிரமையாம்!

நம் உடம்பில் அட்ரீனல் என்ருெரு சுரப்பி இருக்கிறதாம். இது ஆபத்துக் காலங்களில் அதிகமாகச் சுரந்து உடலுக்கு மிகுதியான சக்தியைத் தருகிறதாம்!

இதை நான் நம்பப் போவதில்லை. பனிமனிதனை நான் பார்த்தேன். அவனல் உயிர் தப்பினேன். இதுதான் உண்மை.

பனிப்பாறைகள் தொடர்ந்து இடம் பெயர்ந்து உருண்டு வர ஆரம்பிக்கின்றன. எங்கள் குழு வெற்றிகரமாக பின்னேக்கி இறங்க ஆரம்பிக்கிறது.

ஓ! கஞ்சன் ஜங்கா! எங்களை நீ இப்போது வெற்றிகண்டுவிட்டாய்! போகட்டும். நாங்கள் பெரியவர்களாகி மீண்டும் திரும்பி வருவோம். அப்போது கட்டாயம் உன் உச்சியில் ஏறி நடனமாடி வெற்றிமாலை சூடாமல் போக மாட்டோம்! இப்போதைக்குப் பனிமனிதனின் இனிய நினைவுகளுடன் நான் போகிறேன்.



சங்கிலியை அவிழ்ப்பவர்க்கு
சலாம் நூறு போடுவேன்.
புகைப்படம்: எஸ். ஜி. சேஷகிரி.



நான் வளர்க்கும் பொம்மைக்கிளி
நடக்காது; பறக்காது.
புகைப்படம்: எஸ். ஜி. சேஷகிரி.



புகைப்படம் எடுக்கிறுரே — இந்தப்
புது போட்டோகிராபர் யார்?

புகைப்படம்: கோவை சீதாராம்.



ரேடியோ வெல்லாம்
ரிப்பேர் செய்வேனே!

புகைப்படம்: கோவை சீதாராம்.







கெண்டை மீன், கெளுத்தி மீன், சுறு மீன் — இப்படி மீன் வகைகளைப் பற்றிக் கூறும் புத்தகம் அல்ல இது. 14 கருத்து மிக்க கதைகளைக் கொண்டதே இப்புத்தகம்.

''இந்த மனிதர்களுக்குத் தங்கள் பிள்ளைகளை விட்டுப் பிரிய மனம் வருமா? நம்மை மட்டும் செடி கொடி களிலிருந்து பிரிக்கிறார்களே! இது நியாயமா?'' என்று கேட்கிறது முல்லை.

''மரம் பழம் தருகிறது. அதைத் தானே வைத்துக் கொள்கிறதா? கார் மேகம் கடலிலிருந்து தண்ணீரை எடுத்து வருகிறதே, அதைத் தானே வைத்துக் கொள்கிறதா? பிறருக்குத் தானே கொடுக்கிறது! அதுபோலத் தான் நாமும் பிறருக்கு அழகூட்டுவ தற்காகவும், மணம் கொடுப்பதற் காகவும்தானே பூமியில் வந்து பூத்தி ருக்கிறோம்?'' என்றெல்லாம் கூறி முல்லையின் மனத்தை மாற்றுகிறது ரோஜா.

கண்கவரும் அட்டையும், நேர்த்தி யான அச்சும், கதைக்குக் கதை பட மும் கொண்ட இப்புத்தகத்தை எழுதி யவர்: வ. தேனப்பன். வெளியிட் டவர்: தேன் வள்ளியம்மைப் பதிப் பகம், 30, வாடியார் வீதி, தேவ கோட்டை, 623 302.
விலை: ரூ. 6.25.

இதழ்கள் பலவாய் விரிந்தாலும்
இணைந்த மலரோ ஒன்றுதான்!
புதுப்புது ராகம் பிறந்தாலும்
புல்லாங் குழலோ ஒன்றுதான்!

பக்கம் பலவாய் இருந்தாலும், படிக் கும் சுவடி ஒன்றுதான். அதுபோல, மக்கள் பற்பல மதத்தினராய் இருக்க லாம்; பற்பல நாட்டினராய் இருக்க லாம். ஆனாலும், மனிதகுலம் ஒன்று தான் என்கிறார் கவிஞர் பல்லவன்.

அம்மா, பட்டாம்பூச்சி, அழகைப் பார், வேடந்தாங்கல், மாமல்லபுரம் போன்ற சிறந்த பல பாடல்களுடன், ஆத்தி சூடி போல அகரச் சுவடி ஒன் றையும் இப்புத்தகத்தில் காணலாம். அத்துடன் ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு படம் உள்ளது.

வெளியிட்டோர்: குமணன் பதிப் பகம், தமிழ்க்குடில், 29, திருவள் ளுவர் நகர், திருக்கழுக் குன்றம் — 603 109. விலை: ரூ. 6/—.

திலகர், காந்தி, நேரு, ராஜாஜி, காமராஜ், இந்திராகாந்தி முதலிய 15 தலைவர்களைப்பற்றிய புத்தகம் இது. முதலில் ஒரு தலைவரின் வாழ்க் கைச் சுருக்கம் அதன்பிறகு அத்தலைவ ரின் வாழ்க்கையில் நடந்த முக்கிய மான நிகழ்ச்சி, அந்நிகழ்ச்சி முடியும் போது திருக்குறளிலிருந்து ஒரு பொருத்தமான குறள் — இப்படிச் சிறந்த முறையிலே எழுதித் தந்திருக்கிறார் புலவர் நாக. சண் முகம். ஒவ்வொரு தலைவரின் பட மும் நல்ல முறையிலே வரையப்பட் டிருக்கிறது.

வெளியிட்டோர்: வானதி பதிப் பகம், 13, தீனதயாளு தெரு, தியாக ராய நகர், சென்னை—17, விலை: ரூ. 5/—



சீனு அனாதையா?

கே. ஜெயலக்ஷ்மி

அம்மா அடுப்படியில் வேலையாக இருந்தாள். ரகு அங்கே வந்தான்.

''அம்மா, பரீட்சைக்குப் பணம் கட்டுவதற்கு இன்றைக்குத்தான் கடைசி நாள். பணம் தருகிறாயா?''

அம்மா பெட்டியில் வைத்திருந்த ரூபாயை எடுத்து ரகுவிடம் கொடுத்தாள். ''இந்தாடா...! ராகு காலத்திற்குள் கட்டிவிடு.''

''என்னம்மா இது! பதினைந்து ரூபாய்தானே கொடுத்திருக்கிறாய்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான் ரகு.

''என்னடா... அதுதானே பழக்கம்? அதுவும் விலை ஏறிவிட்டதா?''

''இல்லையம்மா... ஒருத்தருக்குப் பதினைந்து ரூபாய்தான். சீனுவுக்கும் கட்ட வேண்டுமே...! இன்னொரு பதினைந்து ரூபாய் கொடு அம்மா!''

''சரிதான் போடா. அவனுக்குக் கட்ட வேண்டாம்.''

''ஏம்மா...?''

''அந்த அனாதைப் பையனுக்குப் பரீட்சை ஒரு கேடா? சம்பளம் இல்லாமல் இருக்கிறதே என்று பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். அதுவே அதிகம். பரீட்சைக்குவேறு பணம் கட்ட முடியுமா என்ன...?'' அம்மா அரிசியைக் களைந்து உலையில் போட்டபடியே அலட்சியமாகப் பேசினாள்.

''சீனு பாவம்மா. அவன் என்னை விட நன்றாகப் படிப்பான். எஸ்.எஸ்.எல். சி தானேம்மா கடைசிப் பரீட்சை...? இதுக்கு மட்டும் கட்டிடலாம்மா...'' என்று ரகு கெஞ்சினான்.

''முடியாது! முடியாது! போய் உன் வேலையைப் பாரு.'' அம்மா முடிவாகச் சொல்லி விட்டாள்.

ரகுவுக்கு அழுகை அழுகையாக வந்தது. துயரத்துடன் அறையை விட்டு வெளியே வந்தான்.

சீனு அவன் அருகில் வந்தான்.

''ரகு! நீ எதற்காக அழவேண்டும்? நான் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து என்ன பிரயோசனம்? நிறையப் பணம் செலவு செய்து +2 வில் சேர்த்து என்னைப் படிக்க வைக்க எனக்கு யார் இருக்கிறார்கள்? அம்மா சொன்னது போல் அனாதையான எனக்குப் பரீட்சை எதற்கு? பேசாமல் உனக்கு மட்டும் பரீட்சைக்குப் பணம் கட்டிவிடு'' என்றான். அவன் குரல் தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் நிறைந்தது.

''என்னடா சீனு! அம்மா கடைசி சமயத்தில் இப்படிக் கையை விரிப் பாங்க என்று நான் நினைக்கவேயில்லை. நீ நம்ப பள்ளிக்கூடத்திற்கே முதல் மாணவனாக வருவாய் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீ பரீட்சையே எழுதாமல் இருந்தால் எவ்வளவு கேவலம்?'' ரகு ரொம்பவும் வருத்தப்பட்டான்.

''அதற்கென்ன செய்கிறது! நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்'' நண்பனுக்கு ஆறுதலாக இருக்கட்டுப்

என்று சொன்னானே தவிர, சீனுவுக்கு உள்ளூற வருத்தமாகத்தான் இருந்தது.

"ஒன்று செய்தால் என்ன?"

"என்ன சொல்லு...?"

"உனக்கு மட்டும் பரீட்சைக்குப் பணம் கட்டிவிடுகிறேனே..."

"ஐயையோ! வேண்டாம் ரகு! உங்கம்மாவுக்குத் தெரிந்தால் என்னைக் கொன்னுடுவாங்க..." அவசரமாகச் சொன்னான் சீனு.

"அம்மாவிடம் 'எனக்கு மட்டும்தான் பணம் கட்டினேன்' என்று சொல்லி விட்டால் போச்சு"—உற்சாகமாகச் சொன்னான் ரகு.

"வேண்டாம். அது பெரிய தப்பாகும்!"

"உனக்குப் பரீட்சைக்குக் கட்டப் பணம் தர மாட்டேன் என்று அம்மா சொல்வது மட்டும் தப்பு இல்லையா?"

"இல்லை ரகு. நான் அனாதைப் பையன்தானே?"

ரகு யோசனையில் ஆழ்ந்தான்.

சீனு தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றான்.

❊ ❊ ❊

பதினைந்து ரூபாய்களைத் தன் ஆசிரியரிடம் கொடுத்து விட்டு, சீனுவின் பெயரைச் சொன்னான் ரகு.

"ரகு! நீ பணம் கட்டவில்லை? இன்றுதானே கடைசி நாள்!"

"இல்லை சார்."

"ஏன் ரகு!"

"எனக்கு மட்டும்தான் கட்டச் சொல்லி எங்கம்மா பணம் கொடுத்தாங்க சார். சீனு நன்றாகப் படிக்கிறவன். அவனுக்குக் கட்டாமல் எனக்கு மட்டும் கட்டுவதற்கு எனக்கு வருத்தமாக இருக்கிறது சார்...! அதனால்தான்..." மேலே பேச முடியாமல் விம்மினான் ரகு.

"உனக்குச் சீனுவின் மேல் இருக்கும் அன்பைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன் ரகு. பரவாயில்லை. சீனு ரொம்பப் புத்திசாலிப் பையன். அவன் கண்டிப்பாகப் பரீட்சை எழுதத்தான் வேண்டும். அவனுக்காக நான் பரீட்சைக்குப் பணம் கட்டுகிறேன். உன் பணத்தை உனக்கே கட்டலாம்—" என்று கூறினார் ஆசிரியர்.

"வேண்டாம் சார்! சீனுவுக்கு யாரிடமிருந்தும் இலவசமாக எதையும் வாங்கிக் கொள்ளப் பிடிக்காது, சார்."

"ஆமாம் சார்! நான் ஏழைதான், அனாதைதான். ஆனால்..." வேகமாக அங்கு வந்து நின்ற சீனு சொன்னான்.

"புரிகிறது சீனு! ரொம்ப சந்தோஷம். இதைக் கடனாக வைத்துக் கொள். பரீட்சை முடிந்து கோடை விடுமுறை விடுவார்கள் அல்லவா? அப்போது என் வீட்டுக்கு வந்து உன்னால் முடிந்ததைச் செய்து... கடனைத் தீர்த்து விடு... சரிதானே...?" என்று அன்புடன் கேட்டார் ஆசிரியர்.

"அப்படியே செய்கிறேன் சார்!" என்றான் சீனு பணிவாக.

"வாடா..." ரகு உற்சாகமாகச் சீனுவின் தோள்மீது கைகளைப் போட்டுக் கொண்டு நடந்தான்.

❊ ❊ ❊

பரீட்சை முடிந்தது.

கோடை விடுமுறையும் வந்தது.

சொன்ன சொல் தவறாமல் சீனு, தன் ஆசிரியரின் வீட்டுக்குப் போனான். அங்கே ஆசிரியர் மண்வெட்டியால் செடிகளுக்குக் கொத்திவிட்டுக் கொண்டிருந்தார்.

சீனுவும் அவருடன் சேர்ந்து தோட்ட வேலை செய்தான்.

வீட்டிற்குத் தேவையான சாமான்களைக் கடைகளிலிருந்து வாங்கி வந்து கொடுத்தான்.

துவைத்த துணிகளை இஸ்திரி போட்டு வைத்தான்.

விடுமுறை பஞ்சாகப் பறந்தது.

❊ ❊ ❊

பரீட்சை முடிவுகள் வெளியாயின.

சீனு மாகாணத்திலேயே • முதல் மாணவனாகத் தேர்வு பெற்றிருந்தான்.


"சீனுதான் முதல் மாணவன்! சீனுதான் முதல் மாணவன்" என்று உற்சாகமாகக் கத்திக் கொண்டே ஓடி வந்தான் ரகு.

"அவனுக்குத்தான் நான் பரீட்சைக்குக் கட்டப் பணமே கொடுக்கவில்லையே...! அவன் எப்படியடா பாஸ் பண்ணினான்...!" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் அம்மா.

"நீ கட்டா விட்டால் என்ன? அவன் ரொம்ப நன்றாகப் படிக்கிறவனாச்சே! அதனால் எங்க சார் பணம் கட்டினார்" என்று கூறினான் ரகு.

"அப்ப அவரையே உனக்கும் கட்டச் சொல்லியிருப்பதுதானே?"

"சொல்லியிருக்கலாம்... ஆனால், நான் சீனு மாதிரி அனாதைப் பையனாகவுமில்லை! புத்திசாலிப் பையனாகவு



...யில்லையே..." என்றான் ரகு ஏளனமாக.

"ஓர் அனாதைப் பையனுக்கு இத்தனை புத்திசாலித்தனம் எப்படித்தான் வந்ததோ, தெரியவில்லை...!" என்று வியந்தாள் அம்மா.

* * *

ஒரு தினசரிப் பத்திரிகை, வழக்கம் போல் இந்த வருடமும் முதல் மாணவனாக வந்திருந்த சீனுவுக்கு இரண்டாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு கொடுத்தது. இன்னொரு இலக்கியப் பத்திரிகை மாநிலத்திலேயே தமிழில் முதலாவதாகத் தேறியிருக்கிறான் என்பதற்காக ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு கொடுத்தது சீனுவுக்கு.

மூவாயிரம் ரூபாய்களையும் அப்படியே எடுத்து வந்து ரகுவின் அம்மாவிடம் கொடுத்துவிட்டு அவள் கால்களில் விழுந்து வணங்கி எழுந்தான் சீனு.

"என்னை ஆசீர்வாதம் செய்யுங்கம்மா."

"ரொம்ப சந்தோஷம் சீனு. இதையெல்லாம் நீயே எடுத்து வைத்துக் கொள். உன் மேல் படிப்புக்கு உதவும்" என்றாள் ரகுவின் அம்மா.

"இதை நீங்கதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் அம்மா. என் மேல் படிப்புக்கான செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்வதாக வாக்களித்திருக்கிறது" என்றான் சீனு அடக்கமாக.

"உனக்கு இரண்டு வேளை சோறு போட்டுவிட்டு, இடுப்பொடிய வேலை வாங்கினவள் நான். உனக்காகப் பரீட்சைக்குக் கட்டுவதற்கு ஒரு பதினைந்து ரூபாய் செலவு செய்யாதவள் நான். இத்தனை பணத்தையும் எடுத்துக் கொள்வதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது? வேண்டாம், சீனு. இதை நீயே எடுத்துக் கொள். உன விருப்பம் போல் செலவு செய்து கொள்" என்றாள் அம்மா கலங்கிய கண்களுடன்.

"அம்மா சொல்வதுதான் சரி." என்றான் ரகுவும்.

"அம்மா! தயவுசெய்து என்னை உங்களுடைய மகனாக ஏற்றுக் கொள்ளுங்க. அந்நியனாக எண்ணி ஒதுக்கிடாதீங்க. இதையெல்லாம் கொண்டு போய்க் கொடுக்க எனக்கு உங்களை விட்டால் வேறு யார் இருக்காங்க...? நான்... நான்... அனாதைப் பையனாச்சே!" என்று வாய் விட்டு அழுதான் சீனு.

"இல்லை சீனு! நீ அனாதைப் பையனில்லை. என் பையன்தான்! என் பிள்ளையேதான்! என்னை... என்னை... நீதான் உன் அம்மாவாக ஏத்துக்கணும் சீனு..." என்று அரற்றிய ரகுவின் அம்மா சீனுவைத் தன் அருகில் இழுத்து அன்புடன் அணைத்துக் கொண்டாள். தன் புடவைத் தலைப்பால் அவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைப் பரிவுடன் துடைத்து விட்டாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ரகுவின் கண்களிலும் கண்ணீர் பெருகியது. ஆனால், அதை யாரும் துடைக்க முன் வரவில்லை. ஏனென்றால், அது ஆனந்தக் கண்ணீர்!



அம்புலியில் அணுகுண்டு

கல்யாண வெங்கடேசன்

அமெரிக்காவிலுள்ள 'ஹூஸ்டன்' நகரம் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. விஞ்ஞானிகள் ராக்கெட்டைச் செலுத்தும் கருவியுடன் ஒன்றிக் கலந்து, தங்களை மறந்து வேலையிலாழ்ந்திருந்தனர். உலகமே அவர்கள் செயல்களை மிக ஆர்வமுடன் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது. எவ்வளவோ தடவை ராக்கெட் செலுத்தப்பட்டிருந்தாலும், இந்தத் தடவை அதனுடைய முக்கியத்துவம் மிகவும் பெரிது. ஆம்... சந்திரனில் அணுகுண்டை வெடிக்க ராக்கெட் தன் வயிற்றுக்குள் அணுகுண்டைச் சுமந்து புறப்படத் தயாராக இருந்தது. 'டென்,' 'நைன்,' 'எய்ட்,' 'செவன்,' 'சிக்ஸ்,' 'பைவ்,' 'போர்,' 'த்ரீ,' 'டூ,' 'ஒன்,' 'ஜீரோ.' இதோ பிரும்மாண்டமான ஓசையுடன் ராக்கெட் சந்திரனை நோக்கிப் புறப்பட்டு விட்டது, அணுகுண்டைச் சுமந்து கொண்டு.

இந்திரசபை சிறிதுநேரம் செயலிழந்து நின்றது.

''தேவேந்திரா, அபயம்! அபயம்..! சந்திர மண்டலத்தைக் காப்பாற்று.''

சந்திராதிபதியின் கூக்குரல் நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

''சந்திரா...! என்ன நடந்து விட்டது? ஏன் இந்த அவலக் குரல்? அவசரப்படாமல், பதறாமல் நிதானமாகச் சொல்.''


தேவேந்திரன், சந்திரனை இருக்கையில் அமர்த்தி, தானும் பக்கத்தில் அமர்ந்தார். இந்திர சபையில் உள்ளவர்களுக்கு என்ன விஷயம் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தாலும், சபையைக் கலைத்துவிட்டு இந்திரன் எல்லோரையும் போகச் சொல்லி விட்டதால், வெளியே ஆங்காங்கு சிறு சிறு கூட்டமாகக் கூடி, தங்களுடைய யூகங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

சந்திரன் தழுதழுத்த குரலில் சொல்ல ஆரம்பித்தார்.

''தேவேந்திரா, என்னவென்று சொல்வேன்! இந்தப் பூலோகவாசிகளுக்கு அபரிமிதமான மூளையை பிரமன் படைத்தாலும் படைத்தார். இப்பொழுது அவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பயங்கரமான அழிவுக்கருவிகளைக் கண்டுபிடித்து விட்டு, அதைப் பரீட்சை செய்ய இடம் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

''சந்திரா, அதைப்பற்றி நமக்கென்ன?... நீ சொல்வதும், உன் பதற்றமும் எனக்கு விளங்கவில்லையே! விளக்கமாகச் சொல்.''

''தேவேந்திரா, இப்பொழுது அவர்கள் மிகவும் சக்தி வாய்ந்த, இதுவரை செய்த அணுகுண்டைக் காட்டிலும் நூறு மடங்கு சக்தி வாய்ந்த, அணுகுண்டைச் செய்திருக்கிறார்கள். அதைப் பரீட்சை செய்யப் பூமண்டலத்தில் முடியாதாம். சந்திர மண்டலத்தில் வெடிக்கச் செய்து சோதனை செய்யப் போகிறார்களாம். அதைச் சுமந்து கொண்டு ஒரு ராக்கெட் கனவேகமாக வந்து கொண்டிருக்கிறது!''



ராமு: ஏண்டா கோழிக்குச் சுடு தண்ணிகொடுக்கறே?
சோமு: அவிச்ச முட்டையா இடட்டுமேன்னுதான்!

உதயம்.

''சந்திரா, என்ன பிதற்றுகிறாய்? நம்முடைய ஆயுதங்களுக்கு இல்லாத சக்தியா, அந்த அணுகுண்டுக்கு? அப்படி என்ன பிரமாதமான சேதம் ஏற்படப் போகிறது?''

''தேவேந்திரா! உங்களுக்கு விஷயமே தெரியாது போல் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் கணக்கு இருக்கிறது. சந்திரமண்டலத்துக்கு மொத்தம் மூன்று அணுகுண்டுகளாம். பிறகு அவ்வளவுதான் சந்திரமண்டலம்! இப்படி இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அவ்வளவு லோகங்களுக்கும் கணக்கிருக்கிறது. அவை எல்லாம் சரிதானா என்ற பரிசோதனையின் முதல் கட்டம்தான் இது! உடனடியாக நாம் ஏதாவது செய்தால் தான் சந்திரமண்டலம் பிழைக்கும்.''

''சந்திரா, உன் பயம் எனக்கு இப்பொழுது நன்கு புரிகிறது. ஆனால், என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை. வா, புறப்படு. உடனடியாகச் சென்று மும்மூர்த்திகளிடம் சொல்வோம்.''

இந்திரன், சந்திரன், உட்பட தேவர்கள் கூட்டம் புறப்படுகிறது.

* * *

ராக்கெட் பயங்கரமான வேகத்துடன் காற்று மண்டலத்திலிருந்து சூன்ய மண்டலத்தில் பிரவேசிக்கிறது. எதிர்ப்பட்ட சிறுசிறு விண்கற்களைத் தூள் தூளாக்கிக் கொண்டு, அக்னி போன்ற ஜ்வாலையை வெளியிட்டுக்கொண்டு தன்னுடைய கதியில் விரைந்து சென்று கொண்டிருக்கிறது.

புவியில், 'ஹூஸ்டன்' நகரத்து விஞ்ஞானிகள் ராக்கெட், திட்டமிட்ட வேகத்துடன் கணக்குப் பிசகின்றி, சந்திர மண்டலத்தை நோக்கிப் போவதை மகிழ்ச்சியுடன் கருவியில் கண்டு கொண்டிருக்கின்றனர்.

* * *

''தேவர்களே, நீங்கள் வந்த கார


ணத்தை நாங்கள் அறிவோம். நாங்களே அதைப்பற்றி உங்களிடம் சொல்லவே புறப்பட்டு வந்து கொண்டு இருந்தோம். நல்லவேளை; இங்கேயே சந்தித்து விட்டோம். வாருங்கள், அனைவரும் சத்திய லோகத்திற்குச் சென்று பிரும்ம சபையில் விவாதிப் போம்.''

சிவன், விஷ்ணு, பிரும்மா மூவரும் முன்னே செல்ல, இந்திரனும், சந்திரனும் அடுத்தபடியாகச் செல்ல, தேவர்கள் கூட்டம் பின் தொடர்ந்து செல்கிறது.

சத்தியலோகத்தின் பிரும்ம சபை நிரம்பி வழிகிறது. மும்மூர்த்திகள் அவரவர்கள் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு மிகுந்த கவலையுடன் எல்லோருடைய யோசனைகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதுவும் சரியாகப் படவில்லை.

கைலாசபதியான சிவபெருமான் எல்லோரையும் கைகாட்டி அமர்த்தி விட்டுப் பேச ஆரம்பிக்கிறார்:

''தேவர்களே! கவலைப்பட வேண்டாம். பிரச்சினை கொஞ்சம் சிக்கலாகத்தான் இருக்கிறது. உலகத்தில் உள்ள அசுரர்களை எல்லாம் அழித்து விட்டு, நானும் என் மைத்துனரான விஷ்ணுவும் இப்பொழுது கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறோம். இது புதிதான குழப்பம்தான். நம்முடைய எதிரிகளாக இருந்தால், என்னுடைய நெற்றிக் கண்ணைக் காட்டியே எரித்திருப்பேன். இது நாம் படைத்த மனிதர்களுடைய அபரிமிதமான மூளையால் விளைந்த பலன்! அவர்கள் நமக்கு விரோதிகளல்ல. அவர்களும் நமக்கு இடர் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதைச் செய்யவில்லை. 'சோதனை' என்ற பெயரால் பூலோகத்தை விஷமாக்கி விட்டார்கள். இப்பொழுது தேவ லோகத்தையும் விஷமாக்க, விளைவை அறியாமல் துணிந்து விட்டார்கள். நாம் ஏதாவது இதை எதிர்த்துச் செய்வோமானால், அவர்கள் நம்மை எதிரிகளாகக் கருதி



பள்ளியில் நடந்தது!

உங்கள் பள்ளியில் சிரிக்க வைக்கும் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கலாம். ஒரு மாணவன் அல்லது மாணவி வீரதீரச் செயல் புரிந்திருக்கலாம். புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்திருக்கலாம்.

—இப்படி எது நடந்திருந்தாலும் அதைச் சுவையாகவும், சுருக்கமாகவும் எழுதி அனுப்புங்கள். நல்லது என்ற நிச்சயம் கோகுலத்தில் வெளியிடுவோம்.

—ஆசிரியர்.

மேலும் இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்து, நம்மை அல்லல் படுத்துவார்கள். ஆதலால், எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இதைச் சமாளிக்க எனக்கொரு யோசனை தோன்றியிருக்கிறது. அதே மாதிரி யோசனை மகாவிஷ்ணுவிற்கும், பிரும்மாவிற்கும் தோன்றியிருக்கலாம். அவர்களுடன் கலந்து பேசி, உங்களுக்குத் தெரிவிக்கிறேன். கவலைப்படாமல் அமைதியாக இருங்கள்.''

மஹாவிஷ்ணுவும், பிரும்மாவும், சிவனும் தனியாக அமர்ந்து கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

மஹாவிஷ்ணு அந்த முடிவை விளக்கிச் சொல்கிறார்:

''அமரர்களே, இந்த அணுகுண்டிலிருந்து சந்திரமண்டலத்தைக் காப்பாற்ற, நான்கு பேர் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்கள் தெய்வாம்சம் பொருந்திய மனிதர்களாகப் பூமியில் பிறந்து அன்பையும், பண்பையும் போதித்த மகான்கள்—ஏசுபிரான், புத்தர், காந்திஜி, ராஜாஜி ஆவார்கள். நீங்கள் அனைவரும் புண்ணியலோகம் சென்று அவர்களிடம்

முறையிட்டால், அவர்கள் உடனடியாக உங்களுக்கு உதவுவார்கள். மும்மூர்த்திகளாகிய நாங்கள் இதில் தலையிட விரும்பவில்லை. நீங்கள் சென்று அந்த மகான்களை அழைத்துக் கொண்டு சந்திர மண்டலத்துக்குச் செல்லுங்கள்.''

* * *

ராக்கெட் இப்பொழுது சந்திர மண்டலத்தின் காற்றுவெளி மண்டலத்திற்குள் நுழைந்து விட்டது. தன் பாதையைச் சந்திரனை நோக்கித் திருப்பிக் கொண்டு சீரான வேகத்துடன் முன்னேறுகிறது. விஞ்ஞானிகள் ஆனந்தத்தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கின்றனர் பூமியில்.

* * *

புண்ணியலோகம் தேவர்களுடைய வருகையால் பொலிவுற்றுச் சோபையுடன் விளங்கியது.

தெய்வ மகன் ஏசுபிரானும், போதி சத்துவன் புத்தரும், மாந்தருள் தெய்வம் மகாத்மாவும், அவருடைய மனச்சாட்சி என்று பெயர் பெற்று வாழ்நாள் முழுவதும் அணுகுண்டு சோதனையை எதிர்த்துப் போரிட்ட அண்ணல் ராஜாஜியும், தேவர்களுடைய முறையீடுகளையும் கவலையையும் அன்புடன் கேட்டறிகின்றனர்.

கடைசியில் அவர்கள் எடுத்த முடிவைக் கண்டு தேவர்கள் ஆச்சரியம் கொள்கின்றனர். அந்த முடிவைத் தேவர்கள் விரும்பவில்லையாயினும், புண்ணிய மூர்த்திகள் நால்வரும் கொண்டிருந்த உறுதியைக் கண்டு, கவலையுடன் அவர்களை அழைத்துக் கொண்டு சந்திர மண்டலம் செல்கின்றனர்.

* * *

ராக்கெட் சந்திரனை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சில நிமிடங்களில் சந்திரனில் உள்ள முகப்பு மலையில் இறங்கி, அணுகுண்டு வெடிப்பதற்கான கருவிகள் இயங்கும். 'ஹூஸ்டன்' விஞ்ஞானிகள், கணக்கற்ற கருவிகளுடனும், கண்



விழித்து, அணுகுண்டு வெடிப்பதனால் சந்திரனில் ஏற்படும் பௌதிக, ரசாயன மாற்றங்கள் என்னவென்று காண மிக ஆவலுடனும், கவனமுடனும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல; உலகத்து விஞ்ஞானிகள் அனைவருமே மிக்க ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விளைவுகள் எப்படியிருக்கும் என்பது அவர்களுடைய கணக்கிற்கும், கற்பனைக்கும் எட்டாததாக இருந்ததால் ஆர்வம் கட்டுக்கடங்காததாக இருந்தது.

* * *

தெய்வப் பிறவிகள் நால்வரும் அணுகுண்டு எங்கே வெடிப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்ததோ அங்கேயே வருகின்றனர்; அமைதியாக அமர்ந்து, தியானத்தில் ஆழ்கின்றனர்.

அவர்களின் நெஞ்சுறுதியையும், தியாக மனப்பான்மையையும் கண்டு, தேவர் குழாம் ஆச்சரியத்தில் மூழ்குகிறது.

* * *

ராக்கெட் சந்திரனை நெருங்கிவிட்டது. இதோ, இன்னும் சிலவினாடிகளில், மலையில் இறங்கிவிடும்! அனைத்து நாட்டு விஞ்ஞானிகளும், நெஞ்சும், மார்பும் படபடக்க, இமை கொட்டாமல், ஆர்வமுடன் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆஹா...! இதென்ன ராக்கெட்டின் வேகம் தடைப்படுவது போல் தோன்றுகிறதே! என்ன நடந்தது...? எதில் கோளாறு? 'ஹூஸ்டன்' விஞ்ஞானக் கூடம் அமர்க்களப்படுகிறது.

* * *

ராக்கெட் தடுமாறுகிறது. ஐயோ, அங்கிருப்பது யார்... பூவுலகம் உய்ய, வழிகாட்டிய, ஒளியூட்டிய மகான்கள் அல்லவா அமர்ந்திருக்கிறார்கள்! அவர்கள் மேலா அணுகுண்டு வெடிப்பது?... காந்த அலை நால்வர் மேலிருந்தும் புறப்பட்டு, ராக்கெட்டையும், அதிலிருந்த அணுகுண்டையும் தாக்குகிறது. அவர்கள் கண்களின் தீட்சண்யம் தாங்க முடியாமல் ராக்கெட் திண்டாடுகிறது. தாங்க முடியாமல், அவர்கள் முன் மண்டியிட்டு விழுவது போன்ற பாவனையுடன் தடுமாறிக் கொண்டே ராக்கெட், தனது மடியிலிருந்த அணுகுண்டை இறக்குகிறது. அணுகுண்டு ஒரு குழந்தை போன்று, மகாத்மாவின் கரங்களில் விழுகின்றது. அதைத் தா[illegible]க் கொடுத்துக்கி[illegible] விடுகிறார் மகாத்மா. அது கீழே இறங்கி, சந்திர மண்டலத்து மண்ணில் தானே கரைகின்றது. ஒரு சிறு முனகல் கூட அதனிடம் இருந்து வெளிப்படவில்லை.

தேவர்கள் பெருமூச்சு விடுகின்றனர். மும்மூர்த்திகள் புன்னகை செய்கின்றனர். சாந்தம் கலந்த அருட்பார்வையுடன் அனைவரையும் பார்க்கிறார்கள் நால்வரும்.

ராக்கெட் தள்ளாடிக் கொண்டே வந்த வழியே தன் பயணத்தை நிம்மதியுடன் துவங்குகிறது.

* * *

'ஹூஸ்டன்' நகர விஞ்ஞானிகள் தலைமயிரைப் பிய்த்துக் கொள்கின்றனர். அணுகுண்டு ஏன் வெடிக்கவில்லை? எல்லாக் கருவிகளும் ஒழுங்காக இருந்தும் என்ன கோளாறினால் தவறு ஏற்பட்டது? இரவு பகலாகத் தூக்கம் இல்லாமல் ஆராய்ந்தும் காரணம் கண்டுபிடிக்கவே முடியவில்லை! தாங்கள் அறியாத ரசாயன மாற்றம் அணுகுண்டுவிற்குச் சந்திர மண்டலத்தில் ஏற்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வருகிறார்கள். உலகம் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது. எத்தனை நாளைக்கு...?

* * * *

அப்பா காட்டிய உருண்டை!



குழந்தைக் கவிஞர்

தானும் நன்கு உண்டிடார்;
தருமம் ஏதும் செய்திடார்;
வேணு கோபால் என்பவர்
மிகவும் கருமி யானவர்.

தனது சொத்து முழுதுமே
தங்க மாக மாற்றியே,
மனைவி மக்கள் அறியுமுன்
மறைத்து வைக்க எண்ணினார்.

உருக்கி அந்தப் பொன்னையே
உருண்டை உருண்டை யாக்கினார்.
மறைத்து வைத்தார், பானைகள்
வைக்கும் இடத்தில் தோண்டியே.

* * * * *

நோயி னாலே அவருமே
நொந்தே ஒருநாள் படுத்தனர்.
வாய் திறந்து பேசவும்
வலிமை யின்றிக் கிடந்தனர்.

அருகில் மனைவி மக்களை
அழைத்து வலது கையினால்,
உருண்டைத் தங்கம் இருப்பதை
உணர்த்தச் சைகை காட்டினார்.

பழைய கதை: புதிய பாடல்

அந்த வீட்டு மூலையில்
அடுக்குப் பானை இருப்பதை
சொந்தக் காரர் பார்க்கவே
சுட்டிச் சுட்டிக் காட்டினார்.


"அடுக்குப் பானைக் குள்ளேதான்
அப்பா கேட்ப திருக்குதே!
எடுத்து வந்து கொடுக்கிறேன்"
என்றான் மூத்த மைந்தனும்.

உருண்டை யாக இருந்தது;
உண்ப தற்கு ஏற்றது
பொரி விளங்காய் ஒன்றையே
விரைந்து கொண்டு வந்தனன்.

"அருமை அப்பா கேட்கிறார்
ஆவி பிரியும் வேளையில்.
பொரி விளங்காய் இதனையே
பிரிய மாக ஊட்டுவேன்."

என்று கூறி அதனையே
ஏழெட் டாக உடைத்துமே,
நன்கு வாய்க்குள் செலுத்தினான்;
நடந்த தென்ன தெரியுமா?

அடைத்தி ருந்த தொண்டையில்
அதுவும் சென்று சேர்ந்ததால்,
உடனே ஆவி பிரிந்தது.
ஓவென் றழுதார் அனைவரும்!


மாலியும் ஜூலியும்
கருத்து: எம்.ஆர்.ராஜன்
12
ஏய் ஜூலி, ஜூலி! சோப்பை எடுத்துக்கிட்டுப் போறியே! நான் எப்படிக் குளிக்கிறதாம்!.. ஏய்.. ஏய்..
என்னடா, குழாயடியிலே ஒரே கூச்சல்?
பாரம்மா, ஜூலி சோப்பைத் தூக்கிட்டுப் போவுது... நான் எப்படிக் குளிக்கிறதாம்?..
ஏய் ஜூலி, அவன் சோப்பை நீ ஏன் எடுத்தாய்? இங்கே வா..
ஏன்டா மாலி, இதிலிருக்கும் சோப்பை நல்லாப் பார்த்தியா? யாருடையது?
மடையா, நீ மாத்தி எடுத்துப் போயிட்டே! அதுனாலே அது தூக்கி வந்திருச்சு!
அடடே, இது ஜூலி போடுற நாய் சோப்பா!


பிருந்தாவனம்



எதுகைப் பாட்டு

உறுதி உடையது இரும்பு.
ஊதினால் பறப்பது துரும்பு.
தங்கை சுவைப்பது கரும்பு.
தலையில் மணப்பது அரும்பு.

சண்டைக்குச் செல்வது துருப்பு.
சாம்பாரில் மணப்பது பருப்பு.
கைகளில் உள்ளது இருப்பு.
காகத்தின் நிறமோ கறுப்பு.
—பரணி கோமதி(19),சென்னை—20.



இருந்தால்....?

பாயும் மெத்தையும் கொம்பிருந்
தால்.
ரொட்டியும் கேக்கும் வாயிருந்தால்.
சிமிண்டும் ஓடும் காலிருந்தால்.
சாம்பாரும் கூட்டும் கற்றிருந்தால்.

முதலில் உள்ளது எங்கள் ஆசிரியர் புலவர் பி. பி. கிருஷ்ணசாமி கூறியது. மற்ற மூன்றும் என் கற்பனையில் மலர்ந்தவை.
—நெ. அன்புச்செழியன் (1727), பண்ணுருட்டி.

ஏன் தரமாட்டான்?

''ஏண்டா, அந்தக் கடைக்காரர் நீ தீப்பெட்டி விலைக்கு வாங்கப் போனால், தரமாட்டேன் என்கிறார்?''

''நான் அந்தக் கடையில் தீப்பெட்டி வாங்கும்போது எல்லாக் குச்சிகளும் எரியுதான்னு பார்த்துத்தான் வாங்குவேன்.''
—கே. சண்முக வடிவேல் (4465),
கரந்தை.



அவர்கள் சொன்னவை

❊ குற்றம் என்ற புற்றில் கைவிட்டால், சட்டம் என்ற பாம்பு கடித்தே தீரும். —புத்தர்.


❊ கல்வியின் இலட்சியம் மதிப்பெண் அல்ல; அறிவு நலம் பெறுவதே.
—அண்ணா.


❊ ஒருவனது குழந்தைப் பருவத்தைப் பார்த்து, அவன் மனிதனான பிறகு எப்படி இருப்பான் என்பதை அறியலாம்.
—ஜான் மில்டன்.

❊ ஒரு கவிதை எழுதுவதில் இருக்கும் பெருமை ஒரு நிலத்தை உழுவதிலும் இருக்கிறது.
—வாஷிங்டன்.

❊ நாவை வெல்கிறவன் உலகை வெல்வான். —வாரியார்.

—என். சந்திரன்(4785), பாவட்டக்குடி.





தொடர்பில்லாதது எது?

கீழேயுள்ள ஒவ்வொன்றிலும் 4 உள்ளன. ஒன்று மட்டும் மற்றவற்றுடன் தொடர்பு இல்லாதது. கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.

1. மாடு, ஆடு, சிங்கம், நாய்.
2. தென்னை, பலா, வாழை, பனை.
3. 2, 4, 5, 8.
4. 12, 9, 17, 18.

விடை: 1. சிங்கம் வீட்டு மிருகமல்ல, 2. பலா மரத்துக்கு மட்டுமே கிளை உண்டு. 3. 5 ஒற்றைப்படை எண், 4. 17—ஐத் தவிர மற்ற எண்கள் மூன்றால் வகுபடும்.

—எஸ். ஆனந்தகுமார் (6848), திருச்சி—2.

மகா கஞ்சன் யார்?

''என் அப்பா சிங்கப்பூரிலிருந்து ஒரு காகித விசிறி வாங்கி வந்தார். அது கிழிந்து போகாமல் இருக்க, அதை மடக்கியபடியே விசிறிக்கொள்வார்'' என்றான் ஒரு பையன்.

''ப்பூ, இவ்வளவுதானா! என் அப்பாவும் அதே சிங்கப்பூரில் அதே கடையில் அதேமாதிரி ஒரு விசிறியை வாங்கி வந்தார். அவரும் அதை மடக்கித்தான் வைத்திருந்தார். உன் அப்பா மாதிரி அவர் மடக்கிய விசிறியால் விசிறிக் கொள்ள மாட்டார். அதற்குப் பக்கத்தில் தலையைக் கொண்டு போய் இப்படியும் அப்படியும் ஆட்டுவார்'' என்றான் இன்னொரு பையன்.

—எங்கள் பள்ளியில் திரு. குமரிஅனந்தன் பேசிய போது கூறியது —

—எம். பழனிச்சாமி (7177), திருப்பூர்.



கர்வம் ஒடுங்கியது!

''நான் ஒரு ஹடயோகி. நான் ஆகாயத்தில் பறப்பேன்; பூமியின் கீழ் அநேக காலம் இருப்பேன்; நீரிலும் வாழ்வேன். இன்னும் பல சக்திகள் என்னிடம் உள்ளன'' என்று யோகி மிகுந்த கர்வத்துடன் ஒரு மகானிடம் கூறினார்.

அதற்கு அந்த மகான் மிகவும் அமைதியாக, ''அப்பனே! பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன; புழுக்கள் பூமியின் அடியில் அநேக காலம் மறைந்து கிடக்கின்றன. மீன்கள் நீரில் வாழ்கின்றன. ஐந்தறிவுள்ள இவற்றைப் போல் வாழ்வதால் என்ன பயன்? கடவுளை அடைய நற்குணங்களை விருத்தி செய். கர்வத்தையும் கோபத்தையும் அடக்கு. எப்போதும் கடவுளை நினைவில் கொள். கடவுளை அடையும் அந்த அற்புத சக்தியை அடையப் பார்'' என்றார்.

ஹடயோகியின் கர்வம் ஒழிந்தது!

—சி. சேதுராமலிங்கம் (1875), பழனி.




தமிழ் எண்கள்

1, 2, 3 என்று ஆங்கில எண்களையே நாம் பயன்படுத்துகிறோம். தமிழ் எண்கள் எவ்வாறிருக்கும்?

க	— ஒன்று	சூ	— ஆறு
உ	— இரண்டு	எ	— ஏழு
ந	— மூன்று	அ	— எட்டு
ச	— நான்கு	கூ	— ஒன்பது
ரு	— ஐந்து	க0	— பத்து
		க00	— நூறு

—அ. கந்தசாமி (3162), கோவை—15.



உயிரைவிட உயர்ந்தது!

ஏராளமான பழைய ஏட்டுச் சுவடிகளுடன் ஒரு துறவி கங்கை நதியில் படகிலே சென்று கொண்டிருந்தார். சுவடிகளின் சுமை தாங்காமல் படகு கவிழும் நிலை ஏற்பட்டது.

உடனே படகோட்டி துறவியிடம், ''ஐயா, சுவடிகளின் சுமை படகை அழுத்துகிறது. இந்தச் சுவடிகளில் ஒரு பகுதியை ஆற்றில் எறிந்து விட்டால், நாம் பத்திரமாக அக்கரை போய்ச் சேர்ந்து விடலாம்'' என்றான்.



துறவி திடுக்கிட்டார்.

''வேண்டாமப்பா. இவை அனைத்தும் மிகுந்த சிரமப்பட்டுச் சேர்த்த விலைமதிப்பில்லாத சுவடிகள். இவற்றில் எதையுமே எறிய வேண்டாம். நான் ஆற்றில் குதித்து விடுகிறேன். சுவடிகளைப் பத்திரமாகக் கொண்டு போய் மக்களிடம் சேர்த்துவிடு'' என்று சொல்லிக் கொண்டே கங்கைப் பிரவாகத்தில் குதித்து உயிர்விட்டார்.

—த. அருள்சிவபாலன் (47), செங்கற்பட்டு.

கால் இல்லாக் குறள்கள்

கீழே 3 குறள் பாக்கள் உள்ளன. எந்தக் குறளிலும் கால் வாங்கிய எழுத்தே இல்லை.

❋ கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

❋ எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

❋ முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

—நெ. அன்புச்செழியன் (1727), பண்ணுருட்டி.



நான், நான்

எங்கள் வகுப்பு முனுசாமி எதற்கெடுத்தாலும் 'நான், நான்' என்று கைதூக்குவான்.

ஒருநாள் ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார். அப்போது, முனுசாமி அவன் பக்கத்திலுள்ள மாணவனிடம், ஏதோ பேசிக் கொண்டிருந்தான். ஆசிரியர் வந்தவுடனே, ''என் பேனாவை எடுத்தவன் இந்த வகுப்பிலே இருக்கிறான். எடுத்தவன் உடனே கைதூக்க வேண்டும்'' என்றார்.

முனுசாமி, ஆசிரியர் முதலில் கூறியதைச் சரியாகக் கேட்காததால், ''சார், நான்'' என்று கூறிக் கைதூக்கிவிட்டான்.

வந்ததே கோபம் ஆசிரியருக்கு. அவனை நன்றாக விளாசி விட்டார்!

—க. நடராஜன் (5500), ஈரோடு—2.



பச்சை நிறச் சூரியன்!

மாலையில் அஸ்தமிக்கும் சூரியன் இங்கு நமக்குச் சிவப்பு நிறத்தில் தெரிகிறது. ஆனால், அண்டார்க்டிகாவில் அஸ்தமிக்கும் சூரியன் பச்சை நிறத்தில் தெரியுமாம்!

—எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.

கால் வாங்க மறந்தால்...?

நம்மில் சிலர் கால் வாங்க மறந்து விடுகிறோம். நம் கவனப் பிசகு அர்த்தத்தையே மாற்றிவிடும். இங்கே அத்தகைய மாற்றங்களைக் காணலாம்:

பசு தருவது பால்
எழுந்ததும் துலக்குவது பல்.

பள்ளியில் படிப்பது பாடம்.
ஓவியர் வரைவது படம்.

மகுடிக்கு ஆடுவது நாகம்.
விரலில் வளர்வது நகம்.

குயவர் செய்வது பானை.
நுங்கைத் தருவது பனை.

பாகவதர் போடுவது தாளம்.
வீட்டின் மேலிருப்பது தளம்.

—எஸ். பாலாஜி (5838), மயிலாப்பூர்.





சில புதிர்கள்

1. ''நீ சுட்டு வைத்த தோசைகளில் சரிபாதியையும், மேலும் ஒரு அரை தோசையும் எடுத்துக் கொண்டேன். மீதி ஒரு தோசை உள்ளது'' என்றாள் ராதா. அப்படியானால், அம்மா சுட்டு வைத்த தோசைகள் எத்தனை?

2. ஓர் எண்ணை 2—ஆல் வகுத்தால் மீதி 1—ம், 3—ஆல் வகுத்தால் மீதி 2—ம், 4—ஆல் வகுத்தால் மீதி 3—ம், 5—ஆல் வகுத்தால் மீதி 4—ம், 6—ஆல் வகுத்தால், மீதி 5—ம் வரவேண்டும். அத்தகைய எண் எது?

விடை: 1. 3 தோசைகள். 2. 119.

—எம். தமிழ்வாணன் (1779), திண்டிவனம்.



கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து



நேர்த்திக்கடன்

ஸத்யா

மகாத்மா காந்தி உயர்நிலைப் பள்ளியின் ஆண்டுவிழா மிகக் கோலாகலத்துடன் நடந்து கொண்டிருந்தது. பார்வையாளர் கூட்டம் எக்கச்சக்கமாயிருந்தது. ஆசிரியர்க. நாலாபக்கமும் ஓடியோடி வரவேற்று, அமர்த்தி, அமைதி காத்தனர்.

அன்று தலைமை வகிக்க மாவட்ட ஆணையர் வந்திருந்தார். பரிசு பெறப் போகும் மாணவ மாணவியர் மேடைக்கு முன்பாக அமர்ந்திருந்தார்கள். தலைமை ஆசிரியர் மைக்குக்கு முன்னால் வந்து பரிசு பெறும் மாணவ மணிகளை அழைத்துக் கொண்டிருந்தார். பெற்றோர்கள் பெருமிதத்துடன் 'இருக்கை'களின் முன் நகர்ந்து ஆவலுடன் உற்று நோக்கினார்கள்.

''கே. பரஞ்சோதி! எட்டாம் வகுப்பு 'அ' பிரிவு, சரித்திரம் முதற் பரிசு!''

கம்பீரமாக மேடையிலேறிய பரஞ்சோதி ஆணையரிடமிருந்து பரிசைப் பெற்றுக் கொண்டு ''மிக்க நன்றி ஐயா'' என்று புன்னகையுடன் அவரிடம் கைகுலுக்கிவிட்டுத் திரும்பினான். ''இங்கேயே ஒரு பக்கமாக இரு. இன்னும் ஐந்து பரிசுகள் உனக்கு இருக்கிறதே!'' என்றார் தலைமையாசிரியர்.

...ஆங்கிலம், கணக்கு, தமிழ், விளையாட்டு, நன்னடத்தை... ஒவ்வொன்றாகப் பரிசுகளைப் பெற்றுக் கொண்ட பரஞ்சோதி பலத்த கரகோஷத்திற்கிடையே ஃப்ளாஷ் லைட் காமிரா கண்ணைப் பறிக்க மேடையிலிருந்திறங்கி, முன்வரிசையிலிருக்கும் தன் பெற்றோரிடம் பரிசுகளைக் கொடுத்தான்.

நிகழ்ச்சி முடிந்து ஆணையர் பேசும் பொழுது, ''இன்று அதிகமான பரிசுகளைப் பெற்றுப் பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவன் கே. பரஞ்சோதி மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறான். அவனுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்'' என்றார். பரஞ்சோதியின் பெற்றோரான மீனா, குமரேசன் தம்பதியருடைய உள்ளங்கள் பெருமையிலும், உவகையிலும் பூரித்துப் போயின...

வீட்டுக்கு வந்து, சாப்பிட்டுவிட்டு, படுக்கச் சென்றவுடன் பரஞ்சோதியின் தாய் தன் கணவரிடம் மெல்லிய குரலில் பேச்சுக் கொடுத்தாள். பரஞ்சோதியும், பார்வதியும் உறங்கிவிட்டார்கள்... ''என்னங்க,..உங்க பிள்ளை, ஸ்கவுட்ல சேர்ந்துக்கிட்டு உலகத்தையே 'மராமத்து'ப் பண்ணப் போறானாம்!... வீட்டிலே தண்ணி குடிச்ச டம்ளரையே நகர்த்தி வைக்கமாட்டான்! பள்ளிக்கூடத்திலே வாளி, வாளியாத் தண்ணி இழுத்துத் தோட்டத்துக்குப் பாய்ச்சிக்கிட்டிருக்கான்!

சொந்தத் தங்கச்சியோடே ஆசையா விளையாடாதவன், ஊர்ப் பசங்ககிட்டே அட்டகாசமா அரட்டையடிக்கிறான்!..' ஹூம்! என்னவோ போங்க. நான் எதுவும் சொல்ல வந்தா என்னை அடக்கிடுறீங்க! அவன் உங்க செல்லப் பிள்ளை!... அவன் நல்ல பையனாப் பேரெடுக்கணும்னு, சில சமயங்களிலே நாம கண்டிப்பாத்தானிருக்கணும்...'' தாய் மீனு மிகவும் கவலையுடன் சொன்னாள்.

தந்தை குமரேசனுக்கு அதெல்லாம் பெரிய கவலையாகத் தோன்றவில்லை. ''நாளடைவில் சரியாகி விடுவான் மீனு, சலுகையும், சகஜமும் நம்ம கிட்டத்தானே இருக்க முடியும்? அது இருக்கட்டும். மீனு, வர்ற ஞாயிற்றுக்கிழமை மாரியம்மன் கோயிலுக்குப் போகணும்னு நினைவிருக்கா? இந்தப் பயல் போன வருஷம் ரொம்ப 'கிடந்து' பிழைச்சானே! அங்கப் பிரதட்சிணம் செய்யச் சொல்றதாய் நேந்துக்கிட்டிருக்கோமே...!''

''நீங்க ஒண்ணு! வர்ற சனி, ஞாயிறு அவனுக்கு 'ஸ்கவுட் காம்ப்' போகணுமாமே!''

''அட, அப்படியா...? ஆனா, இந்தப் பிரார்த்தனையை அவனேதான் செலுத்தணும். கட்டாயம் கோயிலுக்கு அவன் வரணுமே!''

''அதென்ன கதையோ, எனக்குத் தோணல்லே, அவன் வருவான்னு! 'கோவிந்தாப் பிச்சைக்காரனாட்டமாத் தரையிலே உருண்டு புரண்டுக்கிட்டிருப்பது கேலிக் கூத்து, அசிங்கம், மூடபக்தின்னு' கொட்டி அளக்கிறான்! அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுன்னால் 'நீதானே வேண்டிக்கிட்டே, நீயே தரையிலே புரளுங்'கிறான்! ம்ம்... இவனுக்குப் போயி நல்ல நடத்தைப் பரிசு கிடைச்சிருக்கு...'' பரஞ்சோதியின் தாய் அங்கலாய்த்துக் கொண்டாள். குமரேசனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ''சரி, சரி. நீ தூங்கு. நேரமாச்சு. கவலைப்பட்டு என்ன புண்ணியம்? காலையில நான் அவனிடத்திலே சொல்லிப் பார்க்கிறேன்.''

''ஆமா... என்னதான் சொல்லுங்க... கடவுள்தான் நல்ல புத்தியைக் கொடுக்கணும்!''

போஸ்ட் மாஸ்டர் குமரேசனுக்கு ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும், ஆசைக்கு ஒரு பெண்ணுமாக இரு செல்வங்கள். பரஞ்சோதி அவருடைய செல்லப் பிள்ளை. எட்டாவது படிக்கும் அவன் மிகவும் கெட்டிக்காரன். மிக புத்திசாலிதான்; ஆனாலும், சற்று முரட்டுத் தனமுள்ளவன். பள்ளியிலேயே முதல் மாணவன். என். எஸ். எஸ். ஸில் சேர்ந்திருக்கிறான். வீட்டில் செல்லம் கொடுத்துவிட்டதன் பலன் பிடிவாதமும் கூடவே அவனுடன் வளர்ந்திருந்தது!...

மறுநாட்காலையில் எழுந்ததும் அவனுக்குக் குமரேசன் இதமாகப் பிரார்த்தனையின் முக்கியத்தையும், அதை அலட்சியப்படுத்தக் கூடாது என்றும் கூறினார். ஆனால் அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

திங்கட்கிழமை மாலை ஐந்து மணிக்குப் பரஞ்சோதி சாரணர் முகாமிலிருந்து திரும்பிவிட்டான். புயல் வேகத்தில் உள்ளே வந்தவன், ''அம்மா! நான் முதலில் குளிச்சிட்டு வந்திடறேன். அதுக்குள்ளே நீங்க தேங்காய், பழம், வெற்றிலை, சூடம் எல்லாம் தயாரா எடுத்து வெச்சுடுங்க... இப்ப காப்பி, பலகாரமெல்லாம் வேண்டாம். கோயிலுக்குப் போயிட்டு வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டுப் பரபரவென்று செயல்பட்டான்.

அவனது தாய்க்கு அதிசயமாயிருந்தது மகனது செய்கைகளும், பேச்சுகளும்! 'இவன் நம்ப பரஞ்சோதி தானா?' என்று குழம்பிப் போனாள்! தலை சீவி, விபூதி, குங்குமம் இட்டு, வேட்டி, பனியன் அணிந்து கொண்டு பூஜை சாமான்களுடன் கோயிலுக்குக் கிளம்பி விட்டான்! — மற்றொரு அதிசயம்...! தன் தங்கை பாருக் குட்டியையும் கையில் பிடித்துக் கொண்டு போனது தான்! மகனின் மாறுதல்களைக் கண்டு வியப்புடன் சந்தோஷமும் உண்டாயிற்று தாய்க்கு.

ஆறு மணிக்குக் குமரேசன் காரியாலயத்திலிருந்து திரும்பியவர் தன் மனைவியின் பேச்சுக்களைக் கேட்டுப் பிரமித்துப் போய் விட்டார்! 'பரஞ்சோதியாவது, கோவிலுக்குப் போவதாவது, அதுவும் பாருக் குட்டியைக் கூட்டிக் கொண்டு! கனவு காண்கிறோமா!' என்று தன் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார்! கைகால் கழுவிக் கொண்டு, சுவாமி படத்திற்கு நமஸ்காரம் செய்து, ''ஈசுவரா! எப்படியோ என் பிள்ளைக்குப் புத்தியைக் கொடுத்தாயே அப்பனே! அதுவே எனக்குப் போதும். உன் சித்தம் என் பாக்கியம்..'' என்று மனமுருகினார்...

சற்று நேரத்தில் எட்டு மணிக்கெல்லாம் பாருக் குட்டி

முன்னே ஓடிவர, பரஞ்சோதி வந்தான். ''அப்பாப்பா! அண்ணனைப் பாருங்கப்பா! விபூதிச் சாமியாரா மாறிடுச்சு...!'' பாரு துள்ளிக் கொண்டு வந்து தந்தையைக் கட்டிக் கொண்டாள். மகனைப் பார்த்தார் தந்தை. நாலு முழ வேட்டி, பனியன், விபூதிப் பட்டையின் நடுவில் குங்குமப் பொட்டுமாக அசல் சிவநேசச் செல்வனாகக் காட்சியளித்தான் பரஞ்சோதி.

''என்ன பரஞ்சோதி! ஆளே அடையாளம் தெரியலையே...!ம்ம்..உனக்குப் பரஞ்சோதி நாயனாரைப் பத்தித் தெரியுமோ? மாமல்ல நரஸிம்ம பல்லவ மகாராஜாவின் சேனாதிபதியும், ஆருயிர் நண்பருமாயிருந்தார் அவர்... ஒருசமயம் பதவியைத் துறந்துவிட்டுச் சிவ பக்தராயிட்டார்... அந்த மாதிரி நீயும் திடீர்னு சிவப் பழமாயிட்டியோன்னு நினைச்சேன்!''

தந்தையின் பேச்சைக் கேட்டு, மௌனமாய், தலைகுனிந்து நின்ற பரஞ்சோதியின் கண்களிலிருந்து அருவியாய்க் கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது! பெற்றோர் பதைத்துவிட்டனர். பாருக்குட்டியும் அண்ணனைப் பரிதாபமாகப் பார்த்தாள். ''என்னடா ராஜா, ஏன் அழறே? என்னச்சப்பா!'' குமரேசன் மகனைப் பாசத்துடன் அணைத்துக் கண்ணீரைத் துடைத்தார். சற்றுச் சமாளித்துக் கொண்ட பரஞ்சோதி கரகரத்த குரலில் பேச ஆரம்பித்தான்.

''நான் 'காம்ப்' போயிருந்த ஒரு கிராமத்துலே எனக்கு ஒரு அதிசய அனுபவம் ஏற்பட்டுது... அங்கே ஒரு நிலத்தில் வெட்டி, கொத்திச் செடிகளை நட்டுக்கிட்டிருந்தோம். அப்பத்தான் அந்த அற்புதம் நடந்தது. நான் வெட்டிக்கிட்டிருந்த இடத்துக்கிட்டே திடீர்னு ஒரு நல்ல பாம்பு படமெடுத்து ஆடி, சீறிச்சு! என்னையே பார்த்துக்கிட்டிருந்த மாதிரி தோணிச்சு. நான் பயந்து ஓட ஆரம்பிச்சேன்.. அது துரத்திக்கிட்டு வேகமாய் வந்திச்சு. ஆசிரியர்களும், மற்றப் பையன்களும் பிரமை பிடிச்சு, ஒண்ணுமே தோணாமே நின்னுட்டாங்க. அந்த இடம் மலைப்பாங்கான மேட்டுப் பகுதி. யாரோ திடீர்னு என்னைப் பிடிச்சுத் தள்ளிவிட்ட மாதிரியிருந்தது. மறு விநாடி நான் சரிவிலே உருண்டுகிட்டே போயிட்டேன். பயத்திலே மயக்கமாயிடுச்சு. கண் முழிச்சப்போ, என்னை ஒரு பாட்டியம்மா பிடிச்சுக்கிட்டிருந்தாங்கப்பா! அத்தனை மேலேயிருந்து உருண்டும், காயமோ, வலியோ எதுவுமில்லே! அந்தப் பாட்டி என் கையைப் பிடிச்சு, அன்பா அணைச்சுக்கிட்டு, ''ஏம்பா, தம்பி, அதென்ன 'கோவிந்தாப் பிச்சை'யாட்டமா உருண்டுக்கிட்டு வந்தே? வேண்டிக்கிட்டவன் போல!''ன்னு சிரிச்சாங்கப்பா! எனக்குத் திடுக்கிட்டுப் போச்சு! அங்கப் பிரதட்சிணம் பண்றதை நான் 'கோவிந்தாப் பிச்சைக்காரன்' மாதிரின்னு கிண்டல் பண்ணுவேனில்லையா? அந்தப் பாட்டிக்கு அது எப்படித் தெரியும்னு எண்ணி, அதிசயமும், பயமுமாயிருந்திச்சு! அப்புறம், அந்தப் பாட்டியே என்னைக் கூட்டிக்கிட்டு வந்து ஆசிரியர் குழுவிடம் விட்டுவிட்டுப் போயிட்டாங்க. அதுக்குப் பிறகு அவங்களை எங்கேயுமே காணவே இல்லையப்பா! இதுலே என்ன ஆச்சரியம்னு நேத்து ஞாயிறன்று, அதாவது பிரார்த்தனை நாளன்றைக்கு நடந்தது இந்தச் சம்பவம்! இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் சிலிர்க்குது.''

''பரஞ்சோதிக் கண்ணு! அந்த மகிமைக்கார மாரியாத்தா தான் உன் கிட்ட பாம்பாகவும், பாட்டியாகவும் வந்து உன்னைச் சோதிச்சு, உன்னை அங்கப் பிரதட்சிணம் செய்ய வெச்சிருக்கா! உன் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கணும்னு அருள் செஞ்சுட்டாப்பா!'' மகனை அணைத்து முத்தமிட்டாள் தாய் மீனு.

''எங்க அண்ணன் நல்ல அண்ணன்
தங்கைக் கேத்த தங்க அண்ணன்''—
என்று பாருக்குட்டி ஆடிப் பாடி மகிழ்ந்தாள்!

''இனிப்பான தலையணை ரெடி.''

''என்னடா அது, புதுசா இருக்கு?''

''பஞ்சுக்குப் பதிலா, பஞ்சு மிட்டாயை அடைச்சுத் தயார் பண்ணியிருக்கேன்.''

—லலிதா செல்லப்பா.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

2320. டி. ரமேஷ், த/பெ. தேவ அருள்நாதன், ராமர்பவனம், சேர்ந்தமரம்—627 857.
2321. சி. சங்கரசுப்பிரமணியன், 29, சன்னதித் தெரு, கல்லிடைக்குறிச்சி—627 416
2322. என். கனகமணி, சி/83, பழைய லைன், தெற்கு, வன இயல் கல்லூரி, கோவை—2.
2323. என். கிஷோர்குமார், 27, மேலத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி—1.
2324. மோ. விவேகானந்தன், 2, தாகூர் தெரு, நிலமங்கை நகர், சென்னை—88.
2325. ச. உமா மகேஸ்வரி, ஐ—60, அண்ணா நகர் கிழக்கு, சென்னை—102.
2326. எம். இந்திரா ஜெயஸ்ரீ, 21, குட்டைத்தெரு, ச. பே. புதூர், நாமக்கல்.
2327. ஆர். அருண்குமார், 87, காந்திரோடு, கோட்டக்குப்பம்—605 104.
2328. டி. கே. ஜெயந்தி (1/6 எச்), Seed colony, அழகாபுரம், சேலம்—4.
2329. ஆர். கிருஷ்ணன், 3, 2—வது கிராஸ், தில்லைநகர், சேலம்—636 001.
2330. ஏ. சந்திரசேகரன், 4—ஏ, வடக்குத்தெரு, மீனாட்சிபுரம், நாகர்கோவில்—1.
2331. ஏ. ஆர். ஸ்ரீராம், 11, ரத்தினசாமிநகர், சிதம்பரம்.
2332. ஆர். ஸ்ரீவித்யா, 11, ரத்தினசாமி நகர், சிதம்பரம்.
2333. கே. முகுந்த், 1, வெங்கடேச நகர், கடலூர்—2.
2334. ஜி. மனியபிரிஜித், த./பெ. ஆர். கணேசன், ரெட்டியார் தெரு, நல்லக்குடி, திருச்சி மாவட்டம்.
2335. வெ. மகேஷ், 6/92, பழைய கிராமம், சடையம் — 627 415.
2336. வி. பாலசுந்தரம், 4, ராஜு நகர் — விரிவு 2, பிரஸ் காலனி, கோவை—19.
2337. ஏ. ரவி, 73, எஸ். வி. ஏ. எக்ஸ்டென்ஷன், திருச்செங்கோடு.
2338. ஆர். அபராஜிதாகிருஷ்ணன், 27/3—28, ராமன் பிள்ளை தெரு, ராமவர்மபுரம், நாகர்கோயில்.
2339. வி. அ. மைத்ரேயி, 1, சிவபுரம் தெரு, திருநெல்வேலி.
2340. வி. மலர்விழி, டி—7, இத்தாலியன் சாலை, வட்டம் 27, நெய்வேலி—3.
2341. வி. குமரேசன், 47, இத்தாலியன் சாலை, வட்டம் 27, நெய்வேலி—3.
2342. தி. பிரபுராம், 6, 7—வது அவென்யூ, அசோக்நகர், சென்னை—83.
2343. ஆர். மகாலெஷ்மி, பி1/3, வீட்டு வசதி வாரியம், சிவகங்கை.
2344. ஆர். ஹரிஹர ஜெய சுப்பிரமணியன், பி1/3, வீட்டுவசதி வாரியம், சிவகங்கை.
2345. அ. ராஜ்குமார், 85, ஆரோக்கியநாதர் தெரு, பொள்ளாச்சி—1.
2346. ர. சுதர்சினி, 70, எம். எல். பிளாக், உரிகம், கோலார் தங்க வயல், கருநாடகம்.
2347. து. இலக்குமி, பிளாட் எண் 842, சிண்டிகேட் பாங்க் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை—101
2348. ஜி. ஆர். இராஜலியாமளா, 362, மேற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்.
2349. எம். மீனாட்சிசுந்தரம், 6, குமரப்பா நிலையம், கிழக்கு கோவிந்தபுரம், திண்டுக்கல்.
2350. கே. பாலசந்திரன், 21, ரங்கம்மாள் கோவில் வீதி, கோவை—4.
2351. எல். லெட்சுமணகுமார், 73, பதினோராவது வீதி, டாட்டா பேட், கோவை—12.
2352. க. சி. சீனிவாச கணேஷ், 3, வ. உ. சி. காலனி, அவிநாசி—638 654.
2353. வை. இந்துமதி, 24, வாசுதேவபுரம், தெரு, சென்னை—33.
2354. ஏ. பாப்பி, 7—சி, கோபால் நகர், கோவை—4.
2355. எம். டென்னிசா, 7—சி, கோபால் நகர், கோவை—4.
2356. ஏ. மணிமேகலை, 64, 2—வது மெயின் ரோடு, எம். சி. நகர், சென்னை—64.
2357. ஏ. மீனாகுமாரி, 64, 2—வது மெயின்ரோடு, எம். சி. நகர், சென்னை—64.
2358. ஜி. சக்திவேல், 3, மருதித் தெரு, சென்னை—29.
2359. பி. திருலோகசுந்தர், 4, ராமகிருஷ்ண நாயக்கர் சந்து, நெகமம்—624 120.
2360. ஆர். ஸ்ரீவித்யா, 24, ராமலிங்கம் வீதி (கிழக்கு), கோவை—2.
2361. ஆர். செந்தில்குமார், 24, ராமலிங்கம் வீதி (கிழக்கு), கோவை—2.
2362. பி. வி. லட்சுமி, எண்: 142, ஆர். பி. ஐ. குவார்ட்டர்ஸ், சென்னை—90.
2363. பி. கிருஷ்ணன், எண்: 142, ஆர். பி. ஐ. குவார்ட்டர்ஸ், சென்னை—90.
2365. இரா. சுதா, 60, சாமி ஐயர் புது வீதி, கோவை—1.
2366. ர. பிரியா, 21, வக்கீல் தெரு, ராணிப்பேட்டை, வ. ஆ. மாவட்டம்.
2367. எம். விஜயா, 9/1, பிளாக், தர்மல் காலனி, மேட்டூர் அணை—1.
2368. க. வெங்கட்ராஜ், 20—ஏ, கே. பி. காலனி, யூனியன் மில் ரோடு, திருப்பூர்.
2369. கே. வைத்தியநாதன், 30, பழைய டன்டிட் குவார்ட்டர்ஸ், அண்ணாமலை நகர்——608 002.
2370. எஸ். மல்லிகா மீனாட்சி, 125—ஏ, மெக்ரிகர் வீதி, ஆர். எஸ். புரம், கோவை.
2371. எஸ். செந்தில்முருகன், 125—ஏ, மெக்ரிகர் வீதி, ஆர். எஸ். புரம், கோவை.
2372. பா. அகிலா, 25, ஆராவமுது தோட்டம் தெரு, சென்னை—8.
2373. ஆர். பாலாஜி, 37, எஸ். பி. காலனி, எம். எச். ரோடு, சென்னை—11.
2374. வி. சங்கர், 28, புவனேஸ்வரி நகர், சென்னை—44.
2375. எஸ். ஸ்வர்ணாம்பிகா, 58, ஸ்டேட் பாங்க் காலனி எக்ஸ்டென்ஷன் — 2—வது தெரு, சென்னை—61.

2376. சி. திருப்பதி, ஏ–3, பெரிய கடை வீதி, கரப்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.
2377. கே. ஞானஸ்கந்தன், த/பெ. எஸ். பி. கிருஷ்ணமூர்த்தி, செருகளத்தூர்–612 604.
2378. ஏ. புவனேஸ்வரி, 1990, மேற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்.
2379. ஜி. செந்தில்குமார், c/o . பி. கணபதி, மெயின் ரோடு, மாரியம்மன் கோவில், தஞ்சை
2380. டி. லட்சுமி நரஸிம்மன், 15, காசாங்குளம் கீழ்கரை, பட்டுக்கோட்டை.
2381. வி. சுப்ரமணியன், 35, சௌடம்மன் கோயில் வீதி, கோவை–1.
2382. எஸ். ஜெயராமன், 1–39, பெருமாள் கோவில் தெரு, புதூர், திருநெல்லிக்காவல்–610 205.
2383. டி. கே. ராமசாமி, 6, கீழ அக்ரகாரம், லால்குடி.
2384. S. Sandhya, 3/14 Anand nagar, Khandwal Marg, Bandup westr, Bombay-78.
2385. பி. எஸ். விவேகானந்தன், 137, 4–வது குறுஞ்சாலை, மின்சார நகர், சழிஞ்சூர், வேலூர்–6.
2386. ச. சுரேஷ், 66, வி. ஏ. கே. நகர், ஆரணி–632 301.
2387. எஸ். ஆர். கே. பாலாமணி, 67, 3–வது வீதி, கணபதிபுதூர், கோவை.
2388. டி. எஸ். சத்தியநாராயணன், 25, டிரங்க் ரோடு, வாலாஜாப்பேட்டை-632 513.
2389. க. குருபிரசாத், எம். 152/1, மந்தாரக் குப்பம், நெய்வேலி–2.
2390. ந. நிர்மலா, c/o . மல்லய்யன் பெட்ரோல் பங்க், மரப்பாலம், மதுக்கரை போஸ்ட், (கோவை)
2391. கே. எஸ். கிருத்திகா, 4, காதர் மொஹிதீன் தெரு, ஈரோடு–1.
2392. நா. தீபா, ஜெ. ஏ. செல்வயல், வீட்டு வசதி வாரியம், கோவை–18.
2393. ஆர். அறிவுமணி, 28, சலைவாணர் தெரு, அரவக்குறிச்சி–639 201.
2394. எஸ். சந்திரமௌளி, சுந்தரமூர்த்தி, விநாயகர்புரம், வில்லியனூர்–605 110.
2395. இரா. சத்திய மூர்த்தி, சிறுகளப்பூர் – 621 651.
2396. ஏ. எஸ். வெங்கடாச்சாரி, 31, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர், திருச்சி மாவட்டம்.
2397. இரா. தியாகராஜன், c/o . ஆர். வெங்கடேஸ்வரன், போஸ்ட் ஆபீஸ் தெரு, தண்டலைப்புத்தூர் – 621 217.
2398. பி. சுசீந்தர், 114/4, காமு கார்டன் தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி–6.
2399. எஸ். சுந்தர பாரதி, 2, சீதாநகர், தஞ்சாவூர்.
2400. பி. பாக்கியராஜ், சரஸ்வதி இல்லம், தெப்பம்பட்டி–626 512.
2401. என். செல்லபத்மா, ஸ்ரீநிவாச நிலையம், மலைப்பேட்டைத்தெரு, விருதுநகர்.
2402. என். ராமசாமி, ஸ்ரீநிவாச நிலையம், மலைப்பேட்டைத்தெரு, விருதுநகர்.
2403. டி. சோலையப்பன், 39, மங்காபுரம், மெயின்ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர்.
2404. எம். சேகர், குசவிளை, அம்மாண்டி விளை, கன்னியாகுமரி மாவட்டம்.
2405. ஜெ. வெங்கட்ராமன், 23/ஏ, ரயில்வே காலனி, மயிலாடுதுறை சந்திப்பு–609003.
2406. செ. குமார், 40/ஏ, வசந்தநகர் காம்பவுண்டு, டி. பி. கே. ரோடு, மதுரை–3.
2407. அ. முத்துக்கிருஷ்ணன், 6, நேதாஜி ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர்.
2408. கே. ஸ்ரீவித்யா, 128, தமிழ்நாடு சிமெண்ட் காலனி, தமிழ்நாடு சிமெண்ட் போஸ்ட் –626 127.
2409. கே. விமலா, டைப்–10, வீட்டு எண் 28, தமிழ்நாடு சிமெண்ட் காலனி, தமிழ்நாடு சிமெண்ட் போஸ்ட், 626 127.
2410. கோ. நற்றுணை, 1–ஏ, உடையார் தெரு, திருவாரூர்.
2411. இரா. நடராஜன், த/பெ. மா. இராமலிங்கம், பூம்புகார் பேரவைக் கல்லூரி, மேலையூர்–609 107.
2412. ரோஹிணி, ஏ–4, மகாலட்சுமி, அபார்ட்மெண்ட்ஸ், 6, சுந்தர்ராஜன் தெரு, சென்னை–18.
2413. சி. சந்தோஷ், 1, தேர் வீதி, கோபி–638 452.
2414. வி. லலிதா, 41, ஒத்தக் சக்கர வீதி, கோவை–1.
2415. நா. அசோக், 41–ஏ, அக்ரகாரம் தெரு, பெருந்துறை 638 052.
2416. பொ. இலட்சுமணன், 12, சின்னத் தெரு, தக்கோலம்–631 151.
2417. எஸ். நடராஜன், த/பெ. என். சுப்பிரமணியம், கணக்குப்பிள்ளை காம்பவுண்ட் ம.வி. பட்டிணம், உடுமலைப்பேட்டை.
2418. ஜி. ஸ்ரீராமமூர்த்தி, த/பெ. எஸ். கோபால் நாரணன், டீ.ஜி.ஐ.சி.எல். காலனி, இந்தியா சிமெண்ட்ஸ் லிட், சங்கர் மேற்கு–637 303.
2419. டி. தீர்த்தாரப்பன், 7, ராஜபவனம், பெருமாள்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி–7.
2420. இரா. சீனிவாச பாலாஜி, த/பெ. ராஜாமணி, சுப்பையர் காம்பவுண்டு; அண்ணாநகர், சாலை, திருப்பத்தூர்– 623 211.
2421. வி. ஆனந்தவல்லி, 29, ஆதிமூலம் பிள்ளை அக்ரகாரம், மதுரை–1.
2422. எஸ். ஸ்ரீப்ரியா, 10வதுப்ளாக் நம்பர் 18, வீட்டுவசதிவாரியம், உறையூர் திருச்சி–3.
2423. ஆர். ஹேமமாலினி, 22, வாகீசம்பிள்ளை காலனி, வடவூர், தெ. ஆ. மா.
2424. ஆர். சௌதமன், 22, வாகீசம்பிள்ளை காலனி, வடவூர், தெ. ஆ. மா.
2425. வ. விமலா, 31, ஏ. சி. சங்கரலிங்கம் தெரு, விருதுநகர்.

(இன்னும் வரும்.)

சார், தபால்!

திரைப்படம் போல் இருந்தது!

● 'தமிழ்த் தாத்தா'வை மறக்க முடியுமா? அவர் எழுதிய கட்டுரையைப் படித்து, அந்தக் காலப் பள்ளிக்கூடம், படிப்பு எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன்.

—எம். சித்ரா, கோவில்பட்டி.

● ஔவையார் பற்றிய படக்கதை நேரிலேயே திரைப்படம் பார்ப்பது போல் இருந்தது.

—அ. முஹம்மது நிஜாமுதீன், ஜின்னாநகர்.

● 'என் கதையைக் கேளுங்கள்' என்று மிருகங்கள் அவ்வப்போது தங்கள் கதையைச் சொல்லுகின்றனவே, அக்கதையை எழுதுபவர் யார்?

—ஜெயமுத்து, இராஜபாளையம்.

(யார் என்று கண்டுபிடியுங்கள், பார்க்கலாம். —ஆசிரியர்.)

● திரு. தங்கமணியின் 'மண்டு' நாடகத்தையும், திரு. கதர்ஸனின் நான்கு ஜோக்குகளையும் படித்து விட்டு ஐந்து நிமிடம் வயிறு குலுங்கச் சிரித்தோம்.

—தா. சிந்துகுமார் (4764), திருவட்டார்.

● தொடர்கதையில், சேரன் இரண்டு முரடர்களிடம் பிடிபட்டு விடுவானோ என்று பயமாக இருக்கிறது.

—எம். கல்யாணசுந்தரம் (7722), கோணபட்டு

● வரிக்குதிரையின் கட்டுரையைப் படித்த போது, அதுவே நேரில் வந்து பேசுவது போலிருந்தது.

—ஆர். குருராஜன், சென்னை-5.

● இதைப்போல் மற்ற விலங்குகளைப் பற்றியும் தொடர்ந்து வெளியிட்டால் சிறப்பாக இருக்கும்.

—அன்புதாசன், கவுந்தப்பாடி.

● 61—ஆம் பக்கத்தில் சுப்பு வாத்தியார் கேள்வி கேட்கும்போது 'ஏண்டா கண்ணை மூடிக்கிறே?' என்றல்லவா இருக்க வேண்டும்? 'முழிக்கிறே?' என்று பிரசுரிக்கப்பட்டுள்ளதே!

—கே. ராமசுப்பிரமணியன், திண்டுக்கல்.

● அருமைச் சிறுவர் சிறுமிகளுடன்
அட்டைப்படத் தலைவர்களுடன்,
மின்னும் மின்மினிக் கதைகளுடன்
மிரள வைக்கும் தொடர்கதையுடன்
சிரிக்க வைக்கும் மாலி-ஜாலியுடன்
திகைக்க வைக்கும் படக்கதையுடன்
பொங்கி எழும் சிங்கங்களுடன்
புகழ் பெற்ற ஓவியங்களுடன்
மாதம் ஒரு முறையாக
மலர்வது தான் கோகுலமே!

—ந. பொன்ராஜ் (3176), கமுதி.

● 'கேளுங்கள் சொல்லுகிறேம் பகுதி' பொது அறிவை வளர்க்கும் ஓர் அற்புதமான பகுதி. தொடர்ந்து வெளியிடுங்கள்.

—என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

● ''இவ்வாறு மாணவர்கள் மனத்தில் அச்சத்தை உண்டாக்கிக் கல்வி புகட்டும் இந்த வழக்கம் இக்காலத்தில் யாவராலும் கண்டிக்கப்படுகிறது'' என்ற தமிழ்த் தாத்தா உ.வே.சா. வின் கருத்தை ஆயிரத்துக்கு ஒருவர் உணர்ந்தால், நாடு ஒரு நல்ல வரைப் பெற்றதாகப் பொருள்.

—தெ. முருகசாமி, காரைக்குடி.

● பாடப் புத்தகத்தில் கூட எங்களுக்கு உ.வே.சாமிநாதையர், ஆபிரகாம் லிங்கன், இவர்களைப் பற்றி இவ்வளவு அழகாக விளக்கவில்லை. இருவரின் படங்களும் ஜோர். பிரேம் போட்டு மாட்டிவிட்டேன்.

—அழ. நடராஜன், அண்ணாமலைநகர்.

● குழந்தைப் பருவம் கட்டுரையில், எனக்குத் தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

—ஹா. சாயிரா பேகம் (4582), வால்குடி.

● மண்டு — தங்கமணி ஸாரி... ஸாரி... தப்பு, தப்பு. (நாடகம் எழுதியவர் கோபித்துக் கொள்வாரே!) தங்கமணி எழுதிய 'மண்டு' நாடகம் வாய்விட்டுச் சிரிக்க வைத்தது... ஸாரி... ஸாரி!

—ரெ. ஜோதி (8355), திருவாரூர்-2

● 'ஆழ்கடலில் அப்பாவுடன் போனேன்' கட்டுரை மூலம் ஆபிரகாமின் அனுபவத்தைக் கேட்டு அளவில்லாத மகிழ்ச்சி. தொடர்ந்து இதுபோல் கட்டுரைகளை வெளியிடுங்கள்.

'மாயத் திரை' அருமையான கதை. பல சிறுவர்களின் பார்வையை மறைத்துள்ள 'திரையை' விலக்கி இது உதவும் என்பதில் ஐயமில்லை.

—கே. எஸ். நாகசாமி, பெருங்களத்தூர்.

● 'இலை ஓவியம்' நல்ல பொழுது போக்கு; எளிய பொழுது போக்கு.

—என். சுந்தரி, புதுச்சேரி.

● 'மின்மினிக் கதைகள்' ஒவ்வொன்றும் மறந்து போகாமல், மனத்தில் மின்னிக் கொண்டே இருக்கிறது.

—ஆர். அமுதா, வடுகவிருட்சியூர்.

அறுந்துபோன செருப்பு

எம்.கருப்பையா

இதோ வந்துவிட்டேன். இன்னும் ஒரு பர்லாங் தூரம் கூட இருக்காது. இண்டர்வியூ நடைபெறப் போகும் கட்டிடம் கூட உயரமாகத் தெரிகிறது. 'இந்த இண்டர்வியூ முடிவு என்ன ஆகப் போகிறதோ!' என்பதை விட வேறொரு கவலை மனத்தில் விசுவரூபம் எடுத்து நின்றது. வேறொன்றுமில்லை — என்னுடைய வயதான செருப்பின் நிலை! இண்டர்வியூ முடிந்து வரும்வரை அறுந்துபோகாமல் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமே!

இண்டர்வியூவிற்கு இன்னும் அரை மணி நேரம் பாக்கியிருக்கிறது. வீட்டிலிருந்து நடந்தே வந்துவிட்டதால் பையில் கொஞ்சம் சில்லறை. ஆனால்... சரக்! இதுவரை உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த செருப்பு உயிரை விட்டது. திடீரென மனம் முழுவதும் ஒரு பயம் வந்து கப்பிக் கொண்டது. நான் இண்டர்வியூவிற்குப் போகும் இடமோ செருப்பு இல்லாமல் போக முடியாது. சுற்றிலும் பார்த்தேன். யாரும் என் நிலையைப் பார்க்கவில்லை. சிறிதுதூரத்தில் ஒரு மரத்தடியில் ஓர் ஆபத்பாந்தவன். மனச்சுமை சிறிது குறைகிறது. கையில் செருப்புடன், குனிந்த தலையுடன் மரத்தடி நோக்கி விரைகிறேன்.

என்னைப் பார்க்கிறார்! என் செருப்பைப் பார்க்கிறார். ஒன்றுமே பேசவில்லை. அமைதியாக என் செருப்பைச் செப்பனிட ஆரம்பிக்கிறார். என் சிந்தனையோ செருப்பையே சுற்றி வருகிறது.

கல்லூரியில் என்னுடைய ஆசிரியர் கூறியது நினைவிற்கு வருகிறது: ''ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரால் உலகில் எத்தனையோ கோடிப் பேர் பிழைப்பு நடத்துகிறார்கள். அவரது நாடகங்களை அச்சிடுவோர், விற்பவர்கள், கற்பிப்போர், நடிப்பவர்கள் என்று பல பேர் உள்ளார்கள்,'' என்று கூறுவார்.

செருப்பினால் பிழைப்போர் தொகையை எண்ணிப் பார்த்தேன். அடேயப்பா! செருப்பு தயாரிப்போர், விற்போர், பழுது பார்ப்போர், இடம் விட்டு இடம் மாற்றும் போக்குவரத்துச் சாதனம் உடையோர் — இப்படி உலகம் முழுவதும் எவ்வளவு பேர் இருப்பர்?

திடீரென ஒரு சிந்தனை. செருப்பு எப்படித் தோன்றியிருக்கும்?

சிறு வயதில் படித்த கதை ஞாபகத்திற்கு வந்தது. ஒரு ராஜா தோட்டத்தில் உலவுகையில் காலில் முள் குத்தி விட்டது. கோபமடைந்த ராஜா தான் நடக்கும் இடமெங்கிலும் கம்பளம் விரித்துவர ஆணையிட்டார். இதனால், ஏகப்பட்ட செலவும் அசௌகரியமும் ஏற்பட்டன. ஒரு புத்திசாலி மந்திரி ஒரு அளவான தோலையெடுத்து ராஜாவின் காலைச் சுற்றிக் கட்டிவிட, அதுவே படிப்படியாய் வளர்ந்து இன்றைய செருப்பானதாம்.

'செருப்புக்கு வேறென்ன சிறப்பு இருக்கிறது?' என்ற கேள்வி பிறந்ததும் இராமாயணம் நினைவிற்கு வந்தது. ராமருடைய பாதரட்சைகளைப்



பரதன் சுமந்து வந்து சிம்மாசனத்தில் வைத்து நாடாண்டான் அல்லவோ! ஓர் அரசகுமாரன் தலையில் சுமக்குமளவும், ஒரு நாட்டின் அரியணையில் அமருமளவும் சிறப்புப் பெற்றிருக்கிறதே செருப்பு!

மகாபாரதத்திலும் செருப்பைப் பற்றிய செய்தி உண்டு. ஒருமுறை தர்மர் இருந்த அறைக்கு அர்ஜுனன் வந்தார். அவர், 'நாளை முதல் கலி காலம் துவங்க இருக்கிறது' என்றார். அதற்கு தர்மர் சொன்னார்: ''நாளை முதல் கலி காலம் துவங்க இருப்பது இப்போது உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே—அவசரத்தில் காலணிகளுடனேயே நீ அறைக்குள் நுழைந்துவிட்டாயே!'' — உடனே அர்ஜுனன் தன் தவறை உணர்ந்து தலைகவிழ்ந்தார்.

காவியங்களில் மட்டுமா இடம் பெறுகிறது செருப்பு? இல்லை. கடவுளைப் பற்றிய பேச்சிலும் வருகிறது. கண்ணப்ப நாயனார் புராணம் அனைவருக்கும் தெரியும். கண்ணப்பர் மான்



இறைச்சியைத் தேக்கிலையில் வைத்து, இறைவனை உண்ணுமாறு வேண்டுகிறார். சோதிக்க எண்ணிய சிவபெருமான் கண்ணொன்றில் செந்நீர் பெருக்குகிறார். கண்ட கண்ணப்பர் திகைக்கிறார். தம் கண்ணொன்றைப் பெயர்த்துக் கடவுளின் கண்ணில் அப்புகிறார். செந்நீர் நிற்கிறது. ஆனால், சோதனை தொடர்கிறது. இறைவனின் மற்றொரு கண்ணில் இரத்தம் வடிகிறது. ஆனால், கண்ணப்பர் மனமோ வருந்தவில்லை.

ஏனெனில், கையில் மருந்திருக்க வருத்தமெதற்கு? மற்றொரு கண்ணை எடுத்து அப்ப வேண்டும். ஆனால், இருப்பதோ ஒரே கண்! அதைத் தோண்டிவிட்டால், இறைவன் கண்ணில் அப்பும் வரை பார்வை வேண்டுமே? கவலைப்படவில்லை கண்ணப்பர். செருப்பணிந்த தம் காலைத் தூக்குகிறார். ஆண்டவன் கண்ணை மிதித்துக் கொண்டு, தன் கண்ணைத் தோண்டி அப்பினார். எண்சாண் உடம்பிற்குப் பிரதானமான கண் — அதிலும் ஆண்டவனின் கண்— அதன் மீதே படும் பாக்கியம் கிடைத்திருக்கிறதே செருப்பிற்கு!

ஓ! செருப்பைப் பற்றி இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றனவா? மனத்திற்குள்ளே வியந்தபடி எனக்கு உதவும் அந்தத் தொழிலாளியைப் பார்க்கிறேன். அவர் இன்னும் தைத்து முடிக்கவில்லை. பார்வையைத் திருப்புகிறேன். 'காந்தி' திரைப்பட விளம்பரம். உடனே காந்தியின் காலணிகள் மியூசியத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது ஞாபகம் வந்தது. மற்றொரு செய்தியும் நினைவிற்கு வந்தது.

ஒருமுறை காந்தியடிகளை ஆங்கில அரசு சிறையில் அடைத்திருந்தது. காந்தியடிகள் தான் சிறிது நேரத்தைக் கூட வீணாக்க மாட்டாரே! சிறையில் இருந்தபடியே ஒரு ஜோடி காலணிகளைத் தயாரித்துவிட்டார். சிறையிலிருந்து விடுதலை ஆகும் போது அந்தக் காலணிகளைச் சிறை அதிகாரியான வெள்ளைக்காரருக்குக் கொடுத்துவிட்டார். அந்த ஆங்கிலேயருக்கோ காந்தியின் மீது மிகுந்த மரியாதை. காந்தி அளித்த அந்தக் காலணிகளை அவர் அணியவில்லை. ஒரு மகானின் நினைவாக அக்காலணிகளை ஒரு பொக்கிஷமாக — தம் வாழ்நாள் முழுவதும் பாதுகாத்து வந்தார்.



அப்போது ஒரு மணியோசை என் கவனத்தை ஈர்த்தது. பக்கத்திலிருந்த மாதா கோயிலில் பிரார்த்தனைக் கூட்டம் துவங்குகிறது. ஓ! பைபிளிலும் செருப்பைப் பற்றிய செய்தி உள்ளதே! மாற்கு சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் யோவான் இயேசுவின் வருகையைப் பற்றிக் கூறுகையில், ''எனக்குப் பின் வருபவரின் காலணிகளைத், தொட்டு அவிழ்க்கவும் நான் தகுதி உடையவனில்லை,'' என்று கூறுகிறார்.

என்னைக் கற்பனை உலகத்திலிருந்து நினைவிற்குக் கொண்டு வருகிறது — ''சார்! இதைப் போட்டுப் பாருங்கள்'' என்ற வார்த்தைகள். ஓ! என் செருப்பு இப்போது தயார் ஆகிவிட்டது. அவசரமாக அதைப் போட்டுக் கொண்டு — கொஞ்சம் அதிகமாகவே காசைக் கொடுத்துவிட்டு — விரைகிறேன். இண்டர்வியூவிற்கு நேரம் நெருங்கிவிட்டதே!

விரைவாக நான் நடந்தாலும், என் சிந்தனை மீண்டும் செருப்பைப் பற்றியே திரும்புகிறது. ''காலில் செருப்பைப் போட்டுக்கொள்வாயானால் நீ முள்ளின் மேலும் சுலபமாகப் போகலாம். ஞானமாகிய செருப்பைப் போட்டுக் கொள்வாயானால் நீ உலகமென்னும் முள் நிறைந்த வனமெங்கும் பயமின்றித் திரியலாம்'' என்பது பகவான் இராமகிருஷ்ணரின் தத்துவ மொழி.

நான் வரவேண்டிய அலுவலகம் வந்து விட்டது. ''காலுக்கேற்ற செருப்பாயிருக்க வேண்டும்; செருப்புக்கேற்பக் காலை மாற்ற முடியாது''— என்று மனத்தில் எழுந்த சிந்தனையை உதறிவிட்டு அலுவலகத்தின் உள்ளே நுழைகிறேன். சரியான நேரத்தில் நுழைந்துவிட்டேன்.

''மாத்யூ—காலணி தயாரிப்போர்'' என்ற கம்பெனி விலாசம் கம்பீரமாய்த் தெரிகிறது. இண்டர்வியூவிற்கு வந்திருந்த மற்றவர்களுடன் அமர்கிறேன்.

சிறிது நேரத்தில் உள்ளேயிருந்து ஒருவர் வந்தார். ''அன்பு நண்பர்களே! இந்த நேர்முகத் தேர்விற்கு வந்த உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். இப்பொழுது நீங்கள் ஒரு சிறு தேர்வு எழுதப் போகிறீர்கள். ஒவ்வொருவருக்கும் பேப்பர் வழங்கப்படும். நீங்கள் ஒரு கட்டுரை எழுத வேண்டும். பதினைந்து நிமிடத்தில் எழுதி முடிக்க வேண்டும். கட்டுரையின் தலைப்பு—'செருப்பின் சிறப்பு' '' என்று கூறி முடித்தார்.

இண்டர்வியூ பற்றிய பயம் திடீரென மறைந்தது. மனம் முழுவதும் ஒரு மகிழ்ச்சி பரவியது. இதுவரை என் மனத்தில் எண்ணிக் கொண்டிருந்தவைகளை மடமடவென்று எழுத ஆரம்பித்தேன்.

கடைசியாகச் செருப்பைப் பற்றிய ஒரு சிலேடைப் பாட்டு ஞாபகம் வந்தது. செருப்பையும், திருடனையும் இணைத்து அழகிய சொக்கநாதப் பிள்ளை இயற்றியது. ''செருப்பை அளவு கண்டு தைக்கிறார்கள்; திருடனை களவு கண்டு உதைக்கிறார்கள். செருப்பும், திருடனும் கல், முள்ளைக் கண்டு அஞ்சுவதில்லை. செருப்பை 'மிதியடி' என்கிறார்கள். திருட்டைக் கண்டுபிடித்துவிட்டால், திருடனை, 'மிதி,' 'அடி' என்கிறார்கள்'' என்று புலவர் நகைச்சுவையாக எழுதியிருந்தார்.



ஒரு வாரம் கழிந்த பின்னர் 'மாத்யூ காலணி கம்பெனி'யில் எனக்கு வேலை கிடைத்தது. இப்போது கை நிறையச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறேன். இப்போது புதுச் செருப்புப் போட்டிருக்கிறேன். இருந்தாலும், அன்றைக்கு அறுந்துபோன செருப்பை நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கிறேன். ஏனென்றால், அந்தச் செருப்பு அறுந்து போகாமலிருந்தால் இப்படிப் பல சிந்தனைகள் வந்திருக்குமா? அல்லது வேலைதான் கிடைத்திருக்குமா?



சீனவைச் சேர்ந்த மலைப்பிரதேசத்தில் யூ ஷின் என்னும் சிறுவன் இருந்தான். அவன் தன் அப்பா, அம்மா, தம்பி ஆகியோருடன் வசித்து வந்தான். யூ ஷின் ஒரு நல்ல பையன். இருந்தாலும், ஏதோ சில விநோதமான காரணங்களுக்காகப் பெற்றோர் அவனைத் திட்டினர்; அடித்தனர்; கொடுமைப்படுத்தினர். அவனுடைய தம்பி ஒரு நோயாளி. ஆகவே அந்தத் தம்பிக்கு மட்டும் பெற்றோர் செல்லம் கொடுத்து, அவன் மீது அன்பைப் பொழிந்தனர்.

யூ ஷினுக்கு அவனுடைய ஆசிரியர் நல்ல அறிவுரைகளைச் சொல்லியிராவிட்டால், அவன் அந்தக் கொடிய வீட்டை விட்டு ஓடிப் போயிருப்பான். "என்ன நடந்தாலும் சரி. எல்லாச் சீனச் சிறுவரும், சிறுமியரும் தங்கள் பெற்றோரை நேசிக்க வேண்டும். அவர்களிடம் பணிவாக இருக்கவேண்டும்," என்று அந்த ஆசிரியர் போதித்தார். "எல்லாப் பெற்றோர்களும் தங்கள் பெரிய பிள்ளைகளை அப்படித் தான் கொடுமைப்படுத்துவார்கள் போலிருக்கிறது," என்று யூ ஷின் நம்பினான். ஆகவே, அடி, உதைகளை அடக்கத்தோடு வாங்கிக் கொண்டான். ஓர் அப்பா தன் பிள்ளையிடம் அன்பாக இருப்பதைக் கண்டால், அதை அவன் அசாதாரணமாக எடுத்துக் கொண்டான்.

ஒருநாள் யூ ஷினின் அப்பா கோபமாக இருந்தார். யூ ஷின் அருகில் இருந்தான். அவன் எந்தவிதத் தவறும் செய்யவில்லை. இருந்தாலும் அப்பா அவனை அடித்து நொறுக்கிவிட்டார். சிறுவன் மிகவும் மனம் நொந்து, ஆசிரியரிடம் சென்று, "பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஏன் இம்மாதிரி கொடுமைப்படுத்துகின்றனர்?" என்று கேட்டான். வயது முதிர்ந்த அந்த ஆசிரியர் அன்போடு அவனைத் தடவிக் கொடுத்து, "குழந்தாய்! மனிதன் தோன்றியது முதலே அவனது இதயத்தில் தீமை இருக்கிறது. எல்லோரும் உன் அப்பாவைப் போல் இல்லாவிட்டாலும்; துரதிர்ஷ்டவசமாக அநேகம் பேர் தங்கள் இனிய குழந்தைகளைக் கொடுமைப்படுத்துகின்றனர். எதிர்காலத்தில் நீ ஓர் உயர்ந்த மனிதனாக வர வேண்டும். உன்னுடைய அப்பாவும் தன் கொடிய செய்கைகளுக்கு வருந்தி மனம் மாறும்.



படி நீ வாழ வேண்டும். இன்றைக்கே அந்த உறுதியை எடுத்துக் கொள்,'' என்று உபதேசித்தார்.

''என் தம்பியை மட்டும் அவர்கள் ஏன் கொஞ்சுகின்றனர்? அவன் வீட்டிலும் உதவி செய்வதில்லை; பள்ளியிலும் ஒழுங்காகப் படிப்பதில்லையே?'' என்று யூஷின் கேட்டான்.

''குழந்தாய்! நகுதி என்பது தாமதமாகச் செல்லும் ஒரு குதிரை. ஆனால், அது நிச்சயமாக இறுதியில் வெல்லும். தீயவர்கள் முதலில் காற்றைப்போல் பறந்தாலும் இடையில் தடுக்கி வீழ்வர். தோல்வி நிச்சயம். ஆகவே, தம்பியைப் பார்த்துப் பொறாமைப்படாதே. அவனுக்கு நல்ல எதிர்காலம் இல்லை. ஆனால், உனக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது.'' என்று அன்போடு சொன்னார், ஆசிரியர். அன்று முதல் யூ ஷின் தனக்கு என்ன நேர்ந்தாலும், அதைத் தைரியத்தோடு தாங்கிக் கொள்ளத் தீர்மானித்தான்.

அன்றிரவே யூ ஷினுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அவனுடைய அம்மாவும், அப்பாவும் யூ ஷினை ஒரு நாடோடிக் கூட்டத்திடம் விற்கத் திட்டமிட்டனர். இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டனர். யூ ஷினுக்கு அவை சரியாகக் காதில் விழவில்லை. யூ ஷின் பயந்தான். தன்னைக் காப்பாற்ற யாரும் இல்லையே என்று மனம் வருந்தினான். ''கடவுளே, நீயாவது என்னைக் காப்பாற்று!'' என்று சொல்லிவிட்டுத் தூங்கிப் போனான். கனவில் ஒரு தேவதை தோன்றினாள். ''யூ ஷின் பயப்படாதே. நீ நல்லவன். நீ பயப்பட வேண்டிய அவசியமே இல்லை,'' என்று சொல்லி அவனுடைய நெற்றியை அன்போடு வருடி விட்டுத் தேவதை மறைந்தாள்.

மறுநாள் காலை. வழக்கம்போல் யூ ஷின் தன் கடமைகளைக் கவனித்தான். அவர்களுடைய வீட்டில் நீர் வற்றிப் போன ஒரு கிணறு இருந்தது. அதில் ஒரு பாத்திரம் விழுந்து விட்டதென்றும், அதனை வெளியே

எடுக்குமாறும் யூ ஷினை அப்பா பணித்தார். அருகிலிருந்த மரத்தில் ஒரு தாம்புக் கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டு, யூ ஷின் கிணற்றில் இறங்கித் தேடிக்கொண்டிருந்தான். அந்தச் சமயம் பார்த்து அவனுடைய தம்பி கயிற்றை மேலே இழுத்தான்; ஒரு பெரிய எந்திரக் கல்லைத் தூக்கிக் கிணற்றினுள் எறிந்தான். யூ ஷின் நிமிர்ந்தான். ஆபத்தை உணர்ந்தான். வேறு வழியின்றிச் சாவதற்குத் தயாரானான்.

"யூ ஷின், பயப்படாதே! என்னைப் பார்!" என்று ஓர் இனிய குரல் கேட்டது. யூஷினுக்கு ஆச்சரியம். அந்த எந்திரக் கல் ஒரு தேவதையாக மாறி, இரு கரங்களையும் நீட்டிக் கொண்டே, "என் கைகளைப் பிடித்துக்கொள். மேலே போகலாம் வா!" என்று சொல்லிக் கொண்டு மெதுவாக மிதந்து வந்தது. அவ்வாறே யூ ஷின் கிணற்றுக்கு வெளியே வந்ததும், தேவதை மீண்டும் எந்திரக் கல்லாக மாறிவிட்டது. கல்லின் மேல் ஒரு வெள்ளை மலர் இருந்தது. அதன் இதழ்களில் "தைரியமாக இரு" என்ற வாசகம் காணப்பட்டது. யூ ஷினைக் கண்ட தம்பி பயந்து வீட்டுக்குள் ஓடி மறைந்தான்.

"கிணற்றுக்குள் ஒன்றும் இல்லை, அப்பா. எந்திரக் கல்தான் இருந்தது. அதை வெளியே எடுத்துப் போட்டு விட்டேன்," என்று சொல்லி, ஒன்றுமே நடக்கர்ததுபோல், யூ ஷின் வெளியே போய்விட்டான். அன்று முதல் பயந்தாங்கொள்ளியான தம்பி அவனுடைய வழிக்கு வரவில்லை. "கிணற்றிலிருந்து கல்லை வெளியே கொண்டுவர, ஏதோ ஒரு பூதம்தான் யூ ஷினுக்கு உதவி செய்துள்ளது," என்று அப்பா நம்பினார். அவனை மேலும் வெறுத்தார். ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

ஒருநாள் யூ ஷின் வீட்டுக்கு



வெளியே இருந்த குடிசையில் உட்கார்ந்து கொண்டு வைக்கோலை வெட்டிக் கொண்டிருந்தான். களைப்பினால் தூங்கிவிட்டான். திடுக்கிட்டுக் கண் விழித்தபோது அவனைச் சுற்றிலும் ஒரே தீ. குடிசை தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. குறுகிய வாயிற்புறத்தை அடைத்துக் கொண்டிருந்தது. தகப்பனாரும் தம்பியும்தான் இதற்குக் காரணம் என்பதை யூ ஷின் புரிந்துகொண்டான். "தைரியமாக இரு," என்ற தேவதையின் புத்திமதியை நினைத்துக் கொண்டான். உடனே, "படுத்துக்கொள், யூ ஷின், நெருப்பு உன்னை ஒன்றும் செய்யாது," என்று தேவதையின் குரல் ஒலித்தது.

அவ்வாறே யூ ஷின் படுத்துக் கொண்டான். அவனைச் சுற்றிலும் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. எனினும், அவனுக்குச் சமீபத்தில் சில அடி தூரத்திற்குக் குளிர்ச்சியான காற்று வீசியது. யூ ஷின் அமைதியாக உறங்கினான்.

யூ ஷின் கண் விழித்தபோது

அப்பாவும், தம்பியும் ஆச்சரியத்துடன் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். "பூ ஷின் மற்ற இளைஞர்களைப் போல இல்லை. அவனுக்குக் கடவுள் அருள் இருக்கிறது" என்பதை அவர்கள் உணர்ந்து அவனுக்குத் தீங்கிழைப்பதை விட்டுவிட்டனர்.

மறுநாள் காலை அப்பா பூ ஷினைக் கூப்பிட்டு, "இந்த வீட்டில் இடம் போதவில்லை. நெருக்கடியாக இருக்கிறது. மலையடிவாரத்தில் உள்ள நமது நிலத்திலிருந்து உனக்கு வேண்டிய பகுதியை எடுத்துக்கொள். பத்திரம் எழுதித் தருகிறேன். பயிர்த் தொழில் செய்து கிடைக்கும் வருமானத்தை நீயே வைத்துக்கொள். நீ வளர்ந்துவிட்டாய். ஆகவே, திருமணம் செய்துகொண்டு, உன் வாழ்க்கையைத் தொடங்கலாம்," என்றார். நல்ல நன்செய் நிலங்களை எல்லாம் தம்பிக்குக் கொடுத்துவிட்டு, பாறைகள் நிறைந்த பயனற்ற மேட்டு நிலத்தை அப்பா தனக்கு அளிப்பதை பூ ஷின் ஒருகணம் யோசித்தான். அங்கு பயிர் செய்வதோ, வாழ்க்கை நடத்துவதோ, முடியாத காரியம் என்பது அவனுக்குத் தெரியும். இருந்தாலும், அப்பா தன்னை விரும்பாததாலும், எப்படியாவது தன்னை வெளியேற்ற முயல்வதாலும், பூ ஷின் உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

அடுத்த நாள் அப்பா, அம்மா, தம்பி ஆகியோரிடம் விடைபெற்றுக் கொண்டு பூ ஷின் தன் புதிய இருப்பிடத்திற்குப் பயணமானான். மலை அடிவாரத்தை அடைந்தான். அந்த நிலம் அவன் நினைத்ததைவிட அதிக மோசமாக இருப்பதைக் கண்டான். பாறைகளும், மரங்களும், வேர்களும் மண்டிக் கிடந்தன. இருபது ஆட்கள் இராப் பகலாகப் பாடுபட்டும் அந்த நிலத்தின் ஒரு சிறுபகுதியைக் கூடப் பண்படுத்த முடியவில்லை. தனக்கு உதவி செய்யும்படி பூ ஷின் தேவதையை வேண்டினான்.

திடீரெனத் தொடுவானில் ஒரு புழுதிப் படலம் தோன்றியது. வான உச்சியில் கருமேகம் போன்ற நிழல்



படலம் தோன்றியது. புழுதிப் படலமும், நிழல் படலமும் யூ ஷினை நோக்கி நெருங்கி, நெருங்கி வந்தன. புழுதிப் படலத்தில் ஒரு பெரிய யானைக் கூட்டமும், நிழல் படலத்தில் ஒரு புறாக் கூட்டமும் வருவதைக் கண்டு, யூ ஷின் அதிசயித்தான். "யூ ஷின், கேள்! மிருகங்களும், பறவைகளும் நீ இட்ட வேலைகளைச் செய்து முடிக்கும். அவைகளுக்குத் தலைமை ஏற்று நடத்து," என்று ஒரு குரல் அவனுடைய காதில் ஒலித்தது.

தேவதைக்கு நன்றி சொல்லிவிட்டு யூ ஷின் செயலில் இறங்கினான். யானைகளுக்கு உத்தரவிட்டான். யானைகள் வெகு எளிதில் பாறைகளைப் பெயர்த்து எடுத்தன. அவற்றை நிலத்தைச் சுற்றிச் சுவர்களாக அடுக்கின. மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தன. யூ ஷின் புறாக்களுக்கு உத்தரவிட்டான். அவை,களைச் செடிகளையும், சிறுசிறு வேர்களையும் அலகுகளால் கொத்தி அப்புறப்படுத்தின. மண் கட்டிகளைக் கொத்திக் கொத்தி உடைத்தன. மனித முயற்சியால் திருத்த முடியாமல் இருந்த நிலம் ஒரே மணிநேரத்தில் வளமான பூமியாக மாறியது. யூ ஷின் வசிக்க ஒரு சிறு குடிசையும் கட்டப்பட்டது.

யூ ஷின் யானைகளுக்கும், புறாக்களுக்கும் நன்றி சொன்னான். யானைகள் வரிசையாக அணிவகுத்து நின்றன. அவை தலையைத் தாழ்த்தி யூ ஷினுக்கு வணக்கம் செய்து விட்டு மெதுவாக நடந்து சென்று மறைந்தன. புறாக்கள் யூ ஷினைச் சுற்றி மூன்று முறை வானத்தில் வட்டமிட்ட பிறகு வந்த வேகத்திலேயே மறைந்தன.


தேவதைக்கு மனமார்ந்த நன்றிவழிபாட்டை முடித்த பிறகு யூ ஷின் குடிசைக்குள் நுழையப் போனான். உடனே அவனுடைய எளிய குடிசை ஒரு பெரிய மாளிகையாக மாறியது. அதேசமயத்தில் ஒன்பது இளைஞர்கள் அவனை நோக்கி நடந்து வந்தனர். அவர்களுக்குப் பின்னால் ஓர் அழகிய பெண், குதிரை மீது வந்தாள். புதியவர்கள் யூ ஷினுக்கு வணக்கம் செய்தனர்.

"நான் ஒரு சாதாரணக் குடிமகன்தான். என்னை வணங்க வேண்டாம்," என்றான் யூ ஷின்.

"வயலில் உழைத்து உங்களுக்கு உதவி செய்யவே நாங்கள் வந்துள்ளோம். கட்டளை இடுங்கள். நிறைவேற்றுகிறோம்," என்று அவர்கள் பணிவாகக் கூறினர்.

யூ ஷினுக்கு எல்லாம் ஆச்சரியமாகத் தோன்றின. விருந்தினர்களை மாளிகையின் உள்ளே அழைத்துச் சென்றான். மேசை மீது அவர்களுக்காகச் சுவையான விருந்து காத்திருந்தது. எல்லோரும் உண்டு மகிழ்ந்தனர்.

யூ ஷின் அந்த அழகிய பெண்ணை மணந்தான். ஒன்பது இளைஞர்களுக்கும் ஏற்ற வேலைகளைக் கொடுத்தான். நாளடைவில் அவனுடைய பண்ணை செழித்தது. செல்வம் கொழித்தது. யூ ஷின் அன்போடும், அறிவோடும் செயல்பட்டான்.



'எ'க்கு அடுத்தது?

"அப்பா, 'எ'க்கு அடுத்தது என்ன எழுத்து?"

"ஏ"

"தப்பு, தப்பு. 'ஏ'க்கு அடுத்தது 'பி'தான்!"

—கீழை ஜி.எஸ்.தர்மலிங்கம்.



யூ ஷினுடைய புகழ் திசையெங்கும் பரவியது. அவனுடைய சிறந்த குணங்களைக் கண்டு மக்கள் சந்தோஷப்பட்டனர். அவனுடைய பெற்றோரும், தம்பியும் பெரிய ஏமாற்றமும் ஆச்சரியமும் அடைந்தனர். ஆனால் யூ ஷினுக்கு எதிராக அவர்களால் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை.

அப்போது தொலைவிலிருந்த தலைநகரில் புகழ்பெற்ற டிராகன் சிம்மாசனத்தில் அமர்ந்து சீனச் சக்கரவர்த்தி ஆட்சி செய்து வந்தார். அவர் தன் வீரர்கள் மூலம் யூ ஷினுக்கு அழைப்பு அனுப்பினார். இளம் மனைவியையும், இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு யூ ஷின் தலைநகருக்குச் சென்றான். "நான் ஒரு தவறும் செய்யவில்லையே. சக்கரவர்த்தி என்ன தண்டனை கொடுப்பாரோ?" என்று அவன் பயந்தான். "பயப்படாதே, யூ ஷின், எல்லாம் உன் நன்மைக்குத்தான்," என்று தேவதையின் குரல் ஒலித்தது.

சக்கரவர்த்தி கொலு வீற்றிருந்தார். யூ ஷினும், ஆட்களும் அவர் முன் சென்று பணிந்தனர். சக்கரவர்த்தி, "யூ ஷின்! நாம் உன்னைக் கௌரவிப்பதற்காகவே இங்கே அழைத்தோம். இளமையிலிருந்தே நீ பட்ட துன்பங்களை எல்லாம் நாம் அறிவோம். உனது முதிர்ந்த ஆசிரியர் வேறு யாருமல்ல. எம் அவையில் உள்ள ஓர் அமைச்சரே அவர். உழைப்பும், அறிவும், பணிவும் உள்ள ஒரு மகனைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியிலேயே அவர் உன் ஊருக்கு வந்தார். தேவதை உனக்கு உதவி செய்வதற்காக யானைகளையும், புறாக்களையும் அனுப்பியது போலவே, உன்னைப் பரிசோதிப்பதற்காகவே நாம் எம்முடைய அரசகுமாரர்களையும், அரசகுமாரியையும் உனக்குப் பணியாளர்களாக அனுப்பினோம். உன்னுடைய பண்ணையை நீ சீரோடும், சிறப்போடும் நடத்தி வந்திருக்கிறாய். உன்னுடைய புகழ் விரிந்து பரந்து உள்ளது. எமக்கு வயதாகிவிட்டதால் ஆட்சி ஒரு சுமையாகத் தோன்றுகிறது. யூ ஷின்! இந்தப் புராதன சிம்மாசனத்திற்கு வா. இந்தப் பரந்த சாம்ராஜ்யத்திற்குச் சக்கரவர்த்தியாக உனக்கு முடி சூட்டுகிறேன். இதுவரை சிறப்பாக வாழ்ந்தது போலவே, இனிமேல் நீ நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்," என்று ஆசீர்வதித்தார். அவ்வாறே யூ ஷினுக்கு அன்போடு முடி சூட்டினார். ஆசிரியர் சொன்னதைப் போலவே, குடியானவனின் மகனான யூ ஷின் தனது குண நலன்களால் கோலோச்சும் சக்கரவர்த்தியாக உயர்ந்தான்.





சிறுமி அளித்த பதில்!

மலர்வண்ணன்

ஒரு காலை விந்தி நடந்தவாறே, அந்தச் சிறுமி புத்தக மூட்டையோடு போய்க் கொண்டிருந்தாள்.

துவைத்துத் துவைத்துச் சாயம் போன அதே யூனிபாமில் அவளை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

பன்னிரண்டு வயது இருக்குமா? இருக்கலாம்.

ராமநாதபுரம் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் இருந்து, சிங்காநல்லூர் வரை ஏறத்தாழ அஞ்சு கிலோ மீட்டர் தூரம் அவள் தினமும் நடக்கிறாள். இதைப் பல நாள் பார்வையில் புரிந்துகொண்டிருந்தேன் நான்.

எங்கள் பள்ளி முடிந்து, தினமும் ஸ்கூட்டரில் வரும் போது அவளைப் பார்ப்பது வழக்கம்.

பாவம்...

பள்ளி மணி அடித்தது. அட்டென்டென்ஸ் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, வேகமாக வகுப்புக்குள் நுழைந்தேன்.

''குட் மார்னிங் சார்.''

''குட் மார்னிங் டியர் ஸ்டுடன்ட்ஸ்.''

லீடர் அட்டென்டென்ஸ் ரெஜிஸ்டரை டேபிள்மேல் கொண்டுவந்து வைத்தான். புரட்டினேன்.

பெயர்களைக் கூப்பிட்டேன். ராமநாதன் வரவில்லை என்று தெரிந்தது.

''என்னடா, இவனுக்கு என்ன ஆச்சு?''

''வந்திடுவான் சார்.''

''ம்.. நேத்திக்கு லேட்டா வந்தான். 'தொலையுதுன்னு அட்டென்டென்ஸ் போட்டேன். இன்னைக்கும் லேட்டா? என்னடா பையன் இவன்? பத்தாம் வகுப்பு வந்துட்டு இப்படியா இருக்கிறது?''

பத்து நிமிஷம் பறந்தோடியது. வாசல் பக்கம் பார்த்தேன். ராமநாதன் வெளியே நின்றிருந்தான்.

கோபம் கோபமாக வந்தது.

''ஏண்டா, லேட்?''

''லேட் ஆயிடுச்சுங்க சார்.''

''அதுதான் ஏன் என்கிறேன்.''

ராமநாதன் ஒரு காலை இன்னொரு காலால் மிதித்து விட்டவாறே அழுகுரலில் சொன்னான்.

''வீடு ரொம்ப தூரத்திலே இருக்குங்க சார். நடந்து வர்றதாலே எப்படியோ லேட் ஆயிடுது... இனிமே நேரத்திலே வந்திடறேன்.''

எனக்குள் பரிதாபம் ஏற்பட்டது.

''எங்கேப்பா வீடு?''

''காளப்பட்டி சார்.''

''அடேயப்பா, அங்கே இருந்து வறியா?''

அனுதாபம் அவன் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. தலையை ஆட்டியவாறே மெல்ல விசும்பினான்.

''அங்கே ஸ்கூல் இல்லையா, என்ன?''

''இருக்கு சார். எங்கப்பாவோட முதலாளி திமிர்னு எங்க அப்பாவைக்

கானப்பட்டிக்குப் போகச் சொல்லிட்டார். அங்கே இருக்கிற தோட்டத்தை அப்பாவைக் கவனிக்கச் சொல்லிட்டார். பத்தாம் வகுப்பிலே இடம் மாற வேண்டாம், படிப்புப் பாதிக்கும்னு இந்த ஒரு வருஷம் இங்கேயே படிடான்னு அப்பா சொல்லிட்டார். அதான்...''

ராமநாதன் அவ்வப்போது கால்களை மாற்றி மாற்றி மிதித்துக் கொண்டான்.

''ஏண்டா?'' என்றேன்.

''வலிக்குதுங்க சார்.''

''சரி, சரி, உள்ளே வா...''

உள்ளே வந்தவனின் கால்களையே கவனித்தேன். இலேசாக வீங்கியிருந்த மாதிரி இருந்தது.

மனசை யாரோ பிழிந்தார்கள்.

சட்டென்று, அந்தச் சிறுமியின் நினைவு வந்தது.

'இவ்வளவு பெரிய பையனே இப்படித் துடிக்கும்போது, பாவம், அந்தப் பெண் எவ்வளவு துடித்துப் போவாள்?'

ராமநாதன் நடப்பது ரொம்ப தூரம்தான். அவ்வளவு தூரம் அந்தச் சிறுமிக்கு இல்லை என்றாலும் அவள் வயதுக்கும், ஊனத்துக்கும் அது பெரிய தண்டனை இல்லையா?

ஆசிரியர்களின் அறைக்குள் வந்து சேரில் உட்காரும் போது பளிச்சென்று அந்த எண்ணம் தோன்றியது.

அவளை ஏன் ஸ்கூட்டரில் அழைத்துப்போகக் கூடாது? ஏதோ நம்மால் முடிந்த உதவி.

இந்த நினைவே எனக்குள் ஒரு பெரிய நிம்மதியைத் தந்தது. எவ்வளவு சந்தோஷம்!

பிறருக்கு உதவும்போதுதான் உண்மையான, முழுமையான சந்தோஷமே கிடைக்கிறது.

மணி எப்போது நான்கு ஆகும் என்று காத்திருந்தேன்...

ஒரு வழியாக எட்டு பீரியடும் முடிந்து நான்கு மணிக்கு வெளியே வந்தேன். ஸ்கூட்டரில் தாவி உட்கார்ந்தேன்.

அச்சிறுமி படிக்கும் பள்ளியை நோக்கிச் சென்றேன்.

பள்ளி முடிந்து எல்லா மாணவிகளும் போய்க் கொண்டு இருந்தார்கள். அக்கூட்டத்திலே அவளைக் காணவில்லை.

கொஞ்ச தூரம் போய்ப் பார்ப்போமா?



மெதுவாக ஸ்கூட்டர் ஓடிக் கொண்டே இருந்தது. ஒரு திருப்பத்தில் வளைந்து திரும்பியபோது—

ஒரு காலை விந்தி விந்தி நடந்தவாறே அந்தச் சிறுமி புத்தக மூட்டையோடு போய்க் கொண்டிருந்தாள்.
தாள்.

ஆக்ஸிலேட்டரை முடுக்கினேன். அவள் பக்கத்தில் போனதும் ப்ரேக்கை அழுத்தி ஸ்கூட்டரைச் சடக்கென்று நிறுத்தினேன்.

அந்தச் சிறுமி பயத்தோடு துள்ளிக் குதித்தவாறே, திரும்பிப் பார்த்தாள்.

''ஏம்மா, உன் கண்களில் ஏன் இத்தனை பயம்?''

நான் திட்டி விடுவேனோ என்கிற மாதிரி பார்த்தாள்.

''நீ சிங்காநல்லூர்தானே?''

''ம்...''

''...பாப்ப நாயக்கன் பாளையம் மணி ஹைஸ்கூல் தெரியுமா, உனக்கு?''

''ஓ... பெரிய ஸ்கூல் ஆச்சே...''

''ஆமா. அந்த ஸ்கூலிலே நான் வாத்தியாரா இருக்கேன். நீ ராமநாதபுரம் கேர்ள்ஸ் ஸ்கூல்லேயா படிக்கறே?''

''ஆமாங்க சார்.''

''இங்கே பாரும்மா. நீ ரொம்ப தூரம், தினமும் நடக்கிறதை நான் பார்த்திட்டுத்தான் வர்றேன். அது உனக்குச் சிரமமா இல்லே?''

அவள் முகம் சட்டென்று மாறியது. பல்லைக் கடித்துக்கொண்டாள்.

''என்னங்க சார் பண்றது? படிக்கணும்னு ஆசை. பஸ்லே வந்து போக வசதியில்லை.''

நான் அவள் கால்களைப் பார்த்தேன். வலது கால் பாதத்தை எந்தப் பாவியோ பிடித்துத் திருகி விட்டதைப்போல இருந்தது.

''நான் தினமும் இதே வழியில் தாம்மா போறேன். உன்னை உங்க வீட்டிலே இறக்கி விட்டுடறேன். காலையிலே வேணும்னாலும் கொண்டுபோய் விடறேன்... உட்காரும்மா...''

அவள் தயங்கினாள்.

''பரவாயில்லேம்மா.. இன்னைக்கு எங்க ஸ்கூல்லே ஒரு அனுபவம்... அதுதான்...''

அவள் கண்களில் ஒரு நிமிஷம் ஆசை மின்னியவாறே மறைந்து போய்விட்டது. தலை குனிந்தாள்.

''வேண்டாங்க சார்...''

''ஏம்மா?''

''இப்போ நடக்கிறது எனக்குப் பழகிப் போச்சு. எந்த வருத்தமும் எனக்கு இல்லே. ஆனா, நாலு நாள் ஸ்கூட்டர்லே வந்து பழகிட்டா அப்புறம் நடக்கிறது கஷ்டமா இருக்காதா? எப்படிப் பார்த்தாலும் நான் மறுபடியும் நடந்துதானே ஆகணும்? இந்தச் சுகம் என் மனசையே கெடுத்திடுமே சார். சார், எங்க தமிழ் ஆசிரியை இன்னைக்கு ஒரு கதை சொன்னாங்க. பிறவிக் குருடன் ஒருத்தனுக்குத் திடீர்னு கண் வந்திடுச்சாம். அவன் ரொம்ப சந்தோஷமா ஒவ்வொண்ணையும் பார்த்துப் பார்த்துச் சந்தோஷப்பட்டானாம். ஆனா, ஒரே நாளிலே அந்தப் பார்வையும் போயிடுச்சாம். 'ஆண்டவனே, பிறவிக்குருடனா இருந்தப்போ பார்க்க முடியலியேன்னு நான் அவ்வளவா அழுததில்லே. ஆனா இப்போ கண்ணுன்னா என்னன்னு ஒருநாள் காட்டிட்டு மறுநாளே பிடுங்கிட்டியே...'ன்னு அழுதிட்டே இருந்தானாம். அந்த மாதிரி 'ஒருநாள் கண்' எனக்கு வேண்டாங்க சார். உங்க நல்ல மனசுக்கு ரொம்ப நன்றி. ஆனா, ஒண்ணுங்க சார்... நான் நல்லாப் படிச்சுப் பெரிய வேலைக்குப் போயி, இதே ரோட்டுலே கார்லே வரத்தான் போறேன் சார்... நான் வரேன் சார்...''

குப்பென்று எனக்குள் எதுவோ புகுந்து நெருடிய மாதிரி இருந்தது.

எத்தனை மாணவர்களுக்கு நான் பாடம் சொன்னேன். இந்த மாணவி எனக்குச் சொல்லியிருக்கிறாள்!

பெண்ணே, உனக்குள் இத்தனை அறிவா? உனக்குள் இத்தனை ரணமா?

கலங்கிய கண்களை மெல்லத் துடைத்தவாறே பார்த்தேன்.

ஒரு காலை விந்தி விந்தி நடந்தவாறே அந்தச் சிறுமி புத்தக மூட்டையோடு போய்க் கொண்டிருந்தாள்.

மர்மத்தீவில் ஓர் அதிசய உலகம்

இந்த ஆண்டு ஜனவரி முதல் நாள்.

நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் உல்லாசப் பேருந்துகளில் ஏறிச் சென்னை அருகிலுள்ள எண்ணூருக்குச் சென்றார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்து கொண்டேன்.

அங்கு போய் இறங்கியதும், ''அதோ, அதுதான் மர்மத் தீவு. அங்கேதான் அதிசய உலகம் (Wonder Land) அமைக்கப்படுகிறது!'' என்றார்கள்.

''அந்த மர்மத் தீவுக்கு எப்படிப் போவது? குறுக்கே அரைக் கிலோ மீட்டர் தூரத்துக்குக் கடல் நீர் இருக்கிறதே!'' என்று நாங்கள் நினைப்பதற்குள், 4, 5 சாதாரணப் படகுகளும், ஒரு விசைப்படகும் எங்களை ஏற்றிச் செல்ல வேகமாக வந்தன.

படகுகளில் நாங்கள் ஏறி அமர்ந்தோம். மர்மத் தீவை அடைந்தோம்.

'மிக்கி மவுஸ்,' மூன்று இளம் பன்றிகள்' போன்ற கார்ட்டூன் திரைப்படங்களைப் பார்த்திருப்பீர்கள். அவற்றைத் தயாரித்து



• அற்புத உலகம் அமையும் இடம்



• கொடி ஏற்றுகிறார்கள்

உலகப் புகழ் பெற்றவர் வால்ட் டிஸ்னி என்ற அமெரிக்கர். அவர் கலிபோர்னியாவில் 300 ஏக்கர் பரப்பிலே ஒரு நகரம் அமைத்திருக்கிறார். 'டிஸ்னி லாண்ட்' என்பது அதன் பெயர். அது ஓர் அற்புத உலகம். வியப்பூட்டும் பல காட்சிகளை அங்கே காணலாம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா சென்றிருந்த போது தொழிலதிபர் திரு. வி.ஜி. பன்னீர்தாஸ் அந்த டிஸ்னிலாண்டைப் பார்த்தார். நம் நாட்டிலும் அப்படிப்பட்ட ஓர் அதிசய உலகத்தை அமைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

இந்தப் பத்தாண்டுகளாக எங்கெங்கோ இடங்களைத் தேடி, கடைசியாக இந்த மர்மத் தீவைத் தேர்ந்தெடுத்து, இங்கே அதிசய உலகத்தை உருவாக்கி வருகிறார்கள் அவரும் அவருடைய தம்பிகளான சந்தோஷும் செல்வராஜும்.

படகில் இருந்து நாங்கள் இறங்கினோம். உடனே, 18 படிகளில் ஏறினோம். நுழைவாயிலில் இருந்த அந்தப் படிகளையும் தாண்டி உள்ளே சென்றோம்.

முதலில் எங்களுக்குப் புத்தாண்டுச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

பிறகு, பிரபல எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் கொடி ஏற்றினார். கொடியில் அதிசய உலகின் இலச்சினை அழகாகக் காட்சி அளித்தது. உருண்டை வடிவமுள்ள உலகம். உலகத்தின் அடியில் இருபுறமும் அதைத் தாங்கும் இரு கைகள்; உலக உருண்டையின் தலைப்பகுதியில் குங்குமப் பொட்டு.

பிறகு, 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் தலைமையில் கூட்டம் நடந்தது. எல்லோரையும் வரவேற்றுப் பேசிய திரு. பன்னீர்தாஸ், அதிசய உலகில் என்ன என்ன இருக்கும் என்பதை எடுத்துக் கூறினார்:

சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு அரங்கம், திரையரங்கம், கலையரங்கம், பொம்மை உலகம், நீச்சல் குளம், அருங்கலைக் கூடம், மின்சார ரயில், இன்னும் பொழுதுபோக்கப் பல வசதிகள் இருக்குமாம்!

நவீன எலெக்ட்ரானிக் முறையில் பல அமைப்புகள், சூரிய ஒளியைப் பயன்படுத்தும் பல்வேறு வழிவகைகள், விண்வெளி ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விளக்கும் மாதிரிகள் முதலிய அறிவுக்கு விருந்தளிக்கும் அற்புதங்களையும் காணலாமாம்!

வேதங்கள், பைபிள், குர்ஆன்

ஆகிய புனித நூல்களில் வரும் அதிசயங்களையும் நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தப் போகிறார்களாம்!

இவை மட்டுமா?

சொர்க்கம், நரகம் எப்படி இருக்கும் என்பதைக்கூடத் தெரிந்து கொள்ளலாமாம்!

அதிசய உலகின் வரவேற்புப் பகுதியில் கம்ப்யூட்டர் இருக்குமாம். அதன் மூலம், இந்த அதிசய உலகின் பல்வேறு பகுதிகளைப் பற்றியும், இந்தியாவிலுள்ள பல்வேறு சுற்றுலா இடங்களைப் பற்றிய விவரங்களையும் தெரிந்து கொள்ளலாமாம்!

இன்னொன்றையும் திரு. பன்னீர் தாஸ் கூறினார். இந்த அதிசய உலகத்திலிருந்து மாமல்லபுரம், ராமேஸ்வரம், புதுச்சேரி, கொச்சி ஆகிய இடங்களுக்கும் சிறு கப்பல்கள் மூலமாகவும், விசைப்படகுகள் மூலமாகவும் கடற்கரை ஓரமாகப் போய் வரலாமாம்!

இந்த மாபெரும் முயற்சியைப் பாராட்டி, அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும், 'அமுத சுரபி' ஆசிரியருமாகிய டாக்டர் விக்கிரமன், 'பால மித்திரன்' ஆசிரியர் திரு. வாசவன், 'ராணி' ஆசிரியர் திரு. அ. மா. சாமி ஆகியோர் பேசினர்.

படகில் திரும்பி வரும்போது, இந்த 'அதிசய உலகம்' திட்டமிட்டபடி உருவானால், இந்தியாவிலேயே இது ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக விளங்கும் என்றும், தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் என்றும் நண்பர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள்.

"ஆமாம், இந்த அதிசய உலகத்தின் திறப்புவிழா எப்போது நடைபெறும்? நாங்களெல்லாம் எப்போது போய்ப் பார்ப்பது?" என்றுதானே கேட்கிறீர்கள்?

"இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகலாம்" என்கிறார்கள். அதிசய உலகம் காண அதுவரை பொறுத்திருப்போமா!


—நம்பி

சித்திரப் புதிர்-1 விடை

1. ஜப்பான்
2. நீங்களே முயற்சி செய்யலாமே!
3. லால்பகதூர் சாஸ்திரி



4. இப்படி



5. கூர்மாவதாரம் (ஆமை)

என்கிட்ட வாலாட்டாதே!

கூத்தபிரான்

பெரியவர் சிதம்பரம் வீடு கலகலப்பான வீடு. அதற்குக் காரணமே சிதம்பரம், தன் தாய், தம்பி, தங்கைகளுடன் ஒன்றாக வாழ்ந்து வருவதால். சிதம்பரத்துக்கு இரண்டு குழந்தைகள். அவருடைய தம்பிகளுக்கும், தங்கைகளுக்கும் ஆளுக்கு இரண்டு குழந்தைகள்.

சிதம்பரத்தின் இரு ஆண் பிள்ளைகளும் கல்லூரியில் படிப்பவர்கள். தம்பி, தங்கைகளின் குழந்தைகள் உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி என்று படிப்பவர்கள். ஆரம்பப் பள்ளியில் படிக்கும் குழந்தைகள், நடுநிலைப்பள்ளிக் குழந்தைகளுடன்தான் பெரியவர் சிதம்பரம் அன்றாடம் பொழுதுபோக்குவார்.

காலையில் பள்ளி செல்லும் முன்பு அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதும், மாலையில் பள்ளியில் இருந்து அவர்கள் திரும்பியதும், கூடி விளையாடுவதும் சிதம்பரத்தின் வழக்கம். இவர்களில் யாரைக் கண்டிப்பது, யாரைக் கோபிப்பது என்று தெரியாமல் சிதம்பரத்தின் தாய் விழிப்பாள். சிதம்பரத்தின் மனைவியோ "வயசாகியும் இப்படிப் புத்தி போக வேண்டாம்" என்று தினம் சொல்வதுடன் நிறுத்திக் கொள்வாள்.

சிதம்பரத்துக்கு ஈடு கொடுத்து விளையாடும் ஒரு பையனை மட்டும் நாம் இப்போது கவனித்தால் போதும். மற்றவர்கள் கதையை நாமே கற்பனை செய்துகொள்ள முடியும்.

ராஜா. அவன் படிப்பில் கெட்டிக்காரன். மூளை அதிகம். அவன் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை, அன்றே படிப்பான். அவை பற்றிப் பெருமையாகவும், தெளிவாகவும் பேசுவான்.

உதாரணத்துக்கு ஒன்று — அன்று அவனுக்கு மாலை டிபன் மைசூர்பாகும், பாலும் வீட்டில் கொடுத்தார்கள். ராஜா உடனே, மைசூர்பாகை கையில் எடுத்துக் கொண்டு, தன் பாட்டியிடம் சென்று, "பாட்டி, பாட்டி, இது என்ன சொல்லு" என்றான். பாட்டி செய்த பட்சணமாகையால் 'மைசூர்பாகு' என்றாள். "இல்லை. இது திடப் பொருள்" என்றான். பாட்டிக்குப் புரியவில்லை. அன்று அவனுக்கு எது திடப் பொருள்? எது திரவப் பொருள்? என்று பள்ளிக்கூடத்திலே பாடம் நடத்தியிருக்கிறார்கள். அதைச் சொல்லி, சரிபார்த்துக் கொள்ளவே ராஜா இப்படிச் செய்தான்.

இவனுக்குப் போய் 'மூளை கிடையாது, மக்குப் பையன்' என்றெல்லாம் பெரியவர் சிதம்பரம் சொல்லுவார். தினம் ஒரு தடவையாவது அவனை ஆசையுடன் அழைத்து, தலையைத் தொட்டு, "இங்கே, இங்கேதான் ஒண்ணும் கிடையாது! கடவுள் மூளையை வைக்கல்லே!" என்பார். ராஜா "பெரியப்பா... எங்கே உங்க தலையைக் குனியுங்க" என்பான். அவரும் தலை குனிவார். "பெரியப்பா, உங்களுக்கும் வைக்கல்லே," என்பான்.

அவ்வளவுதான். சிதம்பரம் அவனைத் துரத்த இவர் ஓட, அவன் ஓடி, ஒவ்வொரு அறையாக ஒளிய வீடே அமர்க்களப்படும்.

இவர்கள் குடும்பம் பெரிய குடும்பம், ஒன்றாக வாழும் குடும்பம் என்று ஆரம்பத்திலேயே நமக்குப் புரிந்திருக்கும். இவர்கள் வீட்டில் பாலுக்கு என்று ஒரு மாடு வைத்திருந்தார்கள். அழகான கன்றுக்குட்டி ஒன்றும் இருந்தது. தினம் குளித்துவிட்டு வரும்

போது ராஜா, தன் கையில் உள்ள நனைந்த துணிமணிகளை அதன் மீது உதறிவிட்டு வருவான். அது சதா வாலாட்டிக் கொண்டேயிருக்கும். இதைக் கவனித்து வந்த அவன் பெரியப்பாவான சிதம்பரம், "ராஜா! ராஜா! உனக்கு மூளையே கிடையாது. நீ உண்மையாகவே மக்குப் பையன். நான் சொல்றது நிஜம். நீ வேணும்னாலும் நம் வீட்டுக் கண்ணுக்குட்டியைக் கேட்டுப் பாரு" என்றார்.

"போங்க பெரியப்பா, கன்றுக் குட்டி வாயைத் திறந்து எப்படிப் பதில் சொல்லும்? அது வாயில்லாப் பிராணியாக்கும்" என்று தான் படித்தறிந்ததைச் சொன்னான்.


"வாயைத் திறந்து பேசாட்டி என்ன, அது வாலாட்டினாப் போதும். 'ஆமாம்'னு அர்த்தம்." என்றார் சிதம்பரம்.

உடனே ராஜா "ஏன் பெரியப்பா, பதில் சொல்றதுக்குப் பதிலாத்தான் கன்றுக்குட்டி வாலாட்டுங்கறீங்களா?" என்றான் ஆவலுடன்.

"வேற எப்படி முடியும்? வாயில்லாப் பிராணிகள், சைகை மூலமாத் தான் எதையும் சொல்லும். நாமதான் புரிஞ்சுக்கணும். நீ வேணும்னா கேட்டுப் பாரேன்" என்று ராஜாவின் ஆவலை மேலும் தூண்டிவிட்டார் சிதம்பரம்.

உடனே ராஜா கன்றுக்குட்டியிடம் போய், "கன்றுக்குட்டி, கன்றுக்குட்டி, எனக்கு மூளையே கிடையாதா? நான் மக்குப் பையனா? நீ சொல்லு" என்று கேள்வி கேட்டான். உடனே கன்றுக் குட்டி தன் வாலை ஆட்டியது. வாலை ஆட்டிக் கொண்டே நின்றது. சிதம்பரம் குஷியாக, "எப்படி? எப்படி? போதுமா? இப்போ என்ன சொல்றே?" என்று ராஜாவின் தலையை வழக்கம்போல் தடவினார். ராஜா முதலில் திகைத்தான். அழுகையே வந்துவிடும் போல இருந்தது. வேகமாக உள்ளே ஓடினான். தன் அண்ணன் முத்துவிடம், "முத்து, முத்து, எனக்கு மூளையே கிடையாதாம். நான் மக்குப் பையனாம்."

"யாருடா சொன்னது?"



''நம்ம வீட்டுக் கன்றுக்குட்டி.''

''நம்ம வீட்டுக் கன்றுக்குட்டியா!''

''ஆமாம்.''

''அது எப்படிடா பேசும்?''—

''பேசாட்டி என்னடா, வாலாட்டுதே!''

''வாலாட்டித்தா?''

''ஆமாம்டா.''

''உண்மையாயிருக்குமா!''

முத்து ஒரு படி மேலே போய், ''வாயுள்ள நாம வேணும்னு பொய் சொல்லலாம். வாயில்லாதது எப்படிடா பொய் சொல்லும்? எதுக்கும் வாடா, நம்ம நல்லம்மாக்கிட்டே கேட்போம்'' என்றான்.

'நல்லம்மா' — இது குழந்தைகள் தங்கள் பாட்டிக்குச் சூட்டிய அன்புப் பெயர். ராஜாவை அழைத்துக் கொண்டு முத்து, நல்லம்மாவிடம் போனான்.

''நல்லம்மா, நல்லம்மா, ராஜா என்னவோ போலிருக்கான், என்னன்னு கேளுங்களேன்'' என்றான் முத்து.

''ஏண்டா, என்னாச்சு உனக்கு? ஏன் என்னவோ போலயிருக்கே? என்ன நடந்தது?'' பாட்டி தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டே கேட்டாள்.

''நல்லம்மா, நல்லம்மா, கன்றுக்குட்டி பொய் சொல்லாதே! அது சொன்னா நிஜமா இருக்குமா?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்கலானான் ராஜா.

''கன்றுக்குட்டியா!''

''நம்ம வீட்டுக் கன்றுக் குட்டி தான்.''

நல்லம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னடா சொல்றே? உங்க பெரியப்பன்கிட்ட போயி இதையெல்லாம் கேளு. அவன் தான் உனக்கு லாயக்கு'' என்றாள் நல்லம்மா.

''பெரியப்பாதான் சொன்னாங்க'' என்றான் ராஜா.

''என்னடா சொன்னான் உன் பெரியப்பன்?''

''எனக்கு மூளை கிடையாதாம். நான் மக்குப் பையனாம்.''

''இதைத் தினமும்தான் சொல்றான்.''

''அதை இன்னிக்கு நம்ம வீட்டுக் கன்றுக் குட்டிக்கிட்டே என்னையே விட்டு, கேட்டுத் தெரிஞ்சுக்கச் சொன்னாரு.''

''நீ என்ன செய்தே?''

''நான் கன்றுக்குட்டிகிட்டப்போயி, 'கன்றுக்குட்டி, கன்றுக்குட்டி, எனக்கு மூளையே கிடையாதா? நான் மக்குப் பையனா'ன்னு கேட்டேன்.''

''கன்றுக்குட்டி உடனே வாயைத் திறந்து பதில் சொல்லிச்சா?''

''இல்லையே! வாலாட்டிச்சு, வாலாட்டிச்சு.''

''வாலாட்டிச்சா?''

''வாயில்லாப் பிராணி, பின்னே எப்படிப் பதில் சொல்லும்?'' என்றான் ராஜா கவலையாக.

''ஆமாம், கன்றுக்குட்டி வாலாட்டிப் பதில் சொல்லும்னு உனக்கு யாருடா சொன்னாங்க?''

''பெரியப்பாதான்'' — நல்லம்மா யோசித்தாள்.

''அப்படியா, நீ என்ன செய்யறே? உன் பெரியப்பாவை அழைச்சுக்கிட்டுப் போயி, 'பெரியப்பாவுக்கு மூளையே கிடையாது, மக்குப் பெரியப்பாதானே'ன்னு கேளு.''

''கேட்டா?''

''கேளுடா, அப்புறம் பாரு'' என்றாள் நல்லம்மா.

உடனே ராஜா, ''முத்து, வாடா போகலாம்'' என்று முத்துவை இழுத்துக்கொண்டு சென்றான். பெரியப்பா சிதம்பரம் ஆபீஸுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்.

''பெரியப்பா, எங்கூடக் கொஞ்சம் வறீங்களா?'' என்று கேட்டான் ராஜா.

''எங்கேடா?''

''வாங்களேன்; சொல்றேன்.''

''சரி'' என்று ராஜாவுடன் பெரியப்பா புறப்பட்டார். பின்னால் முத்துவும் போனான். பெரியப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ராஜா பெரியப்பாவை வீட்டின் கொல்லைப்புறத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கே கன்றுக்குட்டியைக் கட்டி வைத்திருந்தார்கள். ''அதைப் பார்த்து — 'இது என்ன பெரியப்பா?'' என்று கேட்டான். 'மக்குப் பையா, உனக்கு இது

பழக்கம் பற்றிப்
பல தேசத்துப் பழமொழிகள்

❋ பழக்கங்கள் முதலில் சிலந்தி வலை போல் மென்மையாக இருக்கின்றன. பிறகு, இரும்புக் கம்பிகளாகி விடுகின்றன. (இங்கிலாந்துப் பழமொழி)

❋ மனிதன் பழக்கங்களாலான ஒரு பிராணி. (ஜெர்மன் பழமொழி)

❋ பழக்கமே பின்னால் குணமாக அமையும். (லத்தீன் பழமொழி)

❋ கெட்ட பழக்கம் முதலில் யாத்திரிகனைப் போல வரும்; பிறகு, விருந்தாளியாகி, முடிவில் அதுவே யஜமானனாகி விடும். (அமெரிக்கப் பழமொழி)

❋ பழக்கம் என்ற அங்கியை நாம் சாகும் வரை அணிகிறோம். (ரஷ்யப் பழமொழி)

❋ பழக்கம் இல்லாமல் பல் துலக்கவும் முடியாது. (இலங்கைப் பழமொழி)

❋ ஓடிப் பழக்கமுள்ள கால் ஒடுங்காது. (அமெரிக்கப் பழமொழி)

❋ சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம். (தமிழ்நாட்டுப் பழமொழி)

❋ ஒரு டஜன் பழக்கம் ஒரு வீசை அறிவுக்குச் சமம். (இங்கிலாந்துப் பழமொழி)

❋ மனிதர்களின் இயற்கை ஒரே மாதிரிதான். அவர்களுடைய பழக்கங்களே அவர்களை வெகுதூரம் பிரித்து விடுகின்றன. (சீனப் பழமொழி)

❋ பழக்கம் என்பது (ஐம்புலன்களுக்கு மேல்) ஆறாவது புலனாகும். அது மற்ற புலன்களையும் அடக்கி மேலெழுந்து விடும். (அரேபியப் பழமொழி)

❋ முட்டை திருடுபவனே பின்னால் ஒட்டகம் திருடுவான். (பாரசீகப் பழமொழி)

-என். சித்தாலட்சுமி



கூடத் தெரியாதா? — கன்றுக்குட்டி" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் சிதம்பரம்.

"இப்போ பாருங்க. கன்றுக்குட்டி, கன்றுக்குட்டி, உங்கிட்டே ஒண்ணு கேட்கிறேன். வாலாட்டிப் பதில் சொல்லணும்."


"என்னடா இதெல்லாம்? எனக்கு ஆபீஸுக்கு நேரமாகுதுடா."

"எனக்குக் கூடத்தான் பள்ளிக்கு நேரமாகுது. இருங்களேன்" என்று சிதம்பரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு, "கன்றுக்குட்டி, கன்றுக்குட்டி, நான் கேட்கிறதுக்கு வாலாட்டி, பதில் சொன்னாப் போதும். பெரியப்பாவுக்கு மூளையே கிடையாது. மக்குப் பெரியப்பா தானே?" என்று சொல்லி முடிப்பதற்குள், கன்றுக்குட்டி தன் வாலைப் பல முறை வேகமாகவே ஆட்டியது.

இதை உள்ளிப்பாகப் பார்த்த முத்து, "நல்லம்மா, நல்லம்மா, ராஜா கேட்டதுக்கும் கன்றுக்குட்டி வாலாட்டிடுச்சு" என்று கத்திக் கொண்டே வீட்டுக்குள் ஓடினான். ராஜாவும், "ஹை, வாலாட்டிடுச்சே!" என்று கைகொட்டிக் குதித்தான். அப்போது சிதம்பரத்தின் தாயாரான நல்லம்மாவை முத்து அழைத்து வந்தான். தன் அம்மா சிரிப்பதைக் கண்டதும், 'இது தன் தாயாரின் வேலையாகத் தான் இருக்கும்' என்று எண்ணியபடி, ராஜாவின் தலையைத் தடவிவிட்டு, கன்றுக்குட்டியை ஒரு முறை முறைத்து விட்டுச் சிதம்பரம் புறப்பட்டார்.

ராஜா, கன்றுக்குட்டியைப் பார்த்தான். அது சட்டென்று கீழே படுத்துக் கொண்டது. அதன்பிறகு வாலை ஆட்டவில்லை. "ஓஹோ, நிற்கும் நேரத்தில் மட்டும் வாலை ஆட்டுகிறது. அதுவும் ஏன்?" என்று சிந்திக்கத் தொடங்கினான். அவன் காது அருகில் அப்போது ஒரு ஈ பறந்து வந்தது. தன் கையால் அதை விரட்டினான். "அப்போ கன்றுக்குட்டி — அதுக்குக் கை கிடையாது. வால்தான் அதுக்குக் கையோ!" என்று ராஜா யோசிக்கத் தொடங்கினான்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543) Editor: K. Rajendran



ஐன்ஸ்டீன்

பிறந்த நாள் : 14-3-1879 மறைந்த நாள் : 18-4-1955

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka



Topads/PFP/0285